பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 23 திங்கட்கிழமை (09.11.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 348

# வடக்கில் பாதுகாப்பு வலயங்களை அகற்றும் பேச்சுக்கே இடமில்லை

## இந்தியா சென்றிருக்கும் அமைச்சுச் செயலாளர் தகவல்

கொழும்பு, நவம்பர்09

தமிழர் பிரதேசங்களில் - குறிப்பாக வடக்கில் அதியுயர் இராணுவப் பாதுகாப்பு வலயங்கள் எக்காரணம் கொண்டும் அகற்றப்பட மாட்டா என்று இலங்கை அரசு நேற்றுத் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

இலங்கை அரசின் சார்பில் இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் அனர்த்த நிவாரண மற்றும் மனித உரிமைகள் அமைச்சுச் செயலாளர் ரஜீவ விஜேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச் சுடர்

**உள்ளே**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான விஞ்ஞானம் -I, ஆங்கிலம்-II பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்கள்.

**நாளை**

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கான தமிழ்மொழியும் இலக்கியமும் -I, II, III பாடத்துக்கான மாதிரி வினாத்தாள்கள்.

## புலி உறுப்பினர்கள் இருவர் வெடிபொருள்களுடன் வவுனியா தோணிக்கல் பகுதியில் கைதானதாக அறிவிப்பு

### இராணுவப் பொருள்களும் மீட்கப்பட்டனவாம்

கொழும்பு, நவ. 09

வவுனியாவில் வைத்து புலி உறுப்பினர்கள் இருவரை, வெடிபொருள்களுடன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு தாங்கள் கைதுசெய்துள்ளனர் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

வவுனியாவிலுள்ள தோணிக்கல் பிரதே

(20ஆம் பக்கம் பார்க்க)

## சட்டவிரோத குடியேற்றவாசிகள் குறித்துப் பேச ஆஸி. வெளியுறவு அமைச்சர் இங்கு விஜயம்

கொழும்பு, நவ. 09

அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்க முயலும் இலங்கையர்கள் விவகாரம் குறித்து அரசுடன் பேச்சு நடத்த அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றார்.

அவர் அரசுத் தரப்பினருடன் இலங்கையர்களின் அவுஸ்திரேலியாவுக்கான சட்டவிரோதப் பயணங்களை எதிர்காலத்தில் முறியடிக்கின்றமை குறித்தும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்றபோது இந்தோனேஷியக் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இலங்கையர்கள் குறித்தும் முக்கியமாக பேசுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி. சித்திரவதை செய்யப்படவில்லை

### இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

கொழும்பு, நவ. 09

விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகார பொறுப்பாளரான குமரன் பத்மநாதன், பனாகொட முகாமில் வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என வெளியான தகவலை படைத்தரப்பு மறுத்துள்ளது.

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸி. அகதிகள் இங்கு திரும்பி வந்தால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் சேனக சொல்கிறார்

கொழும்பு, நவ. 09

ஆஸ்திரேலியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைய முயன்ற இலங்கையர்கள் 78 பேரில் அநேகமானவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் பட்சத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று ஆஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் சேனக வலகம்பாய நாகுக்காகத் தெரிவித்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## அதிக மழைவீழ்ச்சியால் நுவரெலியாவில் பனிமூட்டம்

கொழும்பு, நவ.09

அதிக மழைவீழ்ச்சி காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பனிமூட்டம் சூழ்ந்து காணப்படுகின்றது.

இதன் காரணமாக நுவரெலியா, கண்டி

(20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் முதற்தடவையாக பன்றிக்காய்ச்சலுக்கு ஒருவர் பலி

கொழும்பு, நவ.9

இலங்கையில் பன்றிக்காய்ச்சல் நோயால் முதற் தடவையாக ஒருவர் இறந்துள்ளார் என்று சுகாதார அமைச்சு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

16 வயதுச் சிறுவன் ஒருவனே கடந்த வியாழக்கிழமை கண்டி வைத்தியசாலையில் இந்நோயால் இறந்துள்ளார் என்று தொற்று நோய்கள் தடுப்புப் பிரிவுத் தலைவர் டாக்டர் பி.பாலிஹவதன தெரிவித்துள்ளார். இச்சிறுவன் தொடர்ச்சியாக நெஞ்சுவலியால் பீடிக்கப்பட்டிருந்தார் என்றும் பின்னர் பன்றிக்காய்ச்சலால்

(20ஆம் பக்கம் பார்க்க)

உங்கள் உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உங்களுக்காக

உங்களுக்கு

அருகில்

இப்போது

நெல்லியடியில்....

வடமராட்சி வாசகர்கள், விளம்பரதாரர்கள், விற்பனை முகவர்கள் மற்றும் செய்தியாளர்களின் நன்மைகருதி உதயன் உப பணிமனை 14.11.2009 முதல் பிரதான வீதி, நெல்லியடி (மக்கள் வங்கி முன்பாக) எனும் முகவரியில் திறந்துவைக்கப்படுகிறது.

## கிளிநொச்சி, முல்லைத்தீவைச் சேர்ந்த அகதிகள் வவுனியாவில் உறவினர்களுடன் வசிக்க அனுமதி

வவுனியா, நவ.9

வவுனியா செட்டிகுளத்திலுள்ள 'மெனிக் பார்ம்' அகதி முகாம்களில் தங்கியுள்ள கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வவுனியாவில் உள்ள தமது உறவினர்களின் வீடுகளில் தற்காலிகமாகத் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இதுவரை காலமும் அகதிகள் தத்தமது சொந்த இடங்களிலேயே படிப்படியாக மீள் குடியேற அனுமதி வழங்கப்பட்டுவந்தது.

(19ஆம் பக்கம் பார்க்க)

ரூ. 2,000/- ற்கு இலவசமாக பேசுங்கள்

Dialog லான்ட் லைன் தொலைபேசியில் சந்தோஷமாக பேசுங்கள்

யாழ்நகரில் Dialog லான்ட் லைன் தொலைபேசி இணைப்பினை ரூ. 5,999/- ற்கு கொள்வனவுசெய்து ரூ. 2,000/- பெறுமதியான அழைப்புகளை இலவசமாக பெறுங்கள்.

அனைத்து Dialog வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்

Fixed Line TRC/DBN/09/001(p)

Dialog

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கப்பலில் தத்தளிக்கும் இலங்கையர்களில் சிலருக்கேனும் அரசியல் தஞ்சம் வழங்குக

## ஆஸி. அரசிடம் 'கிறீன்கட்சி' கோரிக்கை

கொழும்பு, நவ. 09

இந்தோனேஷியக் கடலில் கடந்த 20 நாள்களாக அந்தரித்துக்கொண்டிருக்கும் இலங்கையர்களில் சிலருக்கேனும் ஆஸ்திரேலிய அரசு கட்டாயம் அரசியற் தஞ்சம் வழங்கவேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் கிறீன் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கிறீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான கெய்த் லொக்கேய் ஆஸ்திரேலிய அரசுக்கு இக்கோரிக்கையை முன்வைத்தார். ஆஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமான முறையில் பிரவேசிக்க முயன்றபோது இந்தோனேஷியக் கடலில் வைத்து இலங்கையர்கள் 78 பேரும் ஆஸ்திரேலிய கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

அவர்கள் இந்தோனேஷியக் கடலில் கடந்த மூன்றுவார காலமாக ஆஸ்திரேலியாவின் ஓசியானிக் வைகிங் என்கிற சுங்கக் கப்பலில் உள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் அரசியற் தஞ்சம் கிடைக்கும்வரை கப்பலைவிட்டு இறங்கப் போவதில்லை என்று பிடிவாதம் பிடிக்கின்றனர்.

இந்த நிலையிலேயே இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்துள்ள போதிலும் அந்நாட்டு அரசு தமிழர்களுக்கெதிரான அடக்குமுறை நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துக்கொண்டிருப்பதாலேயே இலங்கைத் தமிழர்கள் சட்டவிரோதமாகவேனும் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய பயணம் மேற்கொள்கின்றனர் என்று அவர் குறிப்பிட்டார்.

அவர் இக்கோரிக்கையை வலியுறுத்தி ஆஸ்திரேலிய குடிவரவுத்துறை அமைச்சர், ஆஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஆகியோருக்கு மின்னஞ்சல் செய்திகளை அனுப்பி உள்ளார். (சி)

# ஏறாவூரில் இளம்பெண் கழுத்து வெட்டிக் கொலை!

ஏறாவூர், நவ.09

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிராகேணி - சவுக்கடி எல்லை வீதி மரமுந்திரிகைத் தோட்டத்திற்குள் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மீராகேணி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாயான செய்யது முகம்மது நபீலா (வயது - 30) என்பவரே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் குடும்பத்தாருடன் தனது வீட்டில் இருந்தவேளை கடத்தி வரப்பட்டுக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும், மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன எனவும் ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்படும் 78 இலங்கையரையும் நாடு கடத்துக!

## அந்நாட்டு தேசியக் கட்சி கோரிக்கை

கொழும்பு, நவ. 09

ஆஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்றபோது அந்நாட்டு கடற்படையினரால் தடுத்து நிறுத்தப்பட்ட இலங்கையர்கள் 78 பேரையும் உடனடியாக நாடு கடத்த வேண்டும் என்று ஆஸ்திரேலியாவின் தேசிய கட்சி கோரியுள்ளது.

அக்கட்சியின் செனற் சபை தலைவரான பர்னபி ஜோய்ஸ் இக்கோரிக்கையை ஆஸ்திரேலியா அரசுக்கு நேற்று விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியப் பிரதமர் இவர்களை உடனடியாகக் கொழும்புக்கு கப்பலில் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் இவர்களை திருப்பி அனுப்புவது தொடர்பில் இலங்கைத்தரப்பினருடன் பேச வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளார்.

# நாளாந்தம் 14,400 கிலோ கடலுணவு தெற்கே அனுப்பப்படுகின்றது

வண்ணை, நவ.9

நாளாந்தம் குளிரூட்டி வாகனங்கள் மூலம் 14,400 கிலோ கடலுணவு வகைகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குளிரூட்டி வாகனங்களுக்கு அதிகப்படியான ஏற்றுமதிக் கூலி வழங்க நேர்வதால் கடலுணவு வகைகளின் விலைகளாலேயே அவற்றைச் சரிக்கட்ட நேர்வதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, 1984 ஆம் ஆண்டில் குடாநாட்டுப் பகுதிகளில் 14 குளிர்க்கட்டித் தொழிற்சாலைகள் இயங்கி வந்ததாகவும் இப்பொழுது தொழில்வளம் அதிகரித்த இடத்து அதற்கேற்றப குளிர்க்கட்டி உற்பத்தி நிலையங்கள் இன்மையால் குளிரூட்டி வாகனங்களுக்கு அதிக ஏற்றுக் கூலிகள் வழங்க நேர்வதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (1-160)

# புதிய கடவுச்சீட்டு இனி நவீன தொழில்நுட்பத்தில்

கொழும்பு, நவ. 09

கடவுச்சீட்டுகளில் இடம்பெறும் மோசடிகளைத் தடுக்கும் நோக்கில் நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி புதிய முறையில் கடவுச்சீட்டு தயாரிக்கப்படவிருப்பதாக குடிவரவு- குடியகல்வு ஆணையாளர் பி.பி. அபயகோண் தெரிவித்தார்.

புதிதாக வழங்க உத்தேசித்துள்ள கடவுச்சீட்டுகளில் அதன் உரிமையாளர்களின் கைவிரல் அடையாளம் உட்பட மேலதிக தகவல்களும் பதிவுசெய்யப்படும்.

இதன் மூலம் ஆள்மாறாட்ட மோசடிகளைத் தடுக்கமுடியும் என ஆணையாளர் சுட்டிக்காட்டினார். தற்போது நாளாந்தம் சராசரியாக 10 கடவுச்சீட்டு மோசடிகள் குறித்து தனது திணைக்களத்துக்குத் தெரியவருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முன்னர் எப்போதும் இல்லாத வகையில் தற்சமயம் நாளாந்தம் 2ஆயிரத்து 500இற்கு மேற்பட்ட புதிய கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்படுகின்றன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிக்கு அரசியல் தலைமையின் ஆதரவே காரணம்

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 09

அரசியல் தலைமையின் ஆதரவே தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றிக்குப் பிரதான பலமாக அமைந்திருந்தது -என்று இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

படையினர் இராணுவ மற்றும் சிவில் சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுக்கத்துடன் செயற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்கு அரசுக்கு படையினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ள்ளார்.

பொதுமக்களின் இதயங்களை வென்றெடுப்பதுடன், அவர்களது சுயகௌரவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தில் சுயகௌரவத்தைப் பாதுகாப்பதற்கு அனைத்துப் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படையினரின் அடிப்படைச் சம்பளத்தை ஆயிரம் ரூபாவினால் அதிகரிக்கவும், வடக்குக் கிழக்கில் பணியாற்றிய படையினர்களுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவுகளை ஏனையோருக்கும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மைக்கல் ஜக்ஸனின் திரைப்படம்: 14 நாள்களில் ரூ. 2,160 கோடி வசூல்

லொஸ் ஏஞ்சல்ஸ், நவ. 09

மைக்கல் ஜக்ஸனின் இசை நிகழ்ச்சிகள் அடங்கிய திரைப்படம் இரு வாரங்களில் இலங்கை நாணயப்படி 2 ஆயிரத்து 160 கோடி ரூபாவை வசூலித்துள்ளது.

மைக்கல் ஜக்ஸன் இறப்பதற்கு முன்னர் லண்டனில் ஓர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவிருந்தார். இதற்காக அவர் ஒத்திகை செய்த காட்சிகளும், இதற்கு முன்னர் அவர் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சிகளும், இத்திரைப்படத்தில் அடங்கியுள்ளன.

இந்த திரைப்படத்துக்கு 'திஸ் இஸ் இட்' என பெயரிடப்பட்டுள்ளது. இப்போது உலகம் முழுவதும் திரையிடப்பட்டுவருகிறது.

இந்தப் படம் கடந்த 2 வாரங்களில் மட்டும் 2 ஆயிரத்து 160 கோடி ரூபாய் வசூலித்துள்ளது. இதில் அமெரிக்காவில் மட்டும் சுமார் 660 கோடி ரூபாய் வசூலானது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ஜப்பானில் மிகப் பெரிய அளவில் வசூலாகியுள்ளது. அங்கு 270 கோடி ரூபாய் வசூலானது. பிரிட்டனில் 165 கோடி ரூபாய் வசூலானது. இந்தத் திரைப்படம் கடந்த ஒக்ரோபர் மாதம் 28 ஆம் திகதி வெளியானது. அசலாக இந்தப் படத்தை 2 வாரங்களுக்கு மட்டுமே திரையிடப்பட திட்டமிடப்பட்டிருந்தது.

# அமெரிக்காவில் மூடப்பட்ட வங்கிகளின் எண்ணிக்கை 120

நியூயோர்க், நவ. 09

அமெரிக்க வங்கித்துறையின் வீழ்ச்சி தொடர்கிறது. சில வாரங்களுக்கு முன் மூடப்பட்ட மொத்த வங்கிகளின் எண்ணிக்கை 103 என்ற நிலை இருந்தது. இப்போதோ அது 120 ஆக உயர்ந்துவிட்டது.

2009 ஆம் ஆண்டில் மட்டும் 120 வங்கிகள், வீழ்ச்சியைச் சந்தித்து மூடப்பட்டுள்ளன. அதாவது ஒவ்வொரு மாதமும் சராசரியாக 10 வங்கிகள் அமெரிக்காவில் மூடப்பட்டுள்ளன.

இந்த வாரம் மட்டும் 5 வங்கிகள் மூடப்பட்டுள்ளன. அவையாவன:- யுனைட்டட் செக்யூரிட்டி வங்கி, ஹோம் பெடரல் சேவிங்ஸ் வங்கி, ப்ராஸ்பெரன் வங்கி, கேட்வே ஆப் செயின்ட் லூயிஸ், யுனைட்டட் கமர்ஷியல் வங்கி.

# கார்ச்சாரதி அனுமதிக்கான தேர்வில் 950 முறை வென்ற கொரியப் பெண்



சியோல், நவ. 09

தென் கொரியாவைச் சேர்ந்த ஷா சா-சூன்என்னும் பெண்ணொருவர் கார் ஓட்டுவதற்காக அனுமதிப் பத்திரம் பெறுவதற்கான பரீட்சையில் 950 ஆவது தடவைதான் வெற்றி பெற்றுள்ளார்.

அதுவரை சளைக்காமல் பரீட்சை எழுதி வந்துள்ளார். தேர்வுக் கட்டணமாக மாத்திரம் இவர் இலங்கை நாணயப்படி 6 இலட்சத்து 30 ஆயிரம் ரூபா செலவிட்டுள்ளார். இவருக்கு வயது 68.

தென் கொரியாவைச் சேர்ந்த இப்பெண் கார் ஓட்டுவதற்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு விரும்பினார். இதற்காக இவர் விண்ணப்பித்தார். இதைப் பெறுவதற்காக எழுத்து தேர்வில் தேர்ச்சிப் பெறவேண்டும். இந்தத் தேர்வில் 100 இற்கு 60 மதிப்பெண் பெற்றவர்கள் மட்டுமே தேர்ச்சி பெறமுடியும்.

இந்தத் தேர்வை முதல் முறையாக எழுதியபோது இப்பெண் தோல்வியடைந்துவிட்டார். இரண்டாவது முறையாக மீண்டும் தேர்வு எழுதினார். இந்த முறையும் தோல்வி கண்டுவிட்டார். மீண்டும் எழுதினார். இப்படி இவர் நான்கு ஐந்து தடவைகள் அல்ல, 949 தடவைகள் எழுதிவிட்டார். வெற்றி என்பது இவரை விட்டு விலகியே இருந்தது.

கடைசியாக 950 ஆவது முறையாக இவர் இந்தத் தேர்வை எழுதினார். அப்போதுதான் இவரால் வெற்றி தேவதையை தரிசிக்க முடிந்தது. முதல் முறையாக இவர் தேர்வுக்கு 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 ஆம் திகதி தோற்றினார். அது முதல் தினமும் இவர் பரீட்சை எழுதி வந்துள்ளார். கடைசியில் இப்போதுதான் வெற்றி பெற முடிந்துள்ளது.

ஒவ்வொரு முறை தேர்வு எழுதும்போது தேர்வுக் கட்டணம் செலுத்தவேண்டும். இவர் மட்டும் தேர்வுக் கட்டணமாக 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் பணம் கட்டியிருக்கிறார்.

தென்கொரிய வாகனச் சாரதி அனுமதிப்பத்திர முகவர் நிறுவனம் இத்தேர்வை நடத்துகிறது. 50 நிமிடங்கள் எழுத்து மூலமான இப்பரீட்சை நீடிக்கும். பல்வகையான 50 கேள்விகளுக்குப் பதில் எழுதவேண்டும். இவை வீதி விதிமுறைகள், கார் பராமரிப்பு ஆகியவை சம்பந்தப்பட்டவையாக இருக்கும்.

950 ஆவது பரீட்சையில் வெற்றியீட்டியுள்ள ஷா சா-சூன் வெற்றிக்களிப்பில் திளைத்துள்ளார். இவர் உள்ளூர் பத்திரிகையொன்றுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில், ''மரக்கறிகளையும், இதர பொருள்களையும் வாகனமொன்றில் விற்பனைக்குக் கொண்டுசெல்வதற் காகவே இந்த பத்திரத்தைப் பெற முயன்று வந்துள்ளேன்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''உங்கள் லட்சியக்கனவை விட்டுவிடாதீர்கள். என்னைப்போல அதில் உறுதிப்பாடாக இருங்கள். திறமையைக் கட்டியெழுப்பி வெளிப்படுத்துங்கள்'' என்றும் இவர் தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவில் 82 லட்சம் பேர் வேலையின்றித் திண்டாட்டம்

வாஷிங்ரன், நவ. 09

அமெரிக்காவில் வேலை இல்லாமல் தவிப்பவர்களின் எண்ணிக்கை 82 லட்சமாக உள்ளது. வேலை இல்லாத் திண்டாட்டத்தின் வீதம் 10.2 சதவீதமாக உயர்ந்துள்ளது. கடந்த ஒக்ரோபர் மாதம் மட்டும் ஓர் லட்சத்து 90 ஆயிரம் பேர் வேலை இழந்தனர்.

கடந்த 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் பொருளாதாரப் பின்னடைவு ஆரம்பமாகியது. அது முதல் வேலை இல்லாமல் தவிப்பவர்களின் எண்ணிக்கை 82 லட்சம் ஆனது. இது கடந்த 26 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகம் ஆகும்.

அனைத்து அமெரிக்கர்களுக்கும் வேலை வாங்கிக் கொடுக்காமல் நான் ஓயமாட்டேன் என்று ஜனாதிபதி ஒபாமா சவால் விட்டிருக்கிறார். வேலை இல்லாதவர்களுக்கான சலுகைகளை நீடிக்க சட்டம் கொண்டுவரப்படும் என்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு வரி குறைப்பு செய்யப்படும் என்றும் ஒபாமா கூறியுள்ளார்.


மதன் எலக்ரோனிக்ஸ்



✱ கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தை முன்னிட்டு, மிகக் குறைந்த விலையில் நீண்ட உத்தரவாதத்துடன் Sony Japan T.Vகள் விற்பனையில்

(7000/= வில் இருந்து)

✱ Japan Amp மற்றும் Home தியேட்டர் சிஸ்ரம்......

✱ T.V கொள்வனவு செய்யும் போது DVD Player ஒன்று, விசேட விலைக்கழிவில் .........

தொடர்பு: சுதுமலைச் சந்தி மானிப்பாய்.
0777448668, 0217901574

(90772)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூட்டமைப்பின் களத்துக்குள் பந்து!

மிக விரைவில் நடத்தப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தனது கருத்து நிலைப்பாட்டை எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிகராகத் தென்னிலங்கை பௌத்த - சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கும், வரவேற்பும் பெற்ற மற்றொரு நபராக முப்படைகளின் சிரேஷ்ட அதிகாரியான ஜெனரல் சரத் பொன்சேகா திகழ்கின்றார்.

அத்தகைய ஜெனரல் பொன்சேகாவை எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக நிறுத்துவதற்குத் தாம் எதிர்ப்பில்லை என்று ரணில் கூறிவிட்டார். ஆனால் அதற்கு அவர் முக்கியமான ஒரு நிபந்தனையையும் முன்வைத்திருக்கின்றார். பொது வேட்பாளராக பொன்சேகாவை நிறுத்தும் முடிவுக்குத் தாம் இணங்குவதாயின், அந்தத் தீர்மானத்துக்கு மற்றைய இரு பிரதான எதிர்க்கட்சிகளான ஜே.வி.பியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட ஆதரவு தரவேண்டும் என்பதே அவரது அந்த நிபந்தனையாகும்.

ஐ.தே.கட்சியைச் சாராத ஒருவர் எதிரணியின் பொது வேட்பாளராக அறிவிக்கப்பட்டால், அதனை ஏற்பதற்குத் தங்களுக்கு ஆட்சேபனை ஏதும் இல்லை என்று ஏற்கனவே ஜே.வி.பி. அறிவித்து விட்டதால், பொன்சேகாவைப் பொது வேட்பாளராக நிறுத்தும் எத்தனத்துக்கு ஜே.வி.பி.முடக்குப் போடாது என்பது எதிர்பார்க்கக் கூடியதே.

இனி அடுத்தது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. ஆக, பொன்சேகாவை எதிரணியின் பொது வேட்பாளராக நிறுத்தலாமா என்ற முடிவைத் தீர்மானிக்கும் விவகாரத்தை மெல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் களத்துக்குள் தட்டிவிட்டு விட்டுத் தள்ளிநின்று வேடிக்கை பார்க்கின்றார் ரணில் விக்கிரமசிங்க. தமிழ்க் கூட்டமைப்பு எதிரணியின் பொது வேட்பாளராக ஜெனரல் சரத் பொன்சேகாவை நிறுத்துவதற்கு இணங்கினால் சரி என்ற மாதிரிக் கருத்தை முன்வைத்துப் பந்தைக் கூட்டமைப்பின் களத்துக்குள் தள்ளிவிட்டிருக்கின்றார் அவர். இந்தப் பந்தைக் கூட்டமைப்பு எப்படி விளையாடப் போகின்றது என்பதுதான் இன்றைய கேள்வியாகும். இந்த விடயத்தில் உடனடியாக அந்தப் பந்தை விளையாட வேண்டிய - அல்லது இந்த விடயத்துக்குப் பதில் கூறவேண்டிய - பொறுப்பு தமிழ்க்கூட்டமைப்புக்கு இல்லை என்பது உண்மைதான்.

முதலில், ஜனாதிபதித் தேர்தல் பற்றிய அறிவிப்பு வரவேண்டும். அதன் பின்னர், அத் தேர்தலில் எதிரணியின் பொதுவேட்பாளராகக் களமிறங்குவதற்கான தமது சம்மதத்தை ஜெனரல் பொன்சேகா வெளிப்படையாகக் கோடிகாட்ட வேண்டும். அதன் பின்னர், அத்தேர்தலில் போட்டியிடத் தகுதியுள்ளவராகத் தம்மை மாற்றிக்கொள்ளும் விதத்தில், படைத்துறைச் சேவையிலிருந்து ஜெனரல் பொன்சேகா வெளியே வரவேண்டும்.

இவ்வளவும் நடந்தேறிச் சாத்தியமாகும் வரையில் இவ்விடயத்தில் பதிலளிக்க வேண்டிய கடப்பாடு ஏதும் கூட்டமைப்புக்கு இல்லை என்பது சரிதான்.

எனினும், இவை எல்லாம் நடந்தேறினால் இவ்விடயத்தில் தனது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிக்கவேண்டிய இக்கட்டு கூட்டமைப்புக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது இலங்கையின் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் வாய்ப்பு சிறுபான்மையினரான தமிழர்களுக்குக் கிட்டியது. ஆனால் அதைத் தமிழர்கள் பயன்படுத்தவில்லை. பயன்படுத்த முடியாமல் போய்விட்டது - புலிகள் அப்போது எடுத்த முடிவினால்!

இப்போதும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவா அல்லது ரணில் விக்கிரமசிங்கவா என்ற ரீதியில் - கடந்த முறை போன்று - போட்டி வருமானால் இதில் தமிழர்களுக்கு முடிவெடுக்க ஏதும் இருக்காது என்பது தெளிவு. சிங்களவர்களே தங்களின் ஜனாதிபதியை சுலபமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். அதில் சந்தேகப்படுவதற்கும் எதுவும் இருக்காது.

ஆனால் விடுதலைப் புலிகள் மீதான இராணுவ வெற்றிக்கான பொறுப்பில் உரிமை கோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவா அல்லது இராணுவத் தளபதியாகவிருந்த ஜெனரல் பொன்சேகாவா அடுத்த ஜனாதிபதி என்று - இருவருக்கும் இடையில் நேரடியாக - போட்டி வருமானால், மீண்டும் ஒரு தடவை இவ்விவகாரத்தில் முடிவைத் தீர்மானிக்கும் பொறுப்பு சிறுபான்மையினரான தமிழ், முஸ்லிம் மக்களின் கைகளில் விழும் என்பது திண்ணம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் களத்தில் போட்டியிடுகின்றவர் யார் என்பதைத் தீர்மானிக்கும் வாய்ப்புத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் இப்போது பகுதியாகவே விழுந்திருக்கின்றது என்றால், அப்படிப் போட்டியிடுபவர் முன்னாள் இராணுவத் தளபதியே என்று தீர்மானிக்கப்படும்போது, அடுத்த ஜனாதிபதி யார் என்பதை முடிவு செய்யும் முழு விடயமும் தமிழர் உட்பட்ட சிறுபான்மையினர் கைகளிலேயே வீழும் என்பது எதிர்பார்க்கப்படக்கூடியதே.

ஆனாலும், இதற்கு முன்னர் முள்ளிவாய்க்கால் வரை பல இடங்களில் அரங்கேறிய பல அட்டூழியங்களுக்கு - அட்டகாசங்களுக்கு - தமிழ் மக்களுக்குப் பதில் கூறவேண்டியவராக ஜெனரல் சரத் பொன்சேகா உள்ளார் என்பதும் மறக்கற்பாலதல்ல.

வெள்ளைக் கொடியோடு சமாதானம் பேச வந்தவர்களை வேட்டு வைத்துக் கொன்ற கொடூரம் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்தெல்லாம் தமிழர்கள் பேசி, முடிவு காண வேண்டியிருக்கின்றது.

இவற்றின் பின்னணியில்தான் தமிழர் தரப்பு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - காத்திரமான முடிவை எடுக்கவேண்டி நேரும்.

எது, எப்படியென்றாலும் இவ்விடயத்தில் தீர்க்கமான முடிவு ஒன்றைத் தமிழ்க் கூட்டமைப்பு எடுப்பது அதற்கு ஓர் அமிலச் சோதனைதான்!

# ஜெனரல் பொன்சேகா நாடு திரும்பியதும் செயலாளர் கோத்தபாயவுடன் வாக்குவாதம்

நேற்று(08.11.2009)'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் வெளியான அரசியல் விமர்சனத்தில் இருந்து பெறப்பட்ட ஒரு பகுதி இது

புலிகளைத் தோற்கடித்தது தொடர்பான இராணுவ இரகசியங்களை அமெரிக்க சட்ட நிறைவேற்று அமைப்புகளுக்கு வெளியிட்டு விடுவாரோ என்று அரசுத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்த பயப்பீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் கூட்டுப் படைகளின் தலைமை அதிகாரியான ஜெனரல் சரத்பொன்சேகா கடந்த வியாழக்கிழமை பொழுது விடியும் தறுவாயில் நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

புகழ்பெற்ற போர் வீரரும் இன்று வேறு நபரையும் விட அதிகமாகப் பேசப்படுபவரும் அனைவர் கவனத்தையும் அதிகமாகக் கவருபவருமான அவரது வருகையைப் படம் எடுத்து பதிவு செய்துகொள்வதற்காக புகைப்படப் பிடிப்பாளர்கள் விமான நிலையத்தில் காத்திருந்து ஏமாந்தார்கள். அவர்களால் அவரை சற்றுப் பார்க்கவும்கூட கிடைக்க வில்லை.

இராணுவத் தலைமையகத்தில் சற்றுநேரம் ஓய்வெடுத்துக் கொண்டதன் பின்னர் கூட்டுப் படைத் தலைமை அதிகாரியின் காரியாலயத்துக்கு சரத் பொன்சேகா வந்துசேர்ந்தார். அங்கிருந்து அன்றையதினம் பிற்பகல் பாதுகாப்புத்துறை செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் ரெலிபோனில் தொடர்பு கொண்டு ஒரு குறுகிய உரையாடலை நிகழ்த்தினார்.

அவ்வுரையாடல் இடையில் சடுதியாக முற்றுப்பெற்றது. ஜெனரல் பொன்சேகா அதிர்ச் சியுற்ற வராகக் காணப்பட்டார். அவருடைய மேல் அதிகாரி கோத்தபாயவுடன் முறுகல் நிலை ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகின்றது. இது அமெரிக்காவில் இடம்பெற்ற சம்பவங்களுடன் தொடர்புபட்டதாக இல்லை. ஜெனரல் பொன்சேகா அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களுடன் இது தொடர்புடையது.

ஜெனரல் பொன்சேகாவின் மருமகனின் நெருங்கிய உறவினர் ஒருவர் விடுதிச் சண்டை ஒன்றில் சிக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது. விடுதி உரிமையாளரினால் சம்பந்தப்பட்டவர் வெளியேற்றப்பட்டுள்ளார்.

அடுத்தநாள் உரிமையாளருக்கு அச்சுறுத்தல் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்துள்ளது. உரிமையாளர் தனது செல்வாக்கைப் பிரயோகித்திருக்கிறார். இந்த விடயத்தை இராணுவ நடவடிக்கைப் பணிப்பா ளர் நாயகம் மேஜர் ஜெனரல் சாவிந்திரா சில்வா மற்றும் இராணுவ அதிகாரிகள் தலைவர் மேஜர் ஜெனரல் மென்டெக்க சமரசிங்க ஆகியவர்களுக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார். ஏனென்றால் அழைப்பு வந்த தொலைபேசி பனாகொடை யில் உள்ள ஆட்லறி பிரிவில் உள்ள ஓர் அதிகாரியின் தொலைபேசி என்று கண்டறியப்பட்டிருந்தது. இது விடயமாக உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

### பொன்சேகாவுடன் தொடர்புபட்டது

இந்தக் கட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி வேறு யாருக்காகவோ செயற்படுகின்றார் என்பதைப் பாதுகாப்புச் செயலாளர் அறியவந்துள்ளார். விடயம் மேலும் விகாரம் அடையாமல் தடுத்து நிலைமையைச் சமாளிக்க முனைகையில் ஜெனரல் பொன்சேகாவின் உறவினர் ஒருவருடன் தொடர்புபட்ட விடயம் என்பது தெரியவந்துள்ளது.

விசாரணையைத் தொடர வேண்டாம். அச்சுறுத்தல் அழைப்பு சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்து விடுவிக்கும்படி பாதுகாப்புச் செயலாளர் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரியாவிடம் கூறியிருக்கிறார். ஆனால் விடயம் அத்துடன் முடிவதாக இருக்கவில்லை.

### பொலிஸில் புகார்

குறித்த இராணுவ அதிகாரி ஹோமாகமைக்குப் போய் மேஜர் ஜெனரல் சவிந்திரா சில்வாவிடம் இருந்து தமக்கு அச்சுறுத்தல் அழைப்பு வந்ததாக முறைப்பாடு செய்திருக்கிறார். இது இராணுவம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் பொலிஸார் முறைப்பாட்டை எடுக்க மறுத்து இராணுப் பொலிஸார் இதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இராணுவ உயர்மட்டத்தில் இவ்வாறான முரண்பாடுஏற்பட்டி ருப்பது குறித்து இப்பொழுது பொலிஸார் நடுங்கத் தொடங்கி இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரியின் முறைப்பாட்டை எல்லாப்

## உறவினர் விவகாரத்தால் மேல் மட்டத்தில் குமுறல்

பொலிஸ் நிலையங்களும் எடுக்க மறுத்து விட்டன. இறுதியாக அவர் பொலிஸ் தலைமை நிலையத்தில் சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்துக்கு புகார் சென்றதன் காரணமாக என்ன நடக்கிறது என்பதைப் பற்றி ஜனாதிபதிக்குத் தெரியவந்தது.

இப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்படி பாதுபாப்புச் செயலாளருக்கு ஜனாதிபதி கூறியிருக்கிறார்.

இந்த நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரி உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தொடர்பாக பாரதூரமான குற்றச்சாட்டுக்களைக் கூறிவருவதால் அவரைப் பதவியில் இருந்து இடைநிறுத்தும் படியும் அவர் குறித்து முழு விசாரணை நடத்தும் படியும் பாதுகாப்புச் செயலாளர் இராணுவத் தளபதிக்கு உத்தரவுவிட்டிருக்கிறார்.

கீழ்நிலை அதிகாரிகள் இவ்வாறு செயற்படுவதால் இராணுவத்தில் ஒழுங்கீனம் இடம்பெற வாய்ப்பு ஏற்படும் என்ற நிலைப்பாட்டை பாதுகாப்புச் செயலாளர் எடுத்துள்ளார்.

ஜெனரல் பொன் சேகா நாடுதிரும்பியதும் இதுபற்றிப் பாதுகாப்புச் செயலாளருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியுள்ளது. இராணுவத்தின் ஒழுக்க நிலை பற்றி செயலாளர் ஜெனரல் பொன்சேகாவுக்கு எடுத்து கூறியுள்ளார். இந்தக் கட்டத்தில் வார்த்தைகள் மேலும் முற்றியதால் ஜெனரல் பொன்சேகா தொலைபேசி உரையாடலைத் துண்டித்துக் கொண்டார் என்று தெரிகிறது.

### ஒக்ல ஹோமாவில் பொன்சேகா சொந்த வீட்டில் ஓய்வு எடுத்தார்

ஜெனரல் சரத்பொன்சேகா அமெரிக்காவில் இரண்டு வாரங்கள் கழித்து விட்டு நாடு திரும்பிய கையோடு விடயங்கள் தெரிவாகியுள்ளன.

பொன்சேகாவுக்கு வழங்கப்பட்டுள்ள கிறீன் காட் கடந்த மாதம் முடிவடைவதாய் இருந்தது. இதனைப் புதுப்பிப்பதற்கான அவரது தனிப்பட்ட பிரயாணத்தோடு சில அதிகாரப் பூர்வ கடமைகளிலும் அவர் ஈடுபடுவதாக இருந்தார். அதிகாரபூர்வமாக அவருக்கு வழங்கப்பட்டிருந்த அழைப்புகள் அமெரிக்க அரசினால் பின்னர் வாபஸ் பெறப்பட்டிருந்தன. இதனால் அவரது பிரயாணத்தின் தன்மை முற்றுமுழுதாக தனிப்பட்டதாக அமைந்துவிட்டது.

வாஷிங்ரனில் பௌத்த ஆலய நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின் அவர் ஒக்ல ஹோமாவில் துல்சா என்ற இடத்திற்குப் பயணமானார்.

ஒக்லஹோமாவில் அவருக்கு வீடு ஒன்று இருக்கிறது. அங்கே அவரது மகள்மாரும் மருமகனும் வசிக்கிறார்கள். இலங்கை இராணுவ அதிரடிப் படையினர் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கிறார்கள். அங்கே ஜெனரல் பொன்சேகா ஓய்வெடுத்துக் கொண்டார். அதன் பின் எல்லா விடயங்களும் வெளிப்படத் தொடங்கின. (ப)

# நாளை

| | |
|---|---|
| ஐப்பசி 24 | 10.11.2009 செவ்வாய்க்கிழமை |
| திதி: | அட்டமி மு.ப. 10.41 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் மு.ப.11.12 வரை |
| சுபநேரம்: | 10.35-12.05 வரை |
| ராகுகாலம்: | 03.05-04.35 வரை |

# நல்லூர் பிரதேச சபைப் பிரதேசத்தில் அனுமதியின்றி கட்டடம் அமைக்கத் தடை

யாழ்ப்பாணம்,நவ 9

நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் சட்டவிதிகளுக்கு முரணாகவும், அங்கீகாரம் பெறாமலும் கட்டப்பட்ட கட்டடப் பகுதிகளை இடித்து அகற்ற யாழ். நீதிமன்றால் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்கள் யாவும் சபையின் அங்கீகாரத்துடனேயே கட்டப்படுதல் வேண்டும் என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் கேட்டுள்ளார்.

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட திருநெல்வேலியில் அமைந்துள்ள அம்மன் வீதியில் சட்டத்திற்கு முரணாகக் கட்டப்பட்ட கட்டடப் பகுதிகளை அப்புறப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

இதற்காக நல்லூர் பிரதேச சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் விசாரணையின் போது யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஆர்.வசந்தசேனன் இவ்வாறான கட்டடங்களின் பகுதிகளை இடித்து அகற்றுமாறு கடந்த மாதம் கட்டளை பிறப்பித்தார்.

இதனால் பிரதேச சபையின் சட்டவிதிமுறைகளை மீறி அங்கீகாரம் பெறாமல் கட்டப்படும் எந்தவொரு கட்டடமும் சபையின் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும் என்பதை நீதிமன்றத்தீர்ப்பு வலியுறுத்துகின்றது.

எனவே புதிதாகக் கட்டப்படும் கட்டடங்கள் யாவும் சபையின் அங்கீகாரத்துடனேயே கட்டப்படுதல் வேண்டுமென நல்லூர் பிரதேச சபை செயலர் கேட்டுள்ளார். (10)

# ஐ.நா.தின நிகழ்வு மட்டுவிலில் நாளை

யாழ்ப்பாணம், நவ.9

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய சைவசமய, வரலாறு, புவியியல், குடியியல், மன்றங்களும், சாவகச்சேரி அரிமாக்கழகம் 306 பி உம் இணைந்து நடத்தும் ஐக்கிய நாடுகள் தின நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

மேற்படி மகாவித்தியாலய பிரதான மண்டபத்தில் காலை 8 மணிக்கு வரலாற்று மன்றக் காப்பாளர் திருமதி நவமணி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக 306 பி, பிராந்திய இணைப்பாளர் லயன் ரி.ஆர்.ரஞ்ச னும் சிறப்பு விருந்தினர்களாக 306 பி மாவட்ட இணைப்பாளர் லயன் க.துரைராசா, 306பி சாவகச்சேரி அரிமாக் கழகத தலைவர் லயன் ப.செல்லத்துரை ஆகியோரும் கௌரவ விருந்தினராக 306பி பிராந்தியத் தலைவர் லயன் சு.ஜெயபாலனும் கலந்துகொள்வர்.

இந்த நிகழ்வில் ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி மாவட்ட இணைப்பாளர் 306பி லயன் க.துரை ராசாவும் அதன் செயற்பாடும் பயனு டைமையும் பற்றி மேற்படி மகாவித்தியாலய அதிபரும் சாரணர் குழுத் தலைவருமான மு.பாலசுப் பிரமணியமும் சிறப்புரைகள் நிகழ்த்துவர். (7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட முஸ்லிம் மக்களை யாழ்.நாவலர் வீதி மக்கள் பணிமனையில் சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள்:லக்ஸ்மன்)

# குடாநாட்டில் எந்தவித உதவிகளும் இன்றி வாழ்வதாக தென்னிலங்கை பத்திரிகையாளரிடம் முஸ்லிம்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ 9

முஸ்லிம் அமைச்சர்கள் இங்கு வருகை தந்து எங்களைச் சந்தித்துக் குறைகளைக் கேட்டறிந்த போதும் அவர்கள் கூட எமக்கு எந்தவித உதவிகளையும் வழங்க முன்வரவில்லை என தம்மைச் சந்தித்த செய்தியாளர்களிடம் யாழ். மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் பலர் தெரிவித்தனர்.

தேசிய சமாதானப் பேரவையும் சுதந்திர ஊடக இயக்கமும் இணைந்து நேற்று முஸ்லிம் மக்களைச் சந்தித்தனர். பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா, இயக்குநர் திருமதி தேவநேசன் நேசையா உட்பட பத்திரிகையாளர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றிருந்தனர்.

இடம்பெயர்ந்து வந்த நாங்கள் வீடு வாசல்கள், நிவாரண உதவிகள் எதுவும் கிடைக்காத நிலையில் கஷ்ரமுடன் வாழ்கின்றோம். தொழில் வசதிகள் கூட இல்லை. அதிகாரிகளிடம் எமது குறைகளைக் கூறினால் பின்பு பார்ப்போம் என்கிறார்கள். மிகவும் மோசமான நிலையை எதிர்கொண்டுள்ள நாங்கள் இங்கு இருப்பதிலும் பார்க்க மீண்டும் புத்தளத்திற்கே திரும்பிவிடலாம் போலுள்ளது.

கல்விச் செயற்பாடுகள் சீராக இல்லை. வருமானம் எதுவுன்றி எப்படி நாங்கள் எமது கஷ்ரங்களில் இருந்து மீளமுடியும் எனவும் அவர்கள் கேட்டார்கள்.

முதலில் நாங்கள் குடியிருப்பதற்கான வீடு வசதிகளை ஏற்படுத்தித்தர நடவடிக்கைகள் தேவை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

நாங்கள் உங்களுக்கான உதவிகளை வழங்க முடியாது. உங்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்தமுடியும் என்று பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர். (1-111)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/ கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையின் அதிபர்
உயர்திரு.இராமச்சந்திரன் அருணாசலம் அவர்கள் (S.LP.S.I) அதிபர் சேவை வகுப்பு I இற்கு பதவியுயர்வு பெற்றமையையிட்டு வாழ்த்துகின்றோம்.
யா/ கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை ஆசிரியர் குழாம்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 10 ★ 06 ★ 1930



இறப்பு 09 ★ 10 ★ 2009

### அமரர் தோபியாஸ் கிறகோரி
(தம்பித்துரை ரெட்ணதுரை)

தங்கத்திருமகனே குடும்பத்தின் குலவிளக்கே
தவமிருந்தும் கிடைக்காத தாரகையே - உந்தன்
மனைவி, பிள்ளைகள், உறவினர் தரணியில் தனித்திருக்க
விண்ணுலகம் சென்றதென்ன விளம்புவீர்

35/5, 3ஆம் குறுக்குத் தெரு, பாஷையூர், யாழ்ப்பாணம்.
என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.
(90777)

## மரண அறிவித்தல்

### சின்னத்துரை மீனாட்சிஅம்மா



பெருமாள் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் 229, நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை மீனாட்சி அம்மா நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் சின்னத்துரையின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும் மங்கையர்க்கரசி காலஞ்சென்ற திலகராணி ஆகியோரின் அன்புத்தாயாரும் அமரர்களான நாரா யணசாமி, மகாதேவா ஆகியோரின் மாமியாரும் துஷாந்தி, பிருந்தா (கனடா), கிருஸ்ணராஜா, ஞானகாந்தன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் கனடாவில் வசிக்கும் தனுலா, கோகுழ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2009) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

229, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. : 0776258227
தகவல் : குடும்பத்தினர்.

## சைவநெறிப்போட்டி பரிசளிப்பு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.கல்வி வலய மட்டத்தில் இடம் பெற்ற சைவநெறிப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகானந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கோட்டமட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் சான்றிதழ்களையும் பொறுப்பாசிரியர் பெற்றுக் கொள்ளுமாறும் அனைத்து பாடசாலை அதிபர்களையும் விழாவில் பங்குபற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுகொண்டுள்ளார். (110)

## கல்வியமைச்சு அதிகாரிகள் நாளை வருகின்றனர்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.கல்வி வலய பாடசாலைகள் தொடர்பாக கல்வி அமைச்சின் அதிகாரிகளின் மதிப்பீடும் விசேட கலந்துரையாடலும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றன.

மேற்படி கலந்துரையாடலில் பாடசாலை அதிபர்கள், தரவட்டத் தலைவர்கள் ஆகியோர் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப் பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார்.

(1-110)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ 9

தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அதிபர் க. யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா கலந்து கொள்வார். (1 -110)

## தவறிவிட்டது

"கிருஷோபனம்", நந்தாவில் லேன், தாவடி, கொக்குவிலைச் சேர்ந்த ஆனந்த ஜெயந்திரன் சஞ்ஜீவன் என்பவரது தே.அ.அ. (803223491V), சாரதி அனுமதிப்பத்திரம், கல்வித் திணைக்கள அ.அ., வேறு சில ஆவணங் களும் மானிப்பாய் சந்திக்கும் தாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. [illegible] ஒப்படைத்து உதவவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
T.P.: [illegible]

## தவறிவிட்டது

192/01, கச்சேரி, நல்லூர் வீதியைச் சேர்ந்த சிறிபுஸ்பநாதன் துசிகரன் ஆகிய எனது மோட்டார் சைக்கிள் காப்புறுதிச் சான்றிதழ், வரிச்சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் என்பன 07.11.2009 அன்று புன்னாலைக்கட்டுவனுக்கும் யாழ்.நகருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ். திருமறைக்கலாமன்றத்தில் ஒப்படைக்கவும்.
தொடர்பு: 0779672868
சன்மானம் வழங்கப்படும். (90768)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா கதிர்காமு (நாகர்கோயில்)

நாகர்கோயில் வடக்கு, நாகர்கோயிலைச் சேர்ந்தவரும் தற்காலிகமாக சவனாய், புலோலி கிழக்கு, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா கதிர்காமு நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகேசு கதிர்காமுவின் அன்பு மனைவியும் இராசமலர் (காந்தி), நாகேஸ்வரி (நாகம்மா), காலஞ் சென்ற முருகேசு (சிவபாதம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வத்திரவியம் (U.K), மீரா (U.K) ஆகியோரின் மாமியாரும் அகிலனின் (U.K) அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2009) திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (சி/562210)

நிரந்தர முகவரி: நாகர்கோயில் வடக்கு, நாகர்கோயில்.
தற்காலிக முகவரி: சவனாய், புலோலி கிழக்கு, பருத்தித்துறை
தகவல்: கதிர்காமு இராசமலர் (காந்தி)

### திருமதி சின்னையா சின்னம்மா

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் பொன்னாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா சின்னம்மா நேற்று (08.11.2009) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் தம்பதிகளின் மகளும், இராமநாதன் தம்பதிகளின் மருமகளும் சின்னையாவின் அன்பு மனைவியும் தேவதாசனின் அன்புத்தாயாரும் கோசலாதேவியின் அன்பு மாமியாரும் கோகுலநந்தன், கோகுலரமணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் டாக்டர் சுவாமிநாதன் (காரைநகர் பிரதேச வைத்திய சாலை); சோதிநாதன், கமலாம்பிகை, பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2009) செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னாவளை, களபூமி, காரைநகர். (90775)
தகவல் : தேவதாசன் (மகன்)

### ஆறுமுகம் கனகலிங்கம்
(பிரபல புகையிலை வியாபாரி)




வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமு கம் கனகலிங்கம் நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தங்கமுத்து மற்றும் சின்னம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், நாகேஸ்வரி (இந்தியா), கலாவதி, ஜெயவதி (கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), தயாவதி, சிவபதி, தயானந்தன் (கனடா), பிறேமாவதி (கொக்குவில் இந்துக் கல்லூரி), Dr.லிங்கநாதன் (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தம் (இந்தியா), தவயோகராஜா (துளசிகா ஸ்ரோர்ஸ், நாச்சிமார் கோவிலடி), வரதராஜா (ஆனந்தா, ஸ்ரோர்ஸ், காலி), விஜேந்திரன் (கொழும்பு), ஜெயக்குமார், இராஜயோகம் (கனடா), ஜெயகாந், நளாயினி, (லண்டன்),ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.48, பெரியதம்பிரான் கோவிலடி, வண்ணார்பண்ணை வடமேற்கு, யாழ்ப்பாணம். (சி/562211)
தகவல் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தலைமையிலான தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று சந்தித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் குடாநாட்டு நிலைமை குறித்து விளக்கமளிப்பதையும், சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா உரையாற்றுவதையும் தென்னிலங்கை பத்திரிகையாளர்கள் குடாநாட்டு நிலைவரம் பற்றி கேட்டறிவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: உமா)

# எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தென்னிலங்கை மக்களும் உணர்ந்து கொள்ள வேண்டும்

## இணையத் தலைவர் தென்னிலங்கைப் பத்திரிகையாளருக்குத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தென்னிலங்கை மக்களும் அறிந்து கொள்ளவேண்டும். அவற்றை அங்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுக்கு உரியது.

இவ்வாறு தெரிவித்தார் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

தென்னிலங்கை பத்திரிகையாளர் சகிதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த சமாதானப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா நேற்று யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவன இணையப் பிரதிநிதிகளையும் சந்தித்து யாழ்.குடாநாட்டின் நிலைமை தொடர்பாக கேட்டறிந்தார்.

இதன் போதே அவர் மேற்படி விடயத்தைக் கூறியுள்ளார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் இணைய அலுவலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் குடாநாட்டு நிலைமை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனங்கள் சுதந்திரமாக செயற்படுவதற்குரிய தடைகளை நீக்குதல், காங்கேசன்துறை சிமெந்து ஆலையினை மீள இயக்குவதால் ஏற்படவிருக்கும் பாதகமான விளைவுகள், உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை குடியேற அனுமதித்தல், முஸ்லீம் மக்கள் மீள குடியேறுவதற்கான நடவடிக்கைகள் தொடர்பான விடயங்கள் நேற்றைய சந்திப்பின்போது விரிவாக தென்னிலங்கை பத்திரிகையாளருக்கு விளக்கப்பட்டது.

இதில் இணையத் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

இன, மத, மொழி வேறுபாடிகளைக் கடந்த நிலைமை மனப்போக்கை கொண்டிருக்கும் சமாதானப் பேரவையின் தலைவர், தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களுடன் விஜயம் செய்து எமது பிரச்சினைகளை செவிமடுத்துக் கொண்டமையை நாம் வரவேற்கின்றோம்.

பக்கசார்பற்ற நடுநிலைமை மனத்துடன் எவ்விடயத்தையும் நோக்கும் ஒருவராலேயே, எமது மக்களது பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளமுடியும்.

நடுநிலைமைப் போக்கைக் கடைப்பிடித்துத் தென்னிலங்கை ஊடகங்கள் எமது மக்களின் பிரச்சினைகளுக்கு முக்கியம் கொடுக்கும் என நம்புகின்றோம்- என்றார். (203-14-07)

## வடிகால்சேதம்

யாழ்ப்பாணம்,நவ.9

யாழ்.நான்காம் குறுக்கு வீதியில் பிரதான வீதிக்கருகாமையில் உள்ள கழிவுநீர் செல்லும் வடிகாலின் ஒரு பகுதி உடைந்து பள்ளமாக காணப்படுவதனால் இவ்வீதியூடாக பயணிப்போர் மிகுந்த போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறார்கள்.

அதிக காலமாக இவ்வடிகால் பகுதி சேதமடைந்துள்ள போதிலும் இதுவரை இவ்வீதியை செப்பனிட உரியவர்கள் எதுவித நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை எனவும் பொதுமக்கள் விசனம் தெரிவித் தனர். (203-51)

## கட்டாக் காலிகளைக் கட்டுப்படுத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.9

கோப்பாய் மத்தி விவசாய சம்மேளன எல்லைக்கு உட்பட்ட அண்மையில் விடுவிக்கப்பட்ட நெற்செய்கை காணிகளில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான உதவிகளை விவசாயத் திணைக்களமும் கமநல சேவைகள் நிலையமும் இணைந்தே இலவசமாக வழங்கி உள்ளது.

இப்பகுதில் இதுவரை நடமாடிய கட்டாக்காலி மாடுகளை உரியவர்கள் கட்டுப்படுத்தும் படியும் விளை நிலங்களுக்குள் திரியும் கட்டாக்காலிகள் சம்மேளனத்தினரால் பிடிக்கப்படும் சந்தர்ப்பங்களில் உரியவர்களிடம் தண்டப்பணம் அறவிடப்படும் என்றும் கோப்பாய் மத்தி விவசாய சம்மேளன உப செயலாளர் மு.சண்முகலிங்கம் தெரிவித்தார். (203-110)

# இலங்கை அரச அதிபர் சேவை வகுப்பு 2:11 பதவி உயர்வு ஆயிரத்து 918 ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள்

அச்சுவேலி, நவ.9

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2:11 பதவி உயர்வு பெறும் 1918 ஆசிரியர்களுக்கு நியமனக் கடிதங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தப் பதவி உயர்வு கடந்த வருடம் வழங்கப்பட்டு உயர்நீதிமன்றத்தின் இடைக்காலத் தடை உத்தரவினால் இடை நிறுத்தப்பட்டு இருந்தது.

உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் பிரகாரம் பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் என்ற வகையில் மேன்முறையீடு செய்த ஆயிரத்து 500 இற்கு மேற்பட்டவர்களுக்கு மீள் நேர்முகப் பரீட்சை நடைபெற்ற பின்னர் இந்த வருடம் நியமனம் வழங்கப்படுகின்றது.

கடந்த வருடம் நியமனம் வழங்கும் போது தேசிய இனங்களுக்கு மாறுபட்ட விதத்தில் 229 இல் இருந்து 222 வரை இருந்த வெட்டுப்புள்ளி மறுசீரமைப்புச் செய்யப்பட்டு எல்லோருக்கும் 229 வெட்டுப்புள்ளியாக வரையறை செய்து நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனத்துக்கான வெட்டுப்புள்ளி மாற்றப்பட்டமையினால் 26 பேர் அதிபர் பதவியைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போய் உள்ளது.

உயர் நீதிமன்றம் 155 புள்ளியும் அதற்கு மேற்பட்ட புள்ளியையும் எழுத்துப் பரீட்சையில் பெற்றவர்களையே நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்த வேண்டும் என்றமையால் 464 பேர் பதவி உயர்வு பெறும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளனர்.

இந்தவகையில் 490 புதியவர்கள் பதவி உயர்வு பெறுகின்றனர். பதவி உயர்வு பெறுவதில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள 490 பேருக்கும் பதவி உயர்வு வழங்குவதற்கு ஏற்புடைய வகையில் கல்வி அமைச்சர் சுசி[illegible]பிறேம் ஜெயந்த அமைச்சரவை பத்திரம் ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப் பித்திருப்பதாகவும் அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்குமிடத்து பாதிப்புக்கு உள்ளாகிய 490 பேருக்கும் பதவி உயர்வு வழங்கப் படலாம் என்றும் கூறப்படுகின்றது. (203-11)

## முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நாளை

பண்டத்தரிப்பு, நவ.9

வலி.தென்மேற்கு முன்பள்ளி ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எம்.எக்ஸ். சர்வானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் கலந்துகொள்வார். (203-130)

## சமய தீட்சை வழங்கல்

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஒழுங்கு செய்யும் தீட்சை நிகழ்வு எதிர் வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கைலாசநாதக் குருக்கள் தலைமையில் நீராவியடி நாவலர் ஆச்சிரமம் மண்டபத்தில் நடை பெறும்.

தீட்சை பெறவிரும்புபவர்கள் கலந்து கொண்டு பயனடையும்படியும் ஏழு வயதுக்கு மேற்பட்ட ஆண்,பெண் இருபாலாரையும் கலந்து கொள்ளலாம் என்றும் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (203-110)

## அரிந்த மரங்கள் விற்பனை

யாழ்ப்பாணம்,நவ.9

அரச மரக்கூட்டுத்தாபனத்தினால் அரிந்த மரங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கட்டட நிர்மாண வேலைகளுக்கும், ஆலயநிர்மாண வேலைகளுக்கும், வீட்டுத்தளபாட வேலைகளுக்கும், உரிய உயர் தரமான அரிந்த மரங்கள் பல்வேறு அளவுகளிலும் விற்பனைக்கு உள்ளது என அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் பிரதேச முகாமையாளர் எஸ்.சிறீஸ்கந்தராஜா தெரிவித்தார். (203-110)



கொக்குவில் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாவையொட்டி பழைய மாணவன் மாணிக்கம் சுப்பிரமணியத்தினால் கல்லூரி மைதானத்தில் ஒரு கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கபடவுள்ள பார்வையாளர் மண்டபத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. மா.சுப்பிரமணியம் அடிக்கல் நட்டு வைப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் உட்பட அதி[illegible] ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

## மாணவர்கள் இணைவு

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் வவுனியா நலன்புரி நிலையத்திலிருந்து விடுவிக்கப்பட்ட 58 மாணவர்கள் இதுவரை இணைந்துள்ளதாகபாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தார். (203-1[illegible])



## விவசாயக் கடன் வழங்கல்

கோப்பாய் மத்தி விவசாய சம்மேள[illegible] எல்லைக்குட்பட்ட விவசாயி[illegible]க்கு 2009-2010 இலகுமுறை விவசாயக்கடன் சம்மேளன அனுசரணையுடன் வழங்கப்படவுள்ளது.

8 மாத காலப்பகுதிக் கடனாக இது வழங்கப்பட உள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தல்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் எதிர்வரும் புதன்கிழமைக்கு முன்னராக சம்மேளனத்தில் பெற்றுக்கொள்ளலாம். என கோப்பாய் ம[illegible]தி விவசாய சம்மேளன உப செயலா[illegible] மு.சண்முகலிங்கம் தெரிவித்தார். (203-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவாலி மகாவித்தியாலயத்தில் 'சுலோசனா' ஞாபகார்த்த பரிசில் வழங்கும் நிகழ்வில் விருந்தினர்கள் 'பான்ட்' வாத்திய இசையுடன் அழைத்து வரப்படுவதையும். நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களான யாழ்.பல்கலைக்கழக கல்வியற்றுறை பேராசிரியர் மா.சின்னத்தம்பி, யாழ்.பல்கலைக்கழக பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி செ.சந்திரசேகரம், நவாலி மகாவித்தியாலய அதிபர் இரா. வசந்தகுமார், கோட்டக்கல்வி அதிகாரி சி. கந்தசாமி ஆகியோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: இரா சுதா)*

## தரம் ஒன்று மாணவருக்கு அனுமதிப்பரீட்சை

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயத்தில் தரம்01 மாண வர்களை அனுமதிப்பதற்கான அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளது என வித்தி யாலய அதிபர் எஸ். ஞானசம்பந்தன் தெரிவித்தார். (203- 110)

## முதியவரைப் பொறுப்பேற்கவும்

யாழ்ப்பாணம்,நவ.9

கோப்பாய் அரசினர் வைத்தியசாலை யில் சுமார் 80 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர் ஒருமாதகாலமாக அனுமதிக்கப் பட்டுள்ளார்.

இதுவரை உறவி னர் யாரும் அவரை பொறுப்பேற்க வில்லை எனவும் குறிப்பட்ட நபரின் பெயர் நடராஜா எனவும் தெரிவிக் கப்பட்டது. உறவி னர்கள் அவரைப் பொறுப்பேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-110)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு.பா.வெற்றிவேல்

(S.L.P.S - 1 அதிபர், யா/ கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை)

எமது பாடசாலையில் கடந்த 16வருடங்களாக அதிபராக சேவை செய்துவரும் எங்கள் அதிபர் அவர்கள் 1.6.2004 முதல் இலங்கை அதிபர் சேவையில் வகுப்பு - 1 இற்கு பதவி உயர்வு பெற்றுள்ளமையை இட்டு எமது பாடசாலைச் சமூகம் மட்டற்ற மகிழ்வுடன் அவரைப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.

(சி/562186)

## உபகரணங்கள் வழங்கல்

வேலணை, காரைநகர், ஊர்காவற்றுறைப் பகுதி களில் வவுனியா நலன்புரி முகாம்க ளிலிருந்து விடு விக்கப்பட்டு மீளக் குடியமர்ந்தோரில் வறுமைக்கோட்டிற் குட்பட்ட குடும் பங்களுக்கு முன் னுரிமை அடிப்ப டையில் சுய தொழில் உபகர ணங்களினை இந்து அமைப்புக்களின் ஒன்றியம் விரை வில் வழங்கவுள் ளது. (203-110)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.9

கடந்த 5 வரு டங்களாக உரும் பிராய் கமநல சேவைகள் நிலை யத்தில் கடமை யாற்றிய விவசா யப் போதனாசி ரியர் எம்.யோக நாதன் கைதடி கம நலசேவை நிலை யத்திற்கு மாற்றம் பெற்றுள்ளார்.

அதேவேளை இதுவரை புத்தூர் கமநல சேவை கள் நிலையத்தில் கடமையாற்றிய எஸ்.பாலகிருஸ் ணன் உரும்பி ராய்க்கு இடமாற் றம் பெற்று வந் துள்ளார் எனவும் கோப்பாய் மத்தி விவசாய சம்மே ளன உப செயலா ளர் மு.சண்முக லிங்கம் தெரிவித் தார். (203-110)

## வேலை வாய்ப்பு

யாழ்.மண்ணில் கடந்த 47 வருடங்களாக திறம்பட இயங்கிவரும் முழு அரச உத்தரவாதம் உடைய காப்புறுதி நிறுவனத்தில் திறமை மிக்க அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக பணியாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள் :-
1) G.C.E. O/Lகணிதம் உட்பட 6 பாடம் சித்தி
2) 18 வயதிற்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.

நன்மைகள்:-
1) பிரசித்தி பெற்ற பயிற்சியாளரின் கீழ் பயிற்சி பெறும் வாய்ப்பு
2) பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.
3) இக்காலப் பகுதிக்குள் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப் படும்.
4) எல்லையற்ற வருமானம்.
5) பூரண சுதந்திரம்
6) யாழ்.மக்களின் மனம் கவர்ந்த அரச நிறுவன ஊழியராக பணிபுரியும் வாய்ப்பு
7) வெளி நாட்டுப் பயணவாய்ப்பு, மேலும் பல ....

தொலைபேசி இலக்கம் உட்பட சுய விவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்கள் 18.11.2009ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முக வரிக்கு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இலக்கம்:3959
மே/பா.உதயன் (சி/562208)

## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிப்பாளர்
திரு.நாகமணி இராசநாயகம் அவர்களின் அன்புத் தந்தையார்

### சின்னத்தம்பி நாகமணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்,
பணியாளர்கள், இல்லச்சிறார்கள்.

(சி/562205)

## மரண அறிவித்தல்

### திருமதி குணபாலசிங்கம் ஜெயராணி



யாழ்ப்பாணம், அரியாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய திருமதி குணபால சிங்கம் ஜெயராணி (07.11.2009) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குண பாலசிங்கத்தின் (ஓய்வுபெற்ற ஊழியர், யாழ்.போதனா வைத் தியசாலை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பொன் னையா - அன்னலட்சுமி தம்பதி யரின் பாசமிகு மகளும் காலஞ் சென்றவர்களான நவரத்தினம் - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயமலர், ஜெயந்தினி, றஜனி, சுதாஜினி, டனுஷா, குணசுதன் ஆகியோரின் பாசமிகு தாயும் குகனேஸ்வரன், லின் ரன்லெஸ்லி, தவேந்திரராஜா, உதயசங்கர், மதன்ராஜ், வினு காயத் திரி ஆகியோரின் அன்பு மாமியும் அமரர்களான பரராஜசிங் கம், சுவாலிங்கம் மற்றும் ஜீவராணி, வன்னியசிங்கம், குணராணி, தன பாலசிங்கம், றஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குக மூர்த்தி, அமரர் நல்லைநாயகி மற்றும் பாபு, அமரர் விமலாதேவி மற்றும் தயாநிதி, தவபாலன், சிவம், ஸ்ரீ, கௌரி, லீலா, இரத் தினம், கமலவேணி, குகராசபதி, தர்மதேவி, ஆராஅமுதன், கலாஜோதி, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் அனுஷன், ரக்ஷன், நிரோஷன், சிவஷாந், மதுஷன், டனித்தா, கிருஷாந், நேருஜா, ஜெனித்தன், அனித்தா, ஜெனினா, ஷாருகா, றிஷான், வைஷ் ணவி, தர்ஷ்ணவி, சந்தோஷ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமா வார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*முகவரி:*
A.V.Road, *259/05, அரியாலை*

தகவல்:
குடும்பத்தினர்.

## சைவசமய அருள் நெறிமன்றம்

வலி-கிழக்கு

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குரு பூசைத்தினத்தை முன்னிட்டு நடத்தப்பெறும்

### கட்டுரை - பேச்சுப் போட்டிகள்

- இப்போட்டியில் சைவசமயம் சார்ந்த மாணவர்கள் அனைவரும் பங்கு பற்றுவர்.
- போட்டி கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.
- கீழ்ப்பிரிவு: (தரம் 3-5 வரை) பேச்சு போட்டியில் மட்டுமே பங்கு பற்றலாம். பொருள்- ''சைவம் வளர்த்த நாவலர்'' (5 நிமிடம்)
- மத்திய பிரிவு: (தரம் 6-9) கட்டுரை (போட்டி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.) பொருள் -''நாவலரும் நற்தொண்டும் ''அல்லது'' நாவலரின் சமூகப்பணி''
- மேற்பிரிவு: (தரம்9 இற்குமேல்) -நாவலருடன் தொடர்பான கட்டுரை (இதற்கான தலையங்கம் பரீட்சை மண்ட பத்தில் வழங்கப்படும்.)
- விண்ணப்பமுடிவு திகதி: 11.11.2009
- போட்டி நடைபெறும் இடம்: கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
- போட்டிநடைபெறும் காலம்: கீழ்ப்பிரிவு- 14-11-2009 சனிக்கிழமை (நண்பகல் 12 மணிமுதல் 2.00 மணிவரை)
- மத்தியபிரிவு, மேற்பிரிவு 15-11-2009 ஞாயிற்றுக்கிழமை (நண்பகல் 12 மணிமுதல் 2.00 மணிவரை)
- போட்டிக்கான விண்ணப்பப்பத்திரங்கள் ''வலி.கிழக்கு சைவசமய அருள் நெறிமன்றம், வீரபத்திரகோயிலடி கோப்பாய் தெற்கு'' என்னும் விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- இப்போட்டியில் நடுவர்களின் தீர்ப்பே இறுதிமுடிவானது.

சைவசமய அருள்நெறிமன்றம்,
வலி கிழக்கு, கோப்பாய்.
(இணையத்தளம்-www.arulneri.com)

(சி/562206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணக்கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 18 வயதுப் பிரிவனருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்:- நேசன்)

## ★ தேசியமட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ★

# கம்பஹா பண்டாரநாயக்க பாடசாலை அணியை வீழ்த்தி அரையிறுதிக்கு முன்னேறியது மானிப்பாய் இந்து

யாழ்ப்பாணம், நவ.9

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளத்தினால் 19 வயதுப்பிரிவுப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் அகில இலங்கை ரீதியான சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்து அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கால் இறுதி ஆட்டம் ஒன்றில் கம்பஹா பண்டாரநாயக்க பாடசாலையுடன் மானிப்பாய் இந்து மோதியது.

ஆரம்பத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக விளையாடிய போதும், மானிப்பாய் அணி வீரர்களின் சாதுரியமான ஆட்டத்தால் அடுத்தடுத்துக் கோல்களைப் பெற்றனர்.

ஆட்டமுடிவில் 7-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று அரை இறுதி ஆட்டத்துக்கு மானிப்பாய் இந்து முன்னேறியது.

யாழ். மாவட்டத்தில் இடம் பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்று தேசியமட்டப் போட்டிக்கு மானிப்பாய் இந்து தெரிவாகியிருந்தது.

ஏனைய மாவட்டங்களில் முதலிடம் பெற்ற அணிகள் இந்தப் போட்டியில் பங்கு பற்றுகின்றன. (1)

## பதினொரு பாடசாலைகள் கலந்து கொள்ளும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி வெள்ளியன்று

வலி.வடக்கு, நவ. 9

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அமரர் கே.எஸ். செல்லையா ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தும் 05 பேர் பங்கு பற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை முதல் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த சுற்றுப் போட்டிகளில் இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, பருத்தித்துறை ஹொட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியென 11 பாடசாலை அணிகள் இப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளன. (1-86)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு, நவ.9

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் இலங்கை வங்கி, வர்த்தக வங்கி என்பவற்றின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு இரண்டாம் சுற்று ஆட்டம் நடைபெறவுள்ளது. (1-86)

* * *

வலி.வடக்கு, நவ.09

பிரிமா வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகளில் இரண்டாம் சுற்றில் பங்கு பற்றச் சென்றுள்ள யாழ்.மாவட்ட பாடசாலைகளின் 15 வயது கிரிக்கெட் அணியினர் இன்று காலை திங்கட்கிழமை தம் புள்ளை விளையாட்டு மைதானத்தில் கண்டிமாவட்ட அணியினரை எதிர்த்து மோதவுள்ளனர். (1-86)

## தாச்சிச் சுற்றுப் போட்டியில் வெற்றிபெற்ற அணிகள்

வலி.வடக்கு,நவ.9

யாழ். மாவட்ட தாச்சிச்சங்கம் வர்த்தக வங்கி, இலங்கை வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் தாச்சிச் சுற்றுப் போட்டியை நடத்தி வருகிறது.

இந்தச் சுற்றுப் போட்டியின் சில முடிவுகள்

✱மயிலிட்டி நியூகிட் விளையாட்டுக் கழகத்திற்கும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் நியூகிட் விளையாட்டுக்கழகம் 8:3 பழங்கள் என்ற அடிப்படையில் புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகத்தை வெற்றி பெற்றது.

✱உடுவில் ஆவடி சிந்து விளையாட்டுக் கழகத்திற்கும் கைதடி சரஸ்வதி விளையாட்டுக்கழகத்திற்கும் இடையே நடைபெற்ற போட்டியில் இந்து விளையாட்டுக்கழகம் 9:0 பழங்கள் என்ற அடிப்படையில் சரஸ்வதி விளையாட்டுக்கழகத்தை வெற்றிபெற்றது.

✱ பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டு கழகத்திற்கும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் அறிவொளி விளையாட்டுக் கழகம் 12:09 பழங்கள் என்ற அடிப்படையில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது. (1- 86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 16வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் வலய சம்பியனான நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை இரண்டாம் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி வீரர்கள், வலய உடற்கல்வி உதவி கல்விப்பணிப்பாளர் குமாரசுவாமி, ஆசிரிய ஆலோசகர் சிவகுமார் மற்றும் பாடசாலை ஆசிரியர்களுடன்

## இலங்கை போக்குவரத்துச் சபையின்

# சாரதி பதவிக்கான நேர்முகத்தேர்வு இன்று காலை கோண்டாவில் சாலையில்

யாழ்ப்பாணம், நவ.09

யாழ். மாவட்டத்தில் இலங்கைப் போக்குவரத்துச்சபையில் சாரதி பதவிக்கான நேர்முகப்பரீட்சை இன்று திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கோண்டாவில் சாலையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நேர்முகப்பரீட்சையினை நடத்துவதற்கு கொழுப்பிலிருந்து போக்குவரத்து அமைச்சினைச் சேர்ந்த உயரதிகாரிகள் வருகைதந்துள்ளனர்.

சாரதி நியமனம் தொடர்பான நேர்முகப்பரீட்சையில் பங்குபற்றுபவர்கள் பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், மற்றும் பாடசாலை விட்டு நீங்கியமைக்கான சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, கிராம சேவையாளர் சான்றிதழ், சாரதி அனுமதிப்பத்திரம் (இரண்டு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருந்தல் வேண்டும்) என்பவற்றுடன் வருகை தரல் வேண்டும்.

விண்ணப்பதாரி 63 அங்குல உயரமும் 100 இறாத்தல் பாரமும் உடையவராக இருக்க வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 9824 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா கேட்டுள்ளார். (9)

## பாவனைக்குதவாத கோதுமை மா வலி.மேற்கில் கண்டுபிடித்து அழிக்கப்பட்டது

### சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.09

வலி.மேற்கு பிரதேசத்தில் பாவனைக்கு உதவாத 100 மூடைக்கும் அதிகமான கோதுமை மா சுகாதாரப் பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது ஏனைய [illegible] அல்லது கால்நடை [illegible] துவதற்கு பொருத்தமற்றது என மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இதனால் சுகாதார பகுதியினரால் கண்டுபிடிக்கப்பட்ட கோதுமை மா கல்லூண்டாய் வெளியில் வைத்து அழிக்கப் [illegible] பிரதேச சபை ஊழி[illegible]உடன் இது நடைமுறைப் படுத்தப்பட்டது. (203-302)

## குருநகர் சின்னக்கடை சந்தையில் பழுதடைந்த மீன்கள் விற்கப்படுகின்றன

### பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்

குருநகர், நவ.09

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் வியாபாரிகளால் விற்பனை செய்யப்படும் கடலுணவு களில் பெரும்பாலானவை பழுதடைந்த நிலையிலேயே காணப்படுவதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குருநகர் மற்றும் பாஷையூர் மீனவர்களினால் நாளாந்தம் பிடிக்கப்பட்டும் கடலுணவுகள் மீன்சந்தை வியாபாரிகளால் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு சந்தைப் படுகின்றது.

இதேநேரத்தில் வடமராட்சி, தீவகம், கொட்டடி ஆகிய மீன் சந்தைகளில் கடலுணவுகளை கொள்வன்வு செய்யும் குருநகர் வியாபாரிகள் சிலர் தாம் கொள்வனவு செய்யும் கடலுணவுகளை இங்கு சந்தைப் படுத்துகின்றார்கள்.

இவர்கள் காலை முதல் பிற்பகல் வரை சந்தைப்படுத்திய பின்னர் பழுதடைந்த மீன்களை குளிரூட்டி களில் வைத்து மறு நாள் அவற்றைச் சந் தைப் படுத்துவதாகக் கூறப்படுகின்றது. இதனால் காலை வேளைகளில் மீன்களை வாங்குவோர் அதிகவிலை கொடுத்தும் பழு தடைந்த மீன்களை வாங்க வேண்டியுள் ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. உரிய அதிகாரிகள் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது. (203-09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பொளி கல்வியகத்தின் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் திறமையான சித்திகளைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வுகள் நேற்று முன்தினம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத் தலைவர் கலாநிதி மிகுந்தன் தம்பதியினர் மங்கள விளக்கேற்றுவதையும்

அன்பொளி கல்வியக இயக்குநர் எஸ்.அன்பழகன் உரையாற்றுவதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

திருமதி துஷியந்தி மிகுந்தன் மாணவர்களுக்குத் தங்கப் பதக்கம் அணிவிப்பதையும் யாழ்.மாவட்டத்தில் நடனப் போட்டியில் முதலிடம் பெற்ற சிறுமி கு.பவித்திராவின் நடன நிகழ்வையும் அடுத்துள்ள மூன்று படங்களில் காணலாம்.

மாணவர்களில் ஒரு பகுதியினரை ஆறாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்:லக்ஸ்மன்)*


யாழ் மாவட்டத்தில்! சான்றுகளுடன் சாதனைகள் படைத்த முதன்மை நிறுவனம் என ஆன்றோரின் தெரிவில்.....

The Express Institute
Irupalai, Kopay.




புதிய கல்விஆண்டில் இணைந்து உயர்ச்சிபெற ஓர் அரியவாய்ப்பு!

தரம் 03 முதல் O/L வரை

தமிழ், ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள்

முதற்கட்ட அனுமதிகள் நவம்பர் 10 – டிசம்பர் 10 வரை வழங்கப்படும். – அதிபர்


## தவறிவிட்டது

77இலக்கம் இடப்பட்ட 2 உரப்பைப் பொதிகள் 30.10.2009 அன்று இடம்பெயர்ந்த மக்களின் பொருள்கள் யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இறக்கு மிடத்து தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் கீழ் வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும் (தகுந்த சன்மானம் தரப்படும்) முகவரி:- திருமதி ச. தேவராணி
C/O விசுவநாதன் (expired)
வட்டுமேற்கு, வட்டுக்கோட்டை.
T.P NO:- 077 0489626
(90755)

## மானிய உரம் பெறாதவர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.9

கோப்பாய் மத்தி விவசாய சம்மேளன எல்லைக்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட 2 ஆம் கட்ட மானிய உர விநியோகம் கடந்த 5 ஆம் திகதி நிறைவுக்கு வந்துள்ளது.

எனவே இரண்டாம்கட்ட மானிய விநியோகத்தினை இன்னும் பெறாத விவசாயிகளை உரும்பிராய் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு அவற்றினைப் பெற்றுக்கொள்ளுமாறு சம்மேளன உப செயலாளர் மு.சண்முகலிங்கம் தெரிவித்துள்ளார். (203-110)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையின் அதிபர் திருமதி
**சாராதாதேவி கிருஸ்ணதாஸ்**
B.A.(Hons) Dip.in,Ed. SLTS- 1
அவர்கள் அதிபர் சேவையில் 2-1 இற்கு பதவியுயர்வு பெற்றமையைப் பாராட்டி வாழ்த்துவதோடு, மேலும் பதவியுயர்வுகள் பெற்றுச் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/நெடுந்தீவு மகாவித்தியாலயம் நெடுந்தீவு
(90709)
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும், பெற்றோர்களும்.

## 12 TH YEAR REMEMBRANCE

**MR. N. RATNVAEL**
F.C.M.A, F.P.F.A, Dip. in Accy, S.L.Ac.S-I
(Rtd. Chief Accountant)



Born: 14. 07. 1935

Died: 23. 10. 1997

Dear dad,
We lovingly, gratefully and prayfully remember you on this day.

*Yours loving*
*wife: Pathma*
*Children: Senthooran*
*Sevvanthy.*

G.P.S Road,
Kalviyankadu,
Jaffna.
(90760)

## மணமகள் தேவை

M.Sc. முடித்து Mechanical Engineer ஆக இருக்கின்ற Canadian PR உள்ள சைவசமயம் 29 வயது, ஏழில் செவ்வாய், பூச நட்சத்திரம், பாவம் 30 உடைய மணமகனுக்கு வைத்தியத் துறையில் படித்துக் கொண்டிருக்கும் அல்லது படிப்பை முடித்துக் கொண்ட மணமகள் தேவை.
தொடர்பு: 0713163508

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள், PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 10/11/2009 ஆம் திகதியிலிருந்து விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.
றாஜீவ் கால்நடைத்தீவன விற்பனை நிலையம், ஆனைக்கோட்டைச் சந்தி.
(90681) T.P: 021 222 2867, 0776090926

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

NPUM-XXXX இலக்கமுடைய Scooty pep மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0774047943

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது வித்தியாலயத்தின் பெருமதிப்புக்குரிய அதிபர்
உயர்திரு
**விநாயகமூர்த்தி கணபதிப்பிள்ளை**
(B.A.Sp.Trd.Tamil, SLPS.2- I)
அவர்கள் இலங்கை அதிபர்சேவை தரம் 2- 1 இற்குப் பதவியுயர்வு பெற்றமையையிட்டு அதிபர் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் மேலும் பல பதவியுயர்வுகளைப் பெற இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்.
(90757)
**பாடசாலைச் சமூகம்.**

## மரண அறிவித்தல்

### அமரர் புவிராஜசிங்கம் சிங்கராஜா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட புவிராஜசிங்கம் சிங்கராஜா (06.11.2009) வெள்ளிக்கிழமை அன்றுபரிஸில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான புவிராஜசிங்கம்-தர்மலெட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிராஜா-வேதநாயகி தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் றஜந்தன், நிரோஜன், நிதர்ஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும் முத்துராஜா, சுலோசனா, நளாயினி, வசந்தராஜா, கருணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை, புவனேஸ்வரி, கிஷ்ணசாமி, உதயராணி, சந்திரபவானி, கிஸ்ணபாலன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பரிஸில் நடைபெறும்.

*தகவல்:*
மைத்துனி
அ.புவனேஸ்வரி

*51, சுப்பிரமணியம் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

## கண் பரிசோதனை

யாழ்ப்பாணம், நவ.9

கோப்பாய் பிரதேச செலயகத்தில் கம்பஹா மாவட்டத்திலிருந்து வருகை தந்த 'செனல் அய் ஒப்டிகல்' நிறுவனத்தினர் இலவச கண் பரிசோதனையை நேற்று முன்தினம் வழங்கினர்.

இதன் மூலம் கிட்டத்தட்ட 500 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். குறைந்த விலையில் மூக்குக் கண்ணாடிகளையும் இவர்கள் பொதுமக்களுக்கு வழங்கியுள்ளனர் எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (203-...)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### யா/அளவெட்டி வடக்கு அ.மி.த.க.பாடசாலை அளவெட்டி

**2009 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம்:-**



| கிருபாகரன் விநோஜன் | சிறீகரன் திஸாணன் | ஜயாத்துரை சிவாம்சன் |
|---|---|---|
| 161 புள்ளிகள் | 148 புள்ளிகள் | 144 புள்ளிகள் |

அண்மித்த புள்ளிகளைப் பெற்றவர்கள்:
உ.கபியங்கா,
சி.ஜேனுகா, த.தர்சிகா.
இம்மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரையும் ஒத்துழைத்த பெற்றோர்களையும் உளமாரப் பாராட்டுகின்றோம்.

(90759)
**பாடசாலைச் சமூகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சைக்கு இரண்டு மாதங்கள்தான் படித்தேன் யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் தேசிய ரீதியில் முதலிடம் பெற்றிருப்பேன்

## 162 புள்ளிகளைப்பெற்றஅல்லாரை நலன்புரி நிலைய மாணவன் நிலவன் கூறுகிறார்



வடமராட்சி கிழக்கினை சொந்த முகவரியாகக் கொண்டிருந்த நான் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் எனது சகோதரி உட்பட அனைத்துச் சொத்துக்களையும் இழந்துவிட்டேன். அப்பா, அம்மாவுடன் தற்காலிக இடைத்தங்கல் முகாமில் வசித்து வந்த வேளை எனது அப்பா ஜெயந்திரன் அதிபராக கடமை யாற்றிய செம்பியன்பற்று றோ.க. த.க. பாடசாலையில் முதலாம் தரம் கல்வியில் இணைந்தேன். பின் உடுத்துறை ம.வியில் இரண்டாம் தரம் கல்வியினைக் கற்றுக் கொண்டிருந்த வேளை 11.08.2006 இல் எமது பகுதியில் ஏற்பட்ட யுத்த அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்தோம்.

கண்டாவளைப் பகுதிக்குச் சென்று அங்கு கண்டாவளை ம.வியில் இரண்டாம் தரத்திலிருந்து மிகுதிக் காலத்தினையும் அடுத்து மூன்றாம் தரம் கற்று, நான்காம் தரம் கற்றுக்கொண்டிருந்த வேளையில் வன்னியில் மீண்டும் யுத்த சூழல் மிக மோசமடைந்திருந்தது.

இதனால் எமது பாடசாலை இடம் பெயர்ந்த மக்களின் அகதி முகாமாக மாறியது. அதனைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டு தை மாதம் கண்டாவளையிலிருந்து எனது அப்பா, அம்மா, தம்பியுடன் இடம்பெயர்ந்தோம்.வன்னியில் பல இடங்களிலும் வாழ்ந்து இறுதியாக புதுமாத்தளன் பகுதிக்குச் சென்று (அங்கு நாம் பட்ட துன்ப, துயரங்கள் எழுத்தில் வடிக் முடியாதவை) அப்பா அங்கு காயமடைந்தார்.

எவ்வித உடைமைகளும் இல்லாத நிலையிலும் (எனது புத்தகங்கள் உட்பட) கடல் வழியாக உயிர் தப்பி 2009 ஆம் ஆண்டு சித்திரை மாத இறுதியில் பருத்தித்துறை ஊடாக வந்து கொடிகாமம் இடைத்தங்கல் முகாமில் இரண்டு மாதங்கள் தங்கினோம். பின்பு கொடிகாமம் அல்லாரை நலன்புரி நிலையத்தில் சேர்க்கப்பட்டோம். அங்கு அமைக்கப்பட்ட எழுதுமட்டு வாழ் அ.த. க.பாடசாலையில் எனது ஐந்தாம் தர வகுப்புக்கள் ஆரம்பமாகியது. முக்கியமாக 2008 ஆம் ஆண்டின் அரைவாசிக் காலப் பகுதியிலேயே பாடசாலைக் கல்வியை இழந்த எனக்கு 2009 ஆம் ஆண்டு நடுப்ப குதியில் அல்லாரையில் தொடங்கப்பட்ட பாடசாலையில் கல்வியைத் தொடர்வது பெரும் சிரமமாக இருந்தது.

இருந்தும் எனது விடாமுயற்சியினாலும் எனது அப்பா, அம்மாவின் உதவியினாலும், முகாமில் எந்தவிதமான பரீட்சை நூல்களும் இல்லாதபோதும் எனக்குப் படிக்கப் பயிற்சிப் புத்தகங்களை வெளியில் இருந்து பெற்றுத்தந்த மாமாவின் (அருட் செல்வன்-கற்கோவளம்) உதவியினாலும் எனக்கு ஆங்கிலத்தைச் சொல்லித்தந்த எனது மேனாகாச் சித்தியினது உதவியாலும் (சுதர்சினி ஆசிரியை) இத்தகைய புள்ளிகளைப் பெற முடிந்தது.

குறிப்பாக அல்லாரை நலன் புரி நிலையப் பாடசாலையில் எனக்கு கற்றலுக்கு உதவிய ஆசிரியர்களினதும் அதிபரினதும் வழிகாட்டலும் நான் ''இரண்டு மாதம் மட்டும்'' படித்த நிலையில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி மாவட்டத்தில் 162 புள்ளிகளைப் பெற்று மாவட்ட நிலை 5 ஐயும் பெற்றேன்.

இதிலிருந்து என்னால் உணரக்கூடியது என்னவென்றால் எந்தவொரு தடைகள் வந்தாலும், படிப்பதற்கு எவ்வித இடையூறுகள் நேரிட்டாலும் பரீட்சையை எதிர்கொள்வதற்கான காலநேரம் போதாமலிருந்தாலும் விடாமுயற்சியும் சரியான வழிகாட்டலும் இருந்தால் எந்தப் பரீட்சையிலும் வெற்றி பெறலாம் என்பதாகும்.

இருந்தும் எனக்குத் தற்போது இருக்கும் ஆதங்கம் யாதெனில் இங்குள்ள மாணவர்களைப் போன்று எந்தவித இடப்பெயர்வுகளைச் சந்திக்காமலும் சிறு வயதிலேயே துன்ப, துயரங்களை அனுபவிக்காமலும் இருந்திருந்தால் எமது மாவட்டத்தின் அதிக புள்ளியான 175 புள்ளிகளை விட உயர் புள்ளிகளைப்பெற்று அகில இலங்கை ரீதியில் முன்னிலையில் வந்திருப்பேன் என்பதாகும். ✱

சந்திப்பு:
**கர்ணன்**

# மு.கா. மீண்டும் முருங்கை மரத்தில்!

வேதாளம் மீண்டும் முருங்கை மரம் ஏறியிருக்கின்றது. ஐ.தே.கவுடன் முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் கூட்டு வைத்துள்ளமை பற்றித்தான் கூறுகின்றோம்! ஐ.தே. கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் மு.காங்கிரஸ் இப்போதைக்கு இணைந்து கொள்வதென்பது புத்திசாலித்தனமான விடயமல்ல என்றும், அவ்வாறு அவசரப்பட்டு இணைந்து கொள்வதை கட்சியின் அதியுயர் பீடம் கூட விரும்பவில்லை என்றும் மு.காங் கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் கூறி, ஒருவாரம் கூட முடிவடையாத நிலையில் தான் - இந்த இணைவு இடம்பெற்றிருக்கிறது!

பஷீர் சேகுதாவூத் கூறியதன் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போது - இங்கு பாரியதொரு சந்தேகம் எழுகிறது. அதாவது, ஐ.தே.க. தலைமையிலான எதிர்க் கட்சிகளின் கூட்டணியில் அவசரப்பட்டு இணைந்து கொள்வதை, கட்சியின் அதியுயர் பீடமே விரும்பவில்லை என்றால், பிறகு - யாரின் விருப்பத்தை முன்னிறுத்தி இந்த இணைவு இடம்பெற்றுள்ளது? ஹக்கீமுக்கும் - ஐ.தே.க.வுக்குமிடையிலான தீராத காதலின் தொடர்ச்சிதான் இந்த இணைவு என்கிறார்கள் பலர்!

இந்த அரசு சிறுபான்மையினருக்கு எதிராகப் பல நடவடிக்கைகளை தொடர்ச்சியாகச் செய்து கொண்டு வருகிறது என்பதில் இரண்டு பட்ட கருத்துக்கள் இல்லை! அதற்காக மு.காங்கிரஸ் ரணிலுடன் போய்க் கைகோர்த்து நிற்பதென்பது எந்தளவுக்குப் புத்திசாலித்தனமான விடயம் என்பது தான் பலரினதும் கேள்வியாகும்!

ரணில் தலைமையிலான கட்சி அல்லது கூட்டணி யொன்றை - தேர்தலொன்றில் வெற்றி பெற வைப்ப தென்பது கல்லில் நாருரிக்கும் வேலை! 2002 ஆம் ஆண்டு இந்த நாரினை மு.காங்கிரஸ் முன்னின்று உரித்து

**மப்றூக்**

எடுத்து - ரணிலை பிரதம மந்திரியாக்கிப் பார்த்தது. ஆனால் நடந்தது என்ன? என்று கேட்கின்றார் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த மு.கா.வின் மூத்த உறுப்பினர் ஒருவர்! தொடர்ந்து - அவரின் கேள்விக்கான பதில்களை அவரே இவ்வாறு வரிசையும் படுத்தினார்

✱ யுத்த நிறுத்த உடன்படிக்கையில் முஸ்லிம்களை ரணில் புறக்கணித்தார்.

✱ வாழைச்சேனையில் முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டு அவர்களின் ஜனாஸாக்கள் பல அரச உயரதிகாரிகள் முன்னிலையில் எரிக்கப்பட்டபோது ரணில் சும்மாவே இருந்தார்.

✱ மூதூரில் முஸ்லிம்கள் புலிகளால் தாக்கப்பட்டபோது ரணில் எதுவும் செய்யவில்லை.

✱ அந்த நிலையில் மூதூருக்கு சென்ற ஹக்கீம், அங்கு ரணில் வந்தால்தான் மூதூரை விட்டு தான் வருவார் எனக் கூறி காலக்கெடு விதித்திருந்தார். ஆனால், ரணில் திரும்பியே பார்க்கவில்லை. இப்படியான ஒருவருடன் இத்தனை அவசரப்பட்டுக் கொண்டு போய்ச் சேர்வதற்குக் காரணம்தான் என்ன? முஸ்லிம்களின் நலனா, அல்லது தனிநபர் விருப்பா? என்று கேட்கும் அந்த மூத்த உறுப்பினரின் கேள்விக்கு மு.கா. நிச்சயம் பதில் கூறியே ஆக வேண்டும்.

எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் மு.காங்கிரஸ் இணைவதா, இல்லையா என்பது பற்றிய கருத்துக்களையும், ஆலோசனைகளையும் மாவட்ட மட்டங்களில் மு.கா. பெற்றுக் கொள்ளப்போவதாகவும், அந்த ஆலோசனைகளையெல்லாம் கவனத்திற் கொண்டே கூட்டணியில் சேர்வது குறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்றும் அந்தக் கட்சியின் செயலாளர் எம்.ரி. ஹசன் அலி கூறியிருந்தார். ஆனால், அப்படியெதுவும் நடைபெற்றதாகத் தெரியவேயில்லை!


ஐ.தே.க. தலைமையிலான கூட்டணியில் மு.கா. இணைந்து கொள்வதிலோ அல்லது இணைந்து கொண்டதிலோ - அதிகமான மு.கா. ஆதரவாளர்களுக்கு விருப்பமேயில்லை என்பது தான் நிலைவரமாகும். ஆனால், மக்களின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் தலைமைத்துவங்கள் இழுபட்டுக் கொண்டு செல்லக் கூடாது. மக்களை நமது முடிவுகளின் பின்னால் அணிதிரளச் செய்ய வேண்டும். ஒரு நல்ல தலைமைத்துவத்துக்கு அது தான் அழகு என்று - தத்துவம் பேசுகின்றனவாம் மு.கா.வின் சில தலைகள்!

ஐ.தே.க. கூட்டணியோடு மு.காங்கிரஸ் இப்போது இணைந்திருக்கிறது. இந்த நிலையில், எதிர்வரும் தேர்தலொன்றின்போது மு.காவின் நிபந்தனைகளையெல்லாம் அரச தரப்பு ஏற்றுக் கொண்டு தமது அணியில் வந்து இணைந்து கொள்ளுமாறு அழைப்பொன்றை விடுக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அந்த நிலையில் மு.கா. எடுக்கும் நிலைப்பாடு எதுவாக இருக்கும் என்பது பற்றி - மு.காவின் தலைமைத்துவம் இப்போதே சொல்லி வைக்க வேண்டும் என்கிறார் மு.காங்கிரஸின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர்!

இவைகள் ஒருபுறமிருக்க, எதிர்க்கட்சிக் கூட்டணியின் பங்குதாரர்களில் ஒருவரான மனோ கணேசன் பாரியதொரு குண்டொன்றைக் கையில் வைத்துக்கொண்டு தான் கூட்டணி உடன்படிக்கையில் கையொப்பத்தை வைத்திருக்கின்றார். அதாவது, எதிர்க் கட்சிகளின் கூட்டணியானது ஜெனரல் சரத் பொன்சேகாவை பொதுவேட்பாளராக நியமிக்குமாயின், அதை தனது கட்சி ஆதரிக்கப் போவதில்லை என்பது தான் அந்தக் குண்டு. எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இணைந்து கொள்ளாத தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பொன்சேகாவை ஆதரிக்கப் போவதில்லை என்றுதான் அறிவித்திருக்கின்றார்கள்.

ஆனால், பொது வேட்பாளருக்கு மிகவும் பொருத்தமான நபர் சரத் பொன்சேகா தான் என்பதே எதிரணியில் இருக்கும் அநேகரின் அபிப்பிராயமாகும். அப்படியென்றால், எதிர்க்கட்சிக் கூட்டணியின் பங்குதாரர்கள், இரண்டு பட்ட கருத்துக்களை வைத்துக் கொண்டுதான் ஒன்றுபட்டிருக்கின்றார் கள்! அத்திவாரமே உதைக்கிறது!!

ஐ.தே.கட்சியுடன் மு.காங்கிரஸ் கூட்டு வைத்துக் கொண்ட போதெல்லாம், அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களை அந்தக்கட்சி பெற்றிருக்கின்றது. மு.கா.வின் இதுவரையிலான வரலாற்றில் அந்தக்கட்சி பெற்றுக்கொண்ட அதிகப்படியான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையானது 12 ஆகும். ஐ.தே.க. கூட்டணியில் இணைந்திருந்த போது தான் - அவ்வாறானதொரு எண்ணிக்கையினை மு.கா.வால் பெற்றுக் கொள்ள முடிந்தது. அப்படிப் பார்த்தால், தற்போதைய கூட்டணியைப் பயன்படுத்தி இம்முறையும், மு.காங்கிரஸ் அதிகமான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக் கொள்ளலாமல்லவா? அது மு.கா.வுக்கு லாபமில்லையா என்று எதிர்க்கட்சிக் கூட்டணியில் மு.கா. இணைந்து கொண்டதை எதிர்த்துப் பேசிய நண்பர் ஒருவரிடம் நாம் கேட்டோம்.



வார்த்தைகளால் அவர் - நமது நெற்றிப் பொட்டில் அடித்தார்! முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்கெல்லாம் தீர்வு - அதிகப்படியான முஸ்லிம் பா.உ.களைப் பெறுவதுதானா? மு.காங்கிரஸ் அவ்வாறு அதிகப்படியான நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட போதெல்லாம் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் தீர்ந்ததா? இல்லையே! அப்படியென்றால், முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளுக்குத் தீர்வினைத் தராததொரு விடயத்தை அடைவதற்காக மு.காங்கிரஸ் ஏன் அலைய வேண்டும் என்று கேள்வி மேல் கேள்விகளால் துளைத்தெடுத்தார் அந்த நண்பர்! அவரின் கேள்விகள் மு.கா.வுக்குச் சமர்ப்பணம்!!

ஐ.தே.க. தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணியின் பின்னணியில் நோர்வே தரப்பு இயங்குவதாக பாமர மக்களே பேசிக் கொள்கின்றார்கள். இன்னொரு புறம், நோர்வேக்காரர்களின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாகவே ஹக்கீம் செயற்படுகிறார் என அதாவுல்லா தரப்பினர் பெருமெடுப்பில் பிரசாரம் வேறு செய்து வருகின்றனர். இந்த நிலையில் - ஐ.தே.க. கூட்டணியோடு அவசரப்பட்டுப் போய் ஹக்கீம் கையெழுத்திட்டமையானது பஷீர் சேகுதாவூத் சொன்னதுபோல அத்தனை புத்திசாலித்தனமான செயலாகத் தெரியவில்லைதான் என்று மு.கா.வின் அதியுயர் பீட உறுப்பினரொருவரே நம்மிடம் கூறுகின்றார்!

இதேவேளை, நாடாளுமன்றத் தேர்தலொன்றை முன்னிறுத்தியே இந்த எதிர்க் கட்சிக் கூட்டணயில் மு.கா. இணைந்துள்ளதாகவும், ஜனாதிபதித் தேர்தலொன்றின் போது, இரண்டு தரப்பாருடனும் தமது கட்சி மீண்டும் பேசுமெனவும் தலைவர் ஹக்கீம், கட்சியின் அதியுயர்பீட உறுப்பினர்களின் கூட்டத்தின் போது உறுதிபடக் கூறியிருகின்றார். அப்படியென்றால், கூட்டணியில் இணைந்து ஒப்பமிட்ட உடன்படிக்கையினை மு.கா. தலைமை பகிரங்கப்படுத்த வேண்டும். இதில் ஒளிவு மறைவெல்லாம்இருக்கக் கூடாது என்று கேட்கின்றனர் மு. கா. ஆதரவாளர்கள்!

சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்தவரையில் அவைகள் ஒருபோதும் ஒற்றையடிப் பாதைகளால் பயணிக்கக் கூடாது. அதாவது, ஒரு தரப்பினர் மீதான வைராக்கியங்களை அல்லது தீராத காதலை வைத்துக் கொண்டு, குறித்த ஒரு தரப்புக்கே ஆதரவு எனும் நிலைப்பாட்டில் இருத்தல் ஆகாது. அது அந்தச் சிறுபான்மைக் கட்சி பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சமூகத்துக்கும் நல்லதல்ல!

எனவே, சிறுபான்மைக் கட்சிகள் எப்போதும் தமது கைகளில் மாற்று வழிகளை வைத்திருந்தே ஆக வேண்டும்.

நம்மிடம் மாற்று வழி இல்லை யென்றால், நாம் சார்ந்து நிற்கும் பெருந் தேசியக் கட்சியே நம்மை ஒரு நிலையில், கணக்கெடுக்காதும் போய் விடலாம்!

எது எப்படியோ மு.கா. தரப்பார் இப்போது அவசர மாய் இரண்டு விடயங்களை நிரூபிக்க வேண்டியிருக்கிறது.

ஒன்று: மு.கா. ஒற்றையடிப்பாதையில் பயணிக்கவில்லை.

இரண்டாவது: ஹக்கீம் வேதாளமில்லை! ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாவட்ட வலம் - பதுளை

கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை, டிசம்பர்-2009
General Certificate of Education (Ord.Level) Examination, December-2009

## விஞ்ஞானம் - I

34-T-I

* இல. 01- 40 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட விடைகளுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. கலம் ஒன்றில் சக்தி உடைப்பில் பங்குகொள்ளும் புன்னங்கம்,
1) கரு. 2) கொல்கியுடல்.
3) இழைமணி. 4) இலைசோசோம்.

02. 3 ஆம் கூட்ட அணு ஒன்று அயன் ஆனபோது அது +3 என வகைக்குறிக்கப்பட்டது. இதன் இலத்திரன் கட்டமைப்பு பின்வரும் எவ் அணுத்திணிவினை ஒத்துக் காணப் படும்?
1) He 2) Ne 3) Ar 4) Cl

03. குறித்த ஓர் அங்கி,
* இடப்பெயர்ச்சிக்கு 4 கால்கள். * செதில்கள் உடைய தோல்.
* முட்டை இட்டு இனத்தைப் பெருக்கும்.
இவ் அங்கி அடங்கும் வகுப்பு,
1) ஊர்வன. 2) முலையூட்டி. 3) பறவை. 4) மீன்கள்.


04. மனிதத் தசைத்தொகுதி ஒன்று அவதானிக்கப்பட்டபோது இருமுனை கூரான, அகன்ற கருவைக் கொண்ட தசைக்கலம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இது,
1) மழமழப்பான தசை. 2) வன்கூட்டுத்தசை.
3) இதயத்தசை. 4) வரித்தசை.

05. மண்ணெண்ணெயில் சேமித்து வைக்கக்கூடிய உலோகம் ஒன்று நீருடன் தாக்க மடையும்போது நீரின் மேல் "ஸ்" என்ற ஒலியுடன் அசைந்து திரியும். இவ்வுலோகம் பின்வருவனற்றுள் எது?
1) Cu 2) Hg 3) Mg 4) Na

06. திரவநிலையில் காணப்படும் உலோகம் ஒன்று,
1) Au 2) Hg 3) Ag 4) Mg

07. $60ms^{-2}$ வேகத்தில் செல்லும் கார் ஒன்று தடுப்பு பிரயோகித்து 10S களில் ஓய்வுக்கு வந்தது. எனின், காரின் அமர்முடுகலைக் கணிக்குக.
1) $600ms^{-2}$ 2) $60ms^{-2}$ 3) $6ms^{-2}$ 4) $0.6ms^{-2}$

08. பொருள் ஒன்றின் வேகம் நேரமாற்றத்துடன் மாறாது காணப்படின் அதற்கான வேக நேர வரைபு பின்வருவனவற்றுள் எது?




09. விலங்குக்கலம் ஒன்றில் இருந்து தாவரக் கலத்தைப் பிரித்துக்காட்டும் புன்னங்கம்/ புன்னங்கங்கள்,
1) கலச்சுவர், கரு 2) பச்சையவுருமணி.
3) புன்வெற்றிடம், கொல்சியுடல்
4) பச்சையவுருமணி, முதலுருமென்சவ்வு.

10. அணு தொடர்பான ஆராய்ச்சியின்போது 1932ஆம் ஆண்டு நியூத்திரனைக் கண்டு பிடித்தவர்,
1) J.J.தொம்சன். 2) ஜோன் தாற்றன்.
3) சட்விக். 4) இரதபோட்.

11. பின்வருவனவற்றுள் இரண்டாம் இயக்கச்சமன்பாடு எது?
1) $S = (v + u)/2t$ 2) $V = u + at$
3) $V^2 = u^2 = 2as$ 4) $S = ut + y, at^2$

12. வீட்டுமின்சுற்று ஒன்றில் பரம்பல் பெட்டிற்கு பதிலாக தற்போது பயன்படுத்துப் படும் உபகரணம் எது?
1) மின்மானி. 2) இடறுசூளி.
3) சேவை உறுதி. 4) துண்சுற்றுடைப்பான்.

13. தேங்காய் எண்ணெய், கிளிசரின் ஆகிய இரண்டும் பார்ப்பதற்கு ஒரே தன்மை உடையவை. இவற்றை நீரில் இட்டதும் பெறக்கூடிய அவதானம் முறையே,
1) தேங்காய் எண்ணெய் → நீர் → கிளிசரின்.
2) நீர் → தேங்காய் எண்ணெய் → கிளிசரின்.
3) தேங்காய் எண்ணெய் → கிளிசரின் → நீர்
4) நீர் → தேங்காய் எண்ணெய் → கிளிசரின்

14. இலத்திரனியல் மின்சுற்று ஒன்றில் முன்முகக்கோடலில் ஒரே அளவு மின்னோட்டத் தையனுப்பப் பயன்படுத்தப்படும் உாகரணம் (இலத்திரனியல்கூறு)
1) திரான்சிஸ்டர். 2) சேனர் இருவாயி.
3) இருவாயி. 4) கொள்ளவி.

15. மின்காந்தத்தின் வலிமையை அதிகரிக்கச் செய்ய வேண்டிய யுக்திகள்,
1) மின்னோட்டத்தை அதிகரிகத்தல். 2) முறுக்குகளை அதிகரித்தல்.
3) தூய இரும்பு பயன்படுத்தல். 4) மேற்கூறிய யாவும்.


16. நீர்தாங்கி ஒன்றில் 5m ஆழத்தில் உள்ள புள்ளியில் நீரினால் ஏற்படுத்தப்படும் அமுக்கம்,
1) $5m/100 \times 4200kgm^{-3} \times 9.8ms^{-2}$ 2) $100 \times 5m \times 4200kgm^{-3} \times 9.8ms^{-2}$
3) $5m \times 4200kgm^{-3} \times 9.8ms^{-2}$ 4) $100/5m \times 4200kgm^{-3} \times 9.8ms^{-2}$

17. பின்வரும் சந்தர்ப்பங்களில் விசை சமநிலைபடுத்தப்படும் சந்தர்ப்பம்,
1) துலாத்தராசு. 2) கயிறிழுத்தல் போட்டி.
3) கல்புரட்டு. 4) கப்பியில் நீரிழுத்தல்.

18. வாகனம் ஒன்றில் உள்ள சுக்கான் பின்வரும் எவ் எளிய பொறி வகையைச் சேர்ந்தது,
1) நெம்பு. 2) கப்பி.
3) சில்லும் அச்சாணியும். 4) சாய்தளம்.

19. பரப்பளவைகூட்டி அமுக்கத்தை குறைக்க வேண்டிய சந்தர்ப்பம்,
1) அலவாங்கில் குழிபோடுதல். 2) மிதிவெடி அகற்றுவோர் பாதணி.
3) கூறியகத்தியால் வெட்டுதல். 4) நாற்காலி காலை கூறாக்குதல்.

20. மாணவர் குழுக்களுக்கு வோல்ற்மானி, அம்பியர்மானி என்பவற்றை மின்சுற்றில் இணைக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. இவ்விணைப்புக்களில் எது சரியானது?





21. தாவர இலை ஒன்றில் ஒளித்தொகுப்பு நடைபெறும் இடம்,
1) மேற்றோல்கலம். 2) வேலிக்காற்கலம்.
3) கடற்பஞ்சுக்கலம். 4) இலைவாய்க்கலம்.

22. முதிர்ந்த இறப்பர் மரத்தில் இறப்பர் பாலை பெறவேண்டுமாயின் மேற்றோல் எந்தளவு சீவப்பட வேண்டும்?
1) உரியம். 2) மரவுரி. 3) மேற்பட்டை. 4) மாறிழையம்.

23. தனி ஒரு கலமாக காணப்படும் அங்கிகள்,
1) இயூசிலீனா. 2) மியூக்கர்.
3) மண்புழு. 4) கடல் அணிமணி.

24. ஒளித்தொகுப்புக்கு காபனீரொட்சைட்டு அவசியம் எனக் காட்டுவதற்கான பரிசோதனை மாதிரி படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதில் X எனக் குறிப்பிடப்படும் பதார்த்தம்,
1) $CuSO_4$ 2) KON
3) $AgNO_3$ 4) $Pbd^2$




25. பின்வரும் உபகரணத் தொகுதியில் 2 ஆம் வகை நெம்பாக அமையும் கூட்டம்,
1) கத்தரிக்கோல், குறடு, சுத்தியல்.
2) பாக்குவெட்டி, மூடித்திறப்பான், ஒற்றைச்சில்லுவண்டி.
3) சாவணம், தனலிடுக்கி, மூடித்திறப்பான்.
4) சுத்தியல், பாக்குவெட்டி, சாவணம்.

26. சில விலங்குகள் (அங்கிகள்) வாழ்க்கை வட்டத்தை நீரிலும் பின்னர் தரையிலும் வாழும். ஆனால், பின்வரும் ஒரு அங்கி தரையில் இனப்பெருக்கத்தை மேற் கொண்டு நீரில் வாழும். அது எது?
1) ஓணான். 2) பென்குயின். 3) கடலாமை. 4) கடற்சிங்கம்.

27. விமலின் தந்தை தனது உடலின் வெல்லச்செறிவை கட்டுப்படுத்த ஊசி மூலம் ஓர் ஓமோனை உடலில் புகுத்துகிறார். அது பின்வருவனவற்றுள் எதுவாக அமையும்,
1) தரைரொக்சின். 2) இன்சுலின். 3) அதரினலின். 4) பித்தம்.

28. துண்டலின் திசைக்கும் துலங்களின் திசைக்கும் சம்பந்தம் இல்லாத ஓர் அசைவு,
1) தாவரம் ஒளிக்கு திரும்புதல். 2) தொட்டாற்சுருங்கிசுருங்குதல்.
3) பூக்கள் மலர்தல். 4) இலைகள் உதிர்தல்.

29. இலைவாய் தவிர்த்து தாவரத்தில் சுவாசம் நடைபெறும் இடம்,
1) பட்டை வாய். 2) மேற்றோல். 3) காழ். 4) உரியம்.

30. பின்வரும் தாக்கங்களில் வாயு வெளியேறும் சந்தர்ப்பம்,
1) $CaCO_3 \rightarrow$ 2) $Mg + O_2 \rightarrow$
3) $MgCl_2 + Na \rightarrow$ 4) $AgNO_3 + K \rightarrow$

31. ஐதான ஐதரோக்குளோரிக்கமிலத்தில் உள்ள அணுக்கள் பின்வரும் எப்பிணைப் பில் அமைந்து காணப்படும்?
1) அயன்பிணைப்பு. 2) பங்கீட்டுப்பிணைப்பு.
3) சங்கிலிபிணைப்பு. 4) ஈதர்பிணைப்பு.

32. கருக்கவர்ச்சி தொடர்பாக பின்வருவம் கூற்றுக்களுள் சரியானது,
A - சக்தி மட்டங்கள் அதிகரிக்க கருக்கவர்ச்சி அதிகரிக்கும்.
B - சக்தி மட்டங்கள் எண்ணிக்கை அதிகரிக்க கருக்கவர்ச்சி குறையும்.
C - சக்தி மட்டங்களுக்கும் கருக்கவர்ச்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.
1) A 2) B 3) C 4) யாவும் பிழை.

33. $HCl + NaOH \rightarrow NACl + H_2O$ மேற்படித் தாக்கம்,
1) நடுநிலையாக்கல் தாக்கம் 2) இரசாயன பிரிகை தாக்கம்.
3) இரசாயன சேர்கை தாக்கம்.
4) மின்பகுப்புத் தாக்கம் என அழைக்கப்படும்.

34. சோடாஅமில தீயணை கருவி ஒன்றினை அவதானித்த மாணவன் அதன் பெயர்ச் சுட்டியில் பின்வரும் எச் சேர்வைகள் பெயர்க்கப்பட்டிருப்பதைக் கண்டிருப்பான்?
1) திரவ $CO_2$ 2) $KHCO_3$, $NaHCO_3$
3) $NaHCO_3$, $H_2SO_4$ 4) $NaCl + CaCO_3$

35. ஐதரசன் வாயுவின் வரத்தக ரீதியான பயன்பாடுகளாக அமைவன,
A - அலங்கார விளக்குகள் தயாரிக்க.
B - தாவர எண்ணெயில் மாஜரின் பிரித்தெடுத்தல்.
C - ரொக்கற் எரிபொருள். D - உலோகங்கள் ஒட்டுவதற்கு.
1) A, B 2) B, C 3) C, D 4) A, B, C, D

36. பின்வரும் தாக்கங்கள் இரும்பு பிரித்தெடுப்பின்போது அமையும் தாக்கங்களாகும். அவை ஒழுங்கற்ற முறையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை ஒழுங்குபடுத்தினால் அமையும் சரியான அமைப்பு எது?
1 - $CaCO_3 \rightarrow CaO + CO_2$ 2 - $Fe_2O_3 + 3CO \rightarrow 2Fe + CO_2$
3 - $CaO + SiO_2 \rightarrow CaSiO_3$ 4 - $CO_2 + C \rightarrow 2CO$
5 - $C + O_2 \rightarrow CO_2$
1) 2,4,5,1,3 2) 1,2,5,3,4 3) 3,2,5,4,1 4) 5,1,4,2,3.

மறுபக்கம் பார்க்க....

ஆசிரியர்: G.ஜெயானந்தன்,
கோணகல தமிழ் மகா வித்தியாலயம்,
பசறை. 072-4684299

இன்றைய விஞ்ஞான பாட மாவட்டவல செயற்றிட்டத்திற்கு அனுசரணை வழங்குவது

NSP®
ஸ்ரீ லங்கா
அப்பியாசக் கொப்பிகள்

எழுத்துக்களுக்கு மேலும் அழகு சேர்க்கும்
உங்கள் தோழன்

★ இறக்குமதி செய்யப்பட்ட உறுதியான தரமான வெள்ளை கடதாசி
★ ஒவ்வொரு பக்கமும் புதியது போன்ற உணர்வு
★ இருபக்கத்திலும் எவ்வித தடையும் இல்லாமல் அழகாக எழுதக் கூடிய தடிப்பம்
★ எழுதத்தூண்டுவதுடன் உங்கள் சிந்தனை வேகத்தையும் தூண்டும்

இன்றே NSP கொப்பிகளை வாங்கி ஏனைய அப்பியாசக் கொப்பிகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்
NSP இன் சிறப்பை நீங்களாகவே உணர்வீர்கள்

N0 5, Sangamitta Mawatha, Colombo 13, Sri Lanka. Tell: 94-11-2 323 581, Fax: 94-11-2 342 911

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Language - II

31-T-II

## Answer all Questions

Test: 09.

Complete the letter below with suitable words from the box.

**badly-paid, well-behaved, part-time, five minutes, four-months-old, easy - going, brand - new six years-old, well - off**

Dear Martha,

Well, I have survived the long flight and finally arrived in London, I have been incredibly lucky. I found a job, the day after I arrived here. I am staying with an English family and I am looking after the children. It's only a ................ job, so I will be free in the mornings and evenings. The family is really nice, very relaxed and ..............., and the house is big and beautiful, so they are obviously quiet ........................ What's more, they have got a ........................ car which I am allowed to drive when I am collecting the children from school. There is a .................. .......................... baby and ..................... twins who are very ................ children, which makes life easy and it's near Wimbledon - only a .......................... walk from the famous Tennis club. The only problem is that looking after children is a .................. job. But of course I have got free accommodation. Why don't you come and see me?

Love, Erica.

Test:10

Read the following text and answer the questions.

Marie Curie was born in Warsaw in 1867. Though she was Polish by birth, she went to the University of Sorbonne in Paris,to study Chemistry. In 1895, while still a student, Marie married Pierre Curie, a young graduate doing electrical research.Pierrie and Marie had two children, Irene and Eve. They were a happy family. But their happiness did not last long as Pierrie Curie was killed in a street accident. However, Marie had to continue with her research work and lectures at the university, besides being a loving mother.

On the 3rd of August 1914, she was to go to her daughters who were in Brittany to spend the vacation. But unexpectedly the Germans had entered France without a declaration of war,and she could not go to her daughters. The only means of communication between them was through letters.

1) Pierrie Curie was killed,
   a. In the war. b. in a laboratory accident.
   c. in a street accident.
2) Marie wanted to visit her daughters
   a. In Poland. b. In Brittany. c. In Germany
3) The Germans entered France
   a. in1914. b. in 1895 c. in 1867.
4) German's entered France
   a. without declaring war. b. after declaring war.
   c. as they declared war.
5) Marie communicated with her children
   a. through e-mail. b. through mobile phones.
   c. through letters
6) Marie married Pierrie Curie when she was
   a. 38 years old b. 28 years old c. 18 years old
7) German invasion of France took place when Marie was
   a. 47 years old. b. 57 years old c. 37 years old.

Test - 11

Read the following text and Match the words under A with their meanings under B.

Marie to her daughters, August 1st, 1914

Dear Irene, Dear Eve,

Things seem to be getting worse. Don't be afraid; be calm and courageous. If war does not break out, I shall come and join you on Monday. If it does, I shall stay here and send for you as soon as possible.

Marie to Irene, August 28th, 1914

There is a possibility of a blockade of Paris, in which case we might be cut off. I don't know if I'll be able to leave. If that should happen, endure it with courage, for our personal desires are nothing in comparison with the great struggle that is now under way. Think of your role as elder sister, which it is time you took seriously.

August 31st 1914

I have just received your sweet letter of Saturday. Things are not going very well. We need great courage. We must keep our certainty that after the bad days the good times will come again. It is in this hope that I press you to my heart, my beloved daughters.

| | |
|---|---|
| 1 - afraid | a - likes, wishes |
| 2 - calm | b - be sure of/ not doubt |
| 3 - courageous | c - separated |
| 4 - blockade | d - brave/ strong |
| 5 - cut off | e - frightened |
| 6 - endure | f - fight, war |
| 7 - desires | g - siege |
| 8 - struggle | h - peaceful |
| 9 - certain | i - bear with |

Test - 12

Ring round the words in these lines and write the correct word in the space provided. No - 01 is done for you.

| | | |
|---|---|---|
| Mary and Julia is two sisters. | 01) | .......are...... |
| Mary teach English in a college. | 02) | ................... |
| and Julia works to a bank. | 03) | ................... |
| Julia is young than Meena. | 04) | ................... |
| The two sisters wear their hair long. | 05) | ................... |
| Mary like eating ice-cream while. | 06) | ................... |
| Julia likes eat fast food. | 07) | ................... |
| Mary is interesting in sports. | 08) | ................... |
| but Julia is fond in music. | 09) | ................... |
| Julia is marriage to Martin. | 10) | ................... |
| He is a electronic engineer. | 11) | ................... |
| Mary's husband is a rich businessmen. | | |
| Mary has two sons. Julia has a daughter and a son. | | |

Test - 13

Change the following sentences into the Passive Voice. The first one is done for you.

1) They manufacture cars in India.
   Cars are manufactured by them in India.
2) Someone sweeps the room daily.
   ..........................................................................
3) They have completed the construction.
   ..........................................................................
4) They are holding the meeting today.
   ..........................................................................
5) The workers repaired the road.
   ..........................................................................
6) The chief guest will give away the awards.
   ..........................................................................

Test - 14

Turn the following sentences from direct to indirect speech. The first one is done for you'

1) He said" My father is ill"
   He said that his father was ill.
2) Mary said" I shall pay the money next week"
   ..........................................................................
3) Tom said" I read this book last year".
   ..........................................................................
4) She said" I am going to church now".
   ..........................................................................
5) He said" I posted the letter yesterday".
   ..........................................................................
6) She said (to me)" You are wrong"
   ..........................................................................

Test - 15

Write a letter to a newspaper complaining that the street lights are not in order in your area. Use about 100 words.

- Say that how long does this problem exist.
- The difficulties to the public of that area.
- request to take immediate action.

Test - 16

Write an essay on one of the following. Use about 200 words.

1) Communication then and now.
2) A Cultural Festival of Sri Lanka.

-END-

## விஞ்ஞானம் I இன் தொடர்ச்சி.....

37. பின்வரும் மூலகங்களில் கொதிநிலைகூடிய மூலகம் எது?
    1) காபன். 2) குளோரின். 3) கந்தகம். 4) ஐதரசன்.

38. சோதனைக் குழாய் ஒன்றில் தூய செப்புத்துண்டுகளுடன் நைத்திரிக் அமிலத்தைச் சேர்க்கும்போது மூக்கை அளிக்கும் கபிலநிற வாயு வெளியேறும். இது,
    1) $Cl_2$ 2) $NH_3$ 3) $H_2$ 4) $NO_2$

39. காபன் மூலம் உற்பத்தியாகும் அடர்த்திகூடிய பெறுமதி மிக்க பொருள்,
    1) வைரம். 2) இரத்தினம். 3) மாணிக்கம். 4) நிலக்கரி.

40. வரட்சியான காலங்களில் மழைபெய்யச் செய்வதற்காகச் சிலர் காடுகளை அல்லது புல்வெளிகளை தீமூட்டுவதுண்டு; இதனால் சில வேளைகளில் மழை பெய்வதும் உண்டு. மேற்படி செயற்பாட்டினால் நடைபெறுவது,
    சூழலில்,
    1) $O_2$ குறைவடைதல். 2) $H_2$ அதிகரித்தல்.
    3) $CO_2$ அதிகரித்தல். 4) காபன் அதிகரித்தல்.

-நிறைவுற்றது-

## விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும் II - தொடர்ச்சி.....

05. ஆசிரியரால் முன்வைக்கப்பட்ட கீழ்வரும் கூற்றிற்கு சாதகமாக மாணவர்களால் கூறப்பட்ட கருத்துக்கள் சில தரப்பட்டுள்ளன.
    ''விளைச்சல் இழப்புக்களை குறைத்தல் உணவுக்காப்பை உறுதி செய்ய உதவும்''
    கருத்துக்கள்:-
    * உணவுப்பொருட்கள் விரயமாவதால் விலை அதிகரிக்கும்.
    * தரமான பொருட்கள் நுகர்வோரைச் சென்றடையாது.
    * உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருட்களின் அளவு குறைகிறது.
    1) a. உணவுக்காப்பு என்றால் என்ன?
       b. உணவுக்காப்பை உறுதி செய்ய அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் 3 தருக.
    2) அறுவடையின்போது ஏற்படும் இழப்புக்களை குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் 3 தருக.
    3) மரக்கறி வகைகள் தற்காப்புச் செய்யப்படும் முறைகள் 3 தருக.

06. ''குடிசைக்கைத்தொழிலாக கோழி வளர்ப்பு'' எனும் தலைப்பில் பத்திரிகையில் வெளிவந்திருந்த கட்டுரை ஒன்று வகுப்பறை விளம்பரப்பலகையில் காட்சி படுத்தப்பட்டிருந்தது.
    1) a. கோழி வளர்ப்பினால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.
       b. கோழி இனங்கள் நோக்கத்தின் அடிப்படையில் எவ்வாறு வகைபடுத்தப்படலாம்.
    2) கோழியில் ஏற்படக்கூடிய பற்றீரியாநோய் ஒன்றினைக் குறிப்பிட்டு அதன் அறிகுறிகளையும் தருக.
    3) பண்ணையில் வளர்க்கப்படும் கோழிகளை நோயிலிருந்து பாதுகாக்க எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் 3 தருக.

07. மாடுகள் இலங்கையில் 3 பிரதான முறைகளில் வளர்க்கப்படுகின்றன அவையாவன: திறந்தவெளி வளர்ப்பு முறை, அரைத்தீவிர வளர்ப்பு முறை, தீவிர வளர்ப்பு முறை.
    1) தீவிர வளர்ப்பு முறை என்றால் என்ன?
    2) a. தீவிர வளர்ப்பு முறையில் மாடுகளுக்கு வழங்கப்படும் பிரதான உணவுகள் 2 தருக.
       b. ஈர நிலையிலுள்ள ஐதுதீன் வகை உணவுகள் 4 தருக.
    3) மாடுகளுக்கான தொழுவத்தை அமைக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள் 4 தருக.

-நிறைவுற்றது-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல்- 2010

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ்.பல்கலைக்கழகத்துடன் தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2009 நவம்பர் 30ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

01. எழுது பொருள்கள்
02. புத்தகங்கள், பருவ வெளியீடுகள், ஏனைய வெளியீடுகள்
03. அலுவலக தளபாடம்- மரம்
04. அலுவலக உபகரணம் (ஸ்ரீல்)
05. அலுவலய இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோ கொப்பி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன)
06. சகல வகையான ஹாட்வெயர் பொருள்கள்
07. பெயிண்டுகள் வாணிஸ்
08. இயந்திர கருவிகளும் உதிரிப்பாகங்களும்
09. மின்சார சாதனமும் உதிரிப்பாகங்களும்
10. வெட்டும் கருவிகளும் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்
11. ஜவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்
12. ஆய்வு கூடச் சாதனங்கள்
13. ஆய்வுகூட இரசாயனப் பொருள்களும், கண்ணாடிச் சாதனங்களும்
14. மரங்கள்- தீராந்தி, பனைமரம், சலாகைகள்
15. கட்டடப் பொருள்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு முதலியன
16. தும்புத்தடி, விளக்குமாறு, கால் துடைப்பங்கள் ஹார்ப்பிக் , விம் முதலியன
17. டயர், ரியூப்புகள், பற்றரிகள்
18. மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்
19. ஆயுர்வேத மருந்துகள்
20. மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
21. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருள்கள்
22. தீயணைப்புச் சாதனங்களும், பாதுகாப்புச் சாதனங்களும்
23. மழைக்கோட்டுக்கள், சேற்றுச் சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன
24. பைப்புக்கள், பைப் இணைப்புக்கள்
25. பிளாஸ்ரிக், பைபர் கிளாஸ் உற்பத்திகள்
26. மட்பாண்டப் பொருள்கள், கண்ணாடிப் பொருள்கள், கண்ணாடிகள்
27. தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயனங்கள் கருவிகள்
28. கணனி உட்பட எலக்ரோனிக் பொருள்கள்
29. கணனி மேசை, கதிரைகள்

### சேவைகள்

01. அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் ஸ்டாம்புகள், திகதி ஸ்டாம்புகள்
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், புகைப்படப் பிரதி பண்ணும் இயந்திரங்கள், பக்ஸ், கொம்பியூட்டர், மின் தட்டச்சு இயந்திரங்கள்) திருத்த வேலைகள்
03. குளிர் சாதனப் பெட்டிகள், எயார் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்
04. ஸ்ரீல் தளபாட திருத்த வேலைகள்
05. மரத் தளபாட திருத்த வேலைகள்
06. கதிரைகள் பின்னுதல்
07. உடைகள், கதவு, ஜன்னல், திரைச்சீலைகள் தைத்தல்
08. பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்
09. உடைகளைச் சலவை செய்தல்
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் பைண்டிங் செய்தல்
11. மோட்டார் வாகனம் திருத்தல்
12. கணனி திருத்த வேலை.

### எந்திரவியல் சேவைகள்

01. மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், ஜெனரேட்டர்கள், குளிரூட்டி என்பன திருத்துதல், மீள முறுக்குதல் உட்பட
02. குடிசார் எந்திரவியல், வேலைகள் கட்டடங்கள் நிர்மாணித்தலும் திருத்த வேலைகளும்
03. மின்சார வயறிங் வேலைகள்
04. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்
05. இரும்பு, அலுமினியம் என்பவற்றாலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும், பொருத்தலும்
06. கட்டடங்கள் / கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங் களுக்கான) உசாத்துணை சேவைகள்
07. நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்தல் / தச்சு வேலை, அலுமினியம் பொருத்துதல்
08. எந்திரவியல் சார் வரைதலும் நீலப் பிரதி செய்தலும்
09. கறையான் / பீடைகள் ஒழிப்பு வேலைகள்
10. தொழிலாளர் வழங்கல் (தரம் சார், தரம் சாரா மற்றும் காவலாளிகள்)

### பதிவு தொடர்பான நிபந்தனைகள்

01. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வழங்கல்கள் சேவைகள் 2010" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
   * **பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என முகவரியிடல் வேண்டும்.**
02. ஒவ்வொரு வழங்கல் / சேவைகளுக்கும் தனித்தனியாக விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டும். ஒவ் வொரு விண்ணப்பப் படிவத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 500 பெறுதியான காசுக்கட்டளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்குப் பெறப்பட்டு யாழ்.தபால் கந்தோரில் மாற்றக் கூடியதாக இணைத்து அனுப்புதல் வேண்டும்.
03. விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் இருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங் களிலிருந்து விலை மனுக்களைக் கோர பல்கலைக்கழகத்துக்கு உரிமையுண்டு.
04. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்குப் பொருள்கள் / சேவைகளை வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருள்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றிப் பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.
05. ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    1. விண்ணப்பிக்கும் வழங்கும் / சேவை
    2. முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயரும் விலாசமும்
    3. தொலைபேசி, தொலைநகல் இலக்கம், மின்னஞ்சல் முகவரி
    4. வியாபாரப் பதிவின் இலக்கமும் திகதியும் (வியாபாரப் பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்).
    5. வியாபாரத்தின் தன்மை
    6. வங்கியாளர்களின் பெயர்
    7. கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்
    8. ICTAD பதிவு இலக்கம் / புத்தக இலக்கம் (எந்திரவியல் சேவை 2இற்கு மட்டும்) ICTAD பதிவு இல்லாது விடின் ரூபா 200, 000 / = இற்கு உட்பட்ட வேலைகளுக்கு கூறுவிலை சமர்ப்பிக்க மட்டுமே தகுதியு டையவராவர்.

    **குறிப்பு:**

    *வியாபாரப் பதிவுப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படாதவிடத்து பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்*
06. விண்ணப்பதாரர் யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் வேலைகளைச் செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன், அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப் பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
07. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலைசெய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக் கலைஞர் ஆகியோரின், பெயர், அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 06இற்கு மட்டும்) தருக.
08. சேவைகளை / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.
09. மேலதிக விவரங்களுக்குச் சிரேஷ்ட உதவி நிதியாளர் (வழங்கல்) உடன் தொடர்பு கொள்ளவும். தொ.பே. இல. 021 222 2644.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(சி/562184)

## பிரதேச சபைகளுக்கு பவுசர் கையளிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல பிரதேச சபைகளுக்கும் பவுசர்கள் வழங்கப்பட்டுள்ளன.

இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் வைத்து யாழ்.மாவட்ட பிரதேச சபைகளின் செயலாளர்களிடம் இவை கையளிக்கப்படவுள்ளன.

(203-111)


IIS
கணனிக்கற்கை நெறிகள்
புதிய பிரிவு ஆரம்பம்

கல்வியாண்டு 2009இற்குரிய இறுதிப்பிரிவு ஆரம்பம்



Diploma Courses

| Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | 4Months |
| Diploma in Desktop publishing | 3Months |
| Diploma in Internet Technology | 4Months |
| Diploma in Hardware Technology | 4Months |
| Diploma in Computer Programming | 6Months |
| Diploma in Computerized Accounting | 4Months |
| Diploma in Audio & Video Editing | 4Months |
| Diploma in Eng Drawing & AutoCAD | 4Months |
| Diploma in DataBase management | 4Months |
| Diploma in Visual Programming | 4Months |

ஆரம்பம்
14/11/2009
காலை 10.00மணி

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100,Clock Tower Road,Jaffna
T.P 021 222 2831 Fax: 021 222 6933


## துயர் பகிர்கின்றோம்



வேளா தோப்பு அம்பாள்
ஆலய பரிபாலன சபையின் செயலாளர்
திரு.ம.சத்தியசீலன்
அவர்களின் அன்புத் தந்தை

**குமாரவேலு மயில்வாகனம்**

(புதுமை நாயக முதலியார்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

வேளாதோப்பு,
கட்டப்பிராய். (90710) **பரிபாலனசபை.**


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1137 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 11 36 39 42

06-11-2009

ஜக்பொட் பரிசு ரூபா. 3,811,950/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 208,961 | 20/- | 4,179,220/- |
| 2 இலக்கங்கள் | 19,229 | 40/- | 769,160/- |
| 1 இல. + லக்கினம் | 18,957 | 60/- | 1,137,420/- |
| 2 இல. + லக்கினம் | 1,748 | 200/- | 349,600/- |
| 3 இலக்கங்கள் | 510 | 1000/- | 510,000/- |
| 3 இல. + லக்கினம் | 46 | 10,000/- | 460,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,811,950/- | - |
| மொத்தம் | | | 8,005,400/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 249,459 | | 8,505,400/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,745,350/-

ஆலிந்தயே வாசனாவ

தங்கக்காசு வெற்றியாளர் : கயனி அனுராதா சூரியாராச்சி கண்டி

கைத்தொலைபேசி வெற்றியாளர்: நில்மினி ரேணுகா மாகோல

2009 நொவெம்பர் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்கள் சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 500687294-4-12 |
| பதுளை | 500677826-3-39 |
| கண்டி | 500670152-1-23 |
| கம்பஹா | 500687290-2-32 |
| புத்தளம் | 500672066-1-36 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவரை கௌரவிக்க விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், நவ.9

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களைக் கௌரவிப்பதற் காக கொழும்பு காயத்திரி பப்ளிகேஷன் நிறு வனம் விண்ணப்பங்களைக் கோரியுள் ளது.

காயத்திரி பப்ளிக்கேஷனின் பத்தாம் ஆண்டு நிறைவையொட்டிய கொண்டாட் டங்களில் ஒன்றாக இந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாகாண ரீதியாக மாணவர்கள் கௌரவிக்கப்பட வுள்ளனர்.

எனவே தேசிய ரீதியிலும், மாகாண ரீதி யிலும் தமிழ்மொழி மூலப் பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாண வர்கள் தமது வர்ணப்படத்துடன் பெயர், முகவரி, பாடசாலையின் பெயர், வகுப்புப் பிரிவு, பெற்றுக்கொண்ட புள்ளிகள் என் பவற்றுடன் பாடசாலை அதிபரின் அத்தாட் சிப் பத்திரத்தையும் ''நவமோகன், காயத்திரி பப்ளிகேஷன், 22A, ரூபன்பீரிஸ் மாவத்தை, களுபோவில, தெஹிவளை'' என்ற முக வரிக்கு எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைக்குமாறும் மேலதிக விவ ரங்களுக்கு 011-2727621 என்ற தொலை பேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளு மாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9)

## தென்மராட்சி யுவதிகளுக்கு இலவச தையல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், நவ.9

தென்மராட்சிப் பிரதேச யுவதிகளுக் கான 2010ஆம் ஆண்டுக்கு இலவச தையல் பயிற்சி வழங்குவது தொடர்பான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றவுள்ள யுவதிகள் பிரதேச செயலக கிராம அபிவிருத் திப் பிரிவுடன் எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித் துள்ளார். (203-207)

## நிதி ஒதுக்கீடு

வண்ணை, நவ.9

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒரு லட்சம் ரூபாவை குருநகர் துணை இழந்த மாதர் சங்கத்திற்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் வழங்கியுள்ளார்.

அந்த நிதியின் மூலம் தையல் நிலை யம் ஒன்றை ஆரம்பிப்பதற்கான உபகர ணங்களை யாழ்.பிரதேச செயலகம் கடந்த திங்கட்கிழமை மாதர் சங்கத் தலைவி யேசு தாசன் எஸ்பெத்தலா, செயலாளர் யேசுராசா மேரி அஞ்சலா ஆகியோரிடம் வழங்கியுள் ளது. (203-160)

## வேப்பமரத்திலிருந்து 'கள்'

சங்கானை, நவ.9

கடந்த மூன்று நாள்களுக்கு மேலாக வேப்பமரம் ஒன்றிலிருந்து கள் வடிந்து கொண் டிருக்கிறது. கலைவாணி வீதி, சித்தங்கேணி யைச் சேர்ந்த ஆசை குணசேகர என்பவர் வீட்டில் உள்ள இரண்டு அடி சுற்று விட்டமே உடைய வேப்பமரத்திலிருந்தே கள் வடிந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து வடியும் கள்ளை வீட்டுச் சொந்தக்காரர் சேகரித்து வைத் துள்ளார்.

மரத்தின் அடியிலிருந்து சுமார் 20 அடி உயரத்தில் உள்ள ஒரு சிறிய வெடிப்பிலி ருந்தே வெள்ளை நிறத்திலான கள் வடிந்து கொண்டிருக்கிறது. இதில் பனங் கள்ளின் மணம் வீசுகிறது.

இந்தக் கள் மருத்துவப் பாவனைக்கு உகந்தது என்றும், இதனால் பலர் இக் கள் ளைப் பெறுவதில் சிரத்தை காட்டுகின்றனர் என்றும் ஏராளமானோர் தினமும் வந்து பார்வை யிட்டு செல்வதாகவும் வீட்டின் உரிமையா ளர் சொல்கிறார். (அ-29)

# வடமாகாண தொழில் முயற்சியாளர் விருது வழங்கும் நிகழ்வு வீரசிங்கம் மண்டபத்தில் இன்று நடைபெறவுள்ளது

யாழ்ப்பாணம், நவ.9

இலங்கை வர்த்தக தொழிற்றுறை மன் றங்களின் சம்மேளனத்தினால் வழங்கப் படுகின்ற தொழில் முயற்சியாளர் விருது வழங்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணியளவில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பிரதம விருந்தினராக வும் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ் வரி பற்குணராஜா கௌரவ விருந்தின ராகவும் கலந்து கொள்வர்.

பிராந்திய, மாவட்ட, தேசிய ரீதியி லான தொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள் ளன.

மன்னார், வவுனியா, மற்றும் யாழ்ப்பா ணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2008ஆம் ஆண்டிற்கான சிறந்த தொழில் முயற்சியாளர்களுக்கான விருதுகளே இந்த நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. கௌரவிப் புப் பெறவுள்ளோர் விவரம் வருமாறு:-



திரு.சின்னராஜா சத்தியசீலன் - யாழ்.மாவட்டம் ராஜா கிறீம் ஹவுஸ் - ஐஸ்கிறீம், உணவு மற்றும் பரிமாற்ற சேவைகள்



திரு.கந்தையா சுந்தரலிங்கம் - யாழ் மாவட்டம் வெஸ்ரா இன்டஸ்ரீஸ் - பழரச மற்றும் உணவு உற்பத்தி



திரு. இலங்கநாதன் பாலசுந்தரம் - யாழ் மாவட்டம் பாமினி கட்டட ஒப்பந்தகாரர்- நிர்மாணத்துறை



திருமதி கோகிலாதேவி அசோக்குமார் -வவுனியா மாவட்டம் கோபிதன் காமன்ஸ் - ஆடை உற்பத்தித்துறை



திரு.கனகசபை உதயகுமார் - வவுனியா மாவட்டம் உதயன்ஸ் வேளான் மற்றும் நீர்ப்பாசனம்- விவசாயத்துறை

# சைக்கிளில் சென்றவரை மோதியவர் தப்பிச் சென்றார்; காயமுற்றவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், நவ.9

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வேகமாகச் சென்ற மோட்டார்சைக்கிள் அவ் வழியே சென்ற சைக்கிளில் சென்றவரை மோதித் தள்ளிவிட்டு நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது. சைக்கிள் உடைந்து மூன்று துண்டுகளாகச் சேதமடைந்துள்ளது.

அதில் பயணித்தவருக்குக் கால் முறிந்த துடன் பலத்த காயங்களும் ஏற்பட்டன என்று கூறப்பட்டது.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இரவு 8 மணியளவில் சாவகச்சேரி, கச்சாய் வீதி வீரபத்திரர் கோயிலுக்கு அருகில் இடம்பெற் றது.

இதே இடத்தைச் சேர்ந்த கார்த்திகேசு தர்சன் (வயது 24) என்பவர் சாவகச்சேரி ஆதா ரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத் தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

விபத்து இடம்பெற்ற இடத்தில் காணப் பட்ட மோட்டார் சைக்கிள் இலக்கத் தகடு, சேதமடைந்த தலைக்கவசம் செருப்புகள் ஆகி யவை பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. (203-207)

## ஒட்டுமடக் காவலரண் பின்நகர்த்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.ஒட்டுமடச் சந்தியில் இருந்த பெரிய இராணுவ காவலரண் பொதுமக்களின் நன்மை கருதிப் பின்நகர்த்தப்பட்டுள்ளது.

ஒட்டுமடச் சந்தியில் இதுவரை காலமும் முட்கம்பிகளால் வேலி அடைக்கப்பட்டு பெரிய காவலரண் ஒன்று அமைக்கப்பட்டி ருந்தது. இதனால் இவ்வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வந்தனர். தற்போது அந்தக் காவ லரண் பின்நகர்த்தப்பட்டுள்ளது. எனவே பொது மக்கள் சௌகரியமாகத் தமது போக்குவரத் தினை மேற்கொண்டு வருகின்றனர். (9)

## கட்டாக்காலி மாடுகளால் நெற்பயிர்கள் அழிக்கப்படுவதாக விவசாயிகள் கவலை

யாழ்ப்பாணம், நவ.9

நுணாவில் பகுதி வயல்களுக்குள் புகுந்த பெருமளவு கட்டாக்காலி மாடுகள் நெற் பயிர்களை அழித்துள்ளதாக நெற்செய்கை யாளர்கள் கவலை தெரிவித்தனர்.

மறவன்புலோ, கமக்கார அமைப்பினர் தமது பகுதிகளிருந்து முட்கம்பி வேலிக்கு அப்பால் மாடுகளைத் துரத்தியதையடுத்து மாடுகள் தனங்கிளப்பு பகுதியூடாக நுணா வில் பகுதி வயல்களுக்குச் சென்று பயிர் களை நாசம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சி தெற்குப் பகுதியில் கட் டாக்காலியாக அலையும் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாடுகளிடமிருந்து பயிர்களைக் காப்பாற்ற வேலி அமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை வேலிகள் அமைக்கப்படாமையால் கட்டாக் காலிகள் பயிர்களை அழித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203- 207)

## மோட்டார் சைக்கிளை தடுத்து வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், நவ.9

மதுபோதையில் சாரதிய அனுமதிப் பத்திரமின்றி மோட்டார் சைக்கிள் செலுத் திய நபரின் சாரதிய அனுமதிப் பத்திரத் தினை நீதிமன்றில் சமர்ப்பிக்கும் வரை அவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறு உத்தர விடப்பட்டது.

சாரதிய அனுமதிப்பத்திரமின்றி மது போதையில் மோட்டார் சைக்கிள் செலுத் தியதாகப் பொலிஸாரினால் சாவகச்சேரி நீதி மன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கடந்த 5ஆம் திகதி விசாரணைக்கு எடுக் கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் இந் நபருக்கு 6ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத்தொகை செலுத்தத் தவறின் ஆறு மாத சிறைத்தண்டனை அனுபவிக்கு மாறு உத்தரவிட்டார்.

இந்த நபர் தனது பெயருக்குப் பெறப் பட்ட சாரதிய அனுமதிப்பத்திரம் நீதி மன்றில் சமர்ப்பிக்கும் வரை செலுத்தி வந்த மோட்டார் சைக்கிளை நீதிமன்றில் தடுத்து வைக்குமாறும் உத்தரவிட்டார்.(203- 207)




# மிருசுவில் வடக்குக்குச் செல்லும் வீதி மூன்று வருடங்களாகப் போக்குவரத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், நவ.9

மிருசுவில் ஏ-9 வீதியிலிருந்து மிருசு வில் வடக்குக்குச் செல்லும் வீதியில் சுமார் 100 மீற்றர் தூரம் கடந்த மூன்று வருடங்க ளாகப் பொதுமக்கள் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியில் உள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக் குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிருசுவில் வடக்கு, குடமியன், நாவற் காடு போன்ற இடங்களில் உள்ள குடியி ருப்பாளர்கள் இவ்வீதியைப் பயன்படுத்தி வந்ததாகவும் வீதிப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டதையடுத்து தனியார் காணிகள் ஊடாகத் தினமும் பெருமளவு பொதுமக்களும் மாணவர்களும் சிரமத் தின் மத்தியில் போக்குவரத்துச் செய்வதா கவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இப்பகுதிகளில் உள்ள காலபோக நெற்செய்கை வயல்களில் நெல் விதைப்பு நடவடிக்கையில் ஈடுபடு வோர் தமது வாகனங்களைக் கொடிகாமம் வரணி- சிட்டிவேரம் - நாவற்காடு ஊடாகக் கொண்டு செல்வதாகவும் தெரிவித்தனர்.

அண்மையில் உசன் கிராம அபிவிருத் திச் சங்கத்தின் வேண்டுகோளின் பிரகாரம் மிருசுவில் சந்தியிலிருந்து உசன் வரையான வீதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் பொதுமக்களின் பாவனைக்குத் திறந்து விடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-207)

# தளபாடங்கள் கொண்டு செல்ல அனுமதிப்பத்திரம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இல்லையாம்

## இதனால் மக்கள் பெரும் அவதியில்

யாழ்ப்பாணம், நவ.9

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் மரங்கள், தளபாடங்கள் கொண்டு செல்வ தற்கு வழங்கப்படும் வீதி அனுமதிப் பத்தி ரம் இன்மையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பிரதேசத்தில் மக்களால் மேற்கொள் ளப்பட்டு வரும் வீட்டுத்திட்ட வேலைக ளுக்குத் தேவையான பனைமரங்கள், வீட்டு மரங்கள், நிலைகள், ஜன்னல்கள், கதவுகள் போன்றவை மரக்காலைகளில் இருந்து கொண்டு செல்வதற்குரிய அனுமதிப்பத்திரம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படல் வேண்டும்.

ஆனால் கடந்த ஒரு மாதமாக இந்த அனுமதிப் பத்திரம் வழங்குவது பிரதேச செயலகத்தினால் நிறுத்தப்பட்டமையால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுமதிப் பத்திரமின்றி பனைமரங் கள், வீட்டு மரங்கள் ஒழுங்கைகள் ஊடாக வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட வேளையில் பொலிஸாரிடம் அகப்பட்டு நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டு வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர். (203-207)




இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுள் கிளையின் 2009ஆம் ஆண்டின் முற்பணக் கொடுப்பனவுத் திட்டத்தில் இணைந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டுவிழா யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள். வலிகாமம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) சு.சுந்தரசிவம் உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.கந்தசாமி, இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபன நிர்வாக இயக்குநர் அ.சுயேசன் ஆகியோர் மாணவர்களுக்கான பரிசில்களை வழங்குவதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் கலை நிகழ்ச்சியையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் ஏனைய இரண்டு படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொக்குவில் இந்துக் கல்லூரியில் புதிய கணனி அறை திறப்புவிழா, அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பழைய மாணவனும் பிரபல வர்த்தகருமான மா.சுப்பிரமணியம் தம்பதியினர் கணனி அறையை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் மங்கள விளக்கை திரு மா. சுப்பிரமணியம் ஏற்றி வைப்பதையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.
கணனி அறையை முன்னாள் அதிபர்களான அ.பஞ்சலிங்கம், பொ.கமலநாதன் மற்றும் பழைய மாணவர்களுடன் பார்வையிடுவதையும் மூன்றாவது படத்தில் காணலாம்.
(படங்கள்: நேசன்)

# குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் மக்கள் வங்கியின் ஆறு கிளைகள் திறப்பு

யாழ்ப்பாணம், நவ.9

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிராமங்கள் தோறும் மக்கள் வங்கி சேவை நிலையங்களை திறந்து வைக்கும் திட்டத்தில் குடாநாட்டில் நேற்று முன்தினம் ஆறு கிளைகள் திறந்து வைக்கப் பட்டுள்ளன.

புலோலி, கோப்பாய், கல்வியங்காடு, நாவலர் வீதி, ஆஸ்பத்திரி வீதி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களில் இவை திறந்து வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ தலைமையிலான அதிகாரிகளால் இந்த நிலையங்கள் திறந்து வைக்கப் பட்டன.

இந்த நிகழ்வுகளில் மக்கள் வங்கி பிரதம நிறைவேற்று அதிகாரியும், பொது முகாமையாளருமான பி.வி. பதிரண, பணிப்பாளர் டி.ஜெ.டி. ஜெயக்கொடி, ஏச்.எஸ். தர்மசிறி உள்ளிட்ட தலைமை அலுவலக சிரேஷ்ட உத்தியோகத்தர்கள், மக்கள் வங்கி வடவலய உதவி பொது முகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா மற்றும் மக்கள் வங்கி யாழ்.கிளை முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் வாடிக்கையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மக்கள் வங்கித்தலைவர் கருணாஜீவா புலோலி சேவை நிலையத்தினை காலை 8மணிக்கும், பணிப்பாளர் டி.ஜெ.டி. ஜெயக்கொடி, நிர்வாகம் மற்றும் மனிதவள உத்தியோகத்தர் ஏச்.எஸ்.தர்மசிறி ஆகியோரால் மு.ப 10மணிக்கு கோப்பாய் கிளையும் நடாவெட்டித் திறந்து வைக்கப்பட்டன.

மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ. கருணாஜீவவினால் கல்வியங்காடு சேவை நிலையம் மு.ப 11 மணிக்கும், மக்கள் வங்கித்தலைவர் மற்றும் உதயன் நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோரால் நாவலர் வீதி கிளை நண்பகல் 12 மணிக்கும் திறந்து வைக்கப்பட்டன. ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காங்கேசன்துறைக் கிளையும் தன்னியக்க பரிமாற்ற இயந்திர வசதியும் பிற்பகல் 1.30 மணிக்கும் நாடாவெட்டி திறந்துவைக்கப்பட்டன. பிற்பகல் 2.30மணிக்கு டி.ஜெ.டி ஜெயக்கொடி, ஏச்.எஸ். தர்மசிறி ஆகியோரால் பண்டத்தரிப்பு கிளை திறந்து வைக்கப்பட்டது.

திறந்து வைக்கப்பட்ட மேற்படி நிலையங்களில் மக்கள் வங்கித் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளால் சம்பிரதாய பூர்வமாகப் பண வைப்புக்கள் கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திறப்புவிழா நினைவுக்கல் திரைநீக்கமும் இதனைத் தொடர்ந்து திறப்புவிழா உறுதிப்படுத்தல் படிவத்திலும் கையெழுத்திடலும் இடம்பெற்றன.

(203- 14)


ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



திருமதி
கெங்காதரன் ஆச்சாரி
வசந்தமல்லிகா

மலர்வு 08.08.1943
உதிர்வு 26.09.2009

நல்லதோர் மனைவியாய்
பிள்ளைகளுக்கு நல்லதோர்
அன்னையாய், தெய்வமாய்
மருமக்களுக்கு நல்லதோர்
மாமியாய், தாயாய்
பேரப்பிள்ளைகளுக்கு நல்லதோர்
அப்பம்மாவாய், அம்மம்மாவாய், வழிகாட்டியாய்
அன்னமிட்டு உபசரிப்பதில்
கொடைவள்ளலாய் திகழ்ந்தாயே!
பாரினில் எம்முன் தெய்வமாய் வலம் வந்தாயே
இனி எப்போது எம்முன் வருவாயோ
எம் தெய்வமே!

வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் இன்று (09.11.2009) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் எம்மோடு இணைந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 26.09.2009 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும், தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் கூறியோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்

தகவல்:
கலாபூஷணம் லெ.கெங்காதரன்
ஆச்சாரி குடும்பத்தினர்.

314, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 8415
(90765)



# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் பொருளியல்
ஆசிரியர் திரு.வே.கருணாகரன்
அவர்களின் அன்புத் தாயார்

திருமதி வேலாயுதம் மனோன்மணி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கனகரத்தினம் ம.ம.வி.
(சி/562207)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
14 * 05 * 1963

ஆண்டவன் அடியில்
21 * 10 * 2008

அமரர் சிவசுப்பிரமணியம் சிவநேசன்
திதி:அபரபட்ச ஸப்தமி

ஆவி பிரிந்தின்று ஆண்டொன்றாகியதோ
பாவிகள் நாம் இங்கு பரிதவித்து நிற்கின்றோம்
ஓர் நாளில் உங்களை நாம் மறந்திருப்போம்
அந்நாளில் நாங்கள் இறந்திருப்போம்

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.
சண்டிலிப்பாய் மத்தி.
(90763)



# மரண அறிவித்தல்

## திருமதி வேலாயுதம் மனோன்மணி



மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேலாயுதம் மனோன்மணி அவர்கள் நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் வேலாயுதம் (ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் சுப்பிரமணியம்- பாறுவதிப்பிள்ளை தம்பதியினரின் மகளும், காலஞ்சென்றவர்களான மலேயன் பென்சனியர் எதிர்நாயகம்- சரஸ்வதி தம்பதியினரின் மருமகளும், இ.மனோராணி, கு.மதனராணி, த. ஆனந்தராணி, வே.கருணாகரன் ( பொருளியல் ஆசிரியர் யா/கனகரத்தினம் ம.ம.வி), ந.சிவராணி (ஆசிரியை யா/ஒஸ்மானியாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ச. இராசரத்தினம், நா. குமரகுருநாதன் (கிராம சேவையாளர்), அமரர் க. தர்மேசன் (வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் உதவியாளரும், காங்கேசன்துறை மாவட்ட சாரண உதவி ஆணையாளரும்) மற்றும் க.சயந்தி (ஆசிரியை யா/ திருக்குடும்ப கன்னியர் மடம்), சி.நந்தகுமார் (லிகிதர், யாழ் ப.நோ.கூ.சங்கம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமரர்களான வி.செல்வம், சு.கனகரத்தினம் (Rtd.R.M.P.) மற்றும் சி.சிவபாக்கியம், த.சிவகங்கை (கொழும்பு) ஆகியோரின் சகோதரியும், அமரர்களான எ. பாலசுப்பிரமணியம், ச. விணாசித்தம்பி (ஆசிரியர்), கோ.தம்பிராசா மற்றும் க. அமுதவல்லி, ம. சிவசுப்பிரமணியம் (தலைவர், சங்கானை ப.நோ.கூ.ச) ஆகியோரின் மைத்துனியும், அமரர் பா. நாகேஸ்வரியின் சகலியும்

அம்பிகை ஜீவேஸ், கு.பிரணவன் சுவர்ணா, சுகிர்தாம்பிகை, தேவகுமார், த.தரணிதரன், த. சேந்தரன், த. வித்தகதரன், க. அனிதா, க.கோபிகாந்த், ந. பத்மபிரியன், ந. அபிப்பிரியன் ஆகியோரின் பேர்த்தியும், ஜீ.தமிழரசி, ஜீ.கலையரசன், பி. திருமகள், தே.பிரவீன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.11.2009) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.2 மணியளவில் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.கருணாகரன் (மகன்)
T.P.No: 0213216389

"தரன் இல்லம்"
தேவாலய வீதி,மூளாய், சுழிபுரம்.
(90961)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் மக்கள் வங்கியின் கிளைகள் கிராமங்கள் தோறும் திறந்து வைக்கப்பட்டு வருகின்றன.

நேற்று முன்தினம் புலோலி, கல்வியங்காடு, நாவலர் வீதி, யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கோப்பாய் ஆகிய இடங்களில் கிளைகள் திறந்து வைக்கப்பட்டன.

இந்தக் கிளைகளின் திறப்பு நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள். நாவலர் வீதி கிளைத் திறப்பு விழாவில் மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ. கருணா ஜீவ, 'உதயன்' நிர்வாக இயக்குநர் ஈ.சரவணபவன் ஆகியோர் இணைந்து கிளையை நாடாவெட்டித் திறந்து வைத்தனர். இதனை முதலாவது படத்தில் காணலாம்.

கோப்பாய் கிளையை வங்கியின் பணிப்பாளர் டி.ஜே.டி. ஜெயக் கொடி நாடாவெட்டித் திறந்து வைத்தார். அருகில் கோப்பாய் பிரதச செயலர் சி.ஏ. மோகன்றாசும் காணப்படுகிறார்.

ஆஸ்பத்திரி வீதியில் அமைக்கப்பட்ட காங்கோசன்துறைக் கிளையை வங்கியின் தலைவர் டபிள்யூ. கருணாஜீவ, வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் ரி.கே. ஆனந்தராஜா ஆகியோர் இணைந்து நாடாவெட்டித் திறந்து வைப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

கல்வியங்காட்டுக் கிளைத்திறப்பு விழாவில் வங்கியின் தலைவர் கிளையைத் திறந்து வைத்து உரையாற்றுவதையும் இந்தக் கிளைத் திறப்பு விழா நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் நான்காவது, ஐந்தாவது படங்களில் காணலாம்.

கோப்பாய் கிளையில் அன்றையதினம் அதிகூடிய வைப்புச் செய்த வாடிக்கையாளர் ஒருவருக்கு வங்கியின் பணிப்பாளர் டி.ஜே.டி. ஜெயக்கொடி நினைவுப்பரிசில் வழங்குவதை ஆறாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: உமா)

# இன வேறுபாடுகளைக் கடந்து நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது மக்கள் வங்கி!

## வங்கித் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.9

பிரதேச சூழ்நிலைக்கு அமைய, இன வேறுபாடுகளைக் கடந்து, நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு தனது சேவையினை மக்கள் வங்கி வழங்கி வருகின்றது.

இவ்வாறு மக்கள் வங்கித் தலைவர் டபிள்யூ.கருணாஜீவ தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த மக்கள் வங்கித் தலைவர், யாழ்.நாவலர் வீதியிலுள்ள சேவை நிலையத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே, நேற்று முன்தினம் அவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் உரை நிகழ்த்தும் போது தெரிவித்தவை வருமாறு:

1962 ஆம் ஆண்டிலிருந்து மக்கள் வங்கி தனது சேவையை வழங்கி வருகின்றது. எனினும் 1982ஆம் ஆண்டிற்குப் பின்னர் சிறப்பான சேவையினை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொள்ளவேண்டியிருந்தது.

இந்நிலைமை எமது வங்கிக்கு மட்டுமல்ல ஏனைய சகோதர வங்கிகளுக்கும் ஏற்பட்டது. வன்னிப் பிரதேசத்தில் யுத்தம் இடம்பெற்ற வேளையில் கூட அங்கு எமது 07 கிளைகள் மக்களுக்காகச் சேவையாற்றி வந்தன. மக்களோடு மக்களாகத், தோளோடு தோள் நின்று சேவையாற்றுவதனைப் பெரிதும் விரும்புவது எமது வங்கி.

ஆனால் இன்று நாடு அமைதி நிலைக்குத் திரும்புகின்றது. எனவே எமது சேவைகளையும் நாம் விரிவுபடுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

அரசாங்கச் சட்டதிட்டங்களுக்கு அமைவாக கடன் வட்டி வீதத்தினை குறைத்ததுடன் உடனேயே அதனை அமுல்படுத்தியும் இருக்கின்றோம்.

வியாபார முயற்சிகளுக்கு, கட்டடம் அமைப்பதற்கு, விவசாயத் தொழில் துறைகளில் ஈடுபடுவதற்கு என ப்பல வகைகளிலும் கடன் வழங்கி மக்களுக்கு சேவையாற்ற எமது வங்கி தயாராக இருக்கிறது.

நாட்டில் அதிக கிளைகளை கொண்டிருப்பதுடன் எமது வங்கி அரசாங்கத்துக்கே கடனை வழங்கிவருகின்றது. அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் எனப் பலரும் நன்மையடைந்து வருகின்றனர். அது மட்டுமன்றி, வட்டி வீதத்தினை தீர்மானிப்பவர்களாக வாடிக்கையாளர்களே இருக்கின்றனர்.

இந்த ஆண்டில் கல்வி கற்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தில் 48 பேர் மக்கள் வங்கியில் வேலையைப் பெற்றிருக்கின்றார்கள்.

மக்கள் சேவைக்கு முதன்மை இடம் வழங்கும் மக்கள் வங்கியின் மூலம் எமது நாட்டு மக்கள் அனைவரும் பயனடைய வேண்டும்- என்றார். (04-14)

# உணவு, மென்பான உற்பத்தியாளருக்கு யாழ்.செயலகத்தில் பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், நவ.9

உணவு, மென்பான உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் சிறிய மற்றும் நடுத்தர வியாபார நிறுவனங்களின் உரிமையாளர்கள், முகாமையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை, யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.

கொழும்பு 'சுவிச் ஏசியா' நிறுவன நிகழ்ச்சித்திட்ட உதவியுடன், கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ்.மாவட்ட காரியாலய ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பயிற்சிப் பட்டறையில், 27 நிறுவனங்களது உரிமையாளர்களும், முகாமையாளர்களும் பங்கேற்றிருந்தனர்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபார முயற்சிகள் மத்தியில் நிலைத்திருத்தல், உற்பத்தியின் ஆகுசெலவு, செயற்றிறனான உற்பத்தித் தொழில் நுட்பங்களையும் சிறந்த செயற்பாடுகளையும் மேம்படுத்துவதன் மூலம் யாழ். மாவட்ட உணவு, குடிபானத் துறையின் செயற்றிறனை மேம்படுத்துதல் ஆகியனவே இத்திட்டத்தின் பிரதான நோக்கம் என்று கூறப்பட்டது.

இப்பயிற்சிப் பட்டறையில், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். அலுவலகம் பிரதிப் பணிப்பாளர், கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவன ஆலோசகரும் பொறியியலாளருமான கீர்த்தி பொன்சேகா, கைத்தொழில் சேவைகள் நிலைய ஆலோசகரும் பொறியிலாளருமான லொசான் பலயான்கொட, பொறியியலாளர் சம்பத் விஜயசூரிய ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர்.

குறைந்த பொருள் ஆகுசெலவுகள், குறைக்கப்பட்ட சக்தி ஆகு செலவுகள், அதிகரித்த வருமானங்களும், இலாபங்களும் மேம்பாடடைந்துள்ள வேலைப்படையின் தரம் ஐ.எஸ்.ஓ.சான்றினைப் பெறுவதற்குத் தயாராகுதல், பொறுப்பானதும் நம்பகரமான ஸ்தாபமொன்றாக அங்கீகரித்தல் எனும் தலைப்புகளில் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

நிகழ்ச்சித் திட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்.மாவட்டத்திலுள்ள 07 நிறுவனங்களுக்கு விஜயம் செய்த மேற்படி வளவாளர்களை உள்ளடக்கிய குழு, குறிப்பிட்ட சில நிறுவனங்களின் குறைபாடுகளை கண்டு கொண்டதாகவும் அவற்றுக்குத் தீர்வுகாணும் வகையிலும் இறுதிநாள் செயலமர்வு அமையப்பெற்றிருந்ததாகவும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை யாழ் அலுவலக பிரதிப் பணிப்பாளர் ஆர். ஜெயமனோன் தெரிவித்தார்.

(203-14)

## காணாமற் போனோரின் உறவினர் ஒன்று கூடல் புதன்கிழமை பிற்பகலில்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்.குடாநாட்டில் 1996, 1997ஆம் ஆண்டுகளில் காணாமல் போனோர் தொடர்பான தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர்களின் பெற்றோர், பாதுகாவலர்கள் அனைவரையும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ்.மாவட்ட அலுவலகத்திற்கு முன்னால் ஒன்று கூடுமாறு ஏற்பாட்டாளர் கேட்டுள்ளார். (அ)

# அவசரகாலச் சட்டத்தை நீக்குமாறு பிரான்ஸ் தூதுவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ.9

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் அவசர காலச் சட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்.

இலங்கைக்கு மூன்றுநாள் விஜயமாக வந்துள்ள மனித உரிமைகளுக்கான மூத்த பிரான்ஸ் தூதுவர் பிரான்சுவா ஜிமேரி மேற்கண்டவாறு இலங்கை அரசைக் கேட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான போர் முடிந்து 6 மாதங்களுக்கு மேலாகியுள்ள நிலையில், இலங்கை அரசாங்கம் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி 26 ஆண்டுகளுக்கு மேலாக இருந்துவரும் அவசரகாலச் சட்டத்தை நீக்கவேண்டும் என்று கூறினார். யுத்த மற்றும் மனித உரிமை வன்முறைகளில் ஈடுபட்ட அனைத்துத் தரப்பினருக்கு எதிராகவும் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என வலியுறுத்திய தூதுவர், போர் குற்றம் தொடர்பான சுதந்திரமான விசாரணைக்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையை இலங்கை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு இவற்றை நடைமுறைப் படுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் இலங்கை அரச தலைவைர்களுக்கு வலியுறுத்தி வருவதாகவும் கூறப்பட்டது.

(1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானகுமாரன் உரையாற்றுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வழக்கறிஞர் செ.தங்கராஜா, திருமதி தங்கராஜா, கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன், கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பரமநாதன், சுன்னாகம் பொலிஸ் நிலைய சிரேஷ்ட அதிகாரி, கல்லூரியின் முன்னாள் அதிபர் க.சிவாஜி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.
கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பரமநாதன் சிறந்த துடுப்பாட்ட வீரருக்கான பரிசினை மாணவன் க.விஷ்ணுப்பிரகாசிற்கு வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (55)

# இலங்கைக்கு ஆயுத ஏற்றுமதியை நிறுத்த பிரிட்டன் எம்.பிக்கள் அரசிடம் வலியுறுத்து

கொழும்பு, நவ. 09

பிரிட்டன் இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்வதற்கான அனுமதிப்பத்திரங்களை இரத்துச்செய்துவிட்டதா எனக் கேள்வி எழுப்பியுள்ள அந்த நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை மனித உரிமை நிலைவரம் குறித்து மிக உறுதியான உத்தரவாதங்களை வழங்கும் வரை ஆயுத ஏற்றுமதிக்கு அனுமதி வழங்கக்கூடாது என கோரியுள்ளனர்.

பிரிட்டனின் பொதுச்சபையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஆயுத ஏற்றுமதி அனுமதிப்பத்திர கட்டுப்பாடு குறித்த விவாவத்தின்போதே இந்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற வெளிவிவகாரக் குழுவின் தலைவரான தொழிற்கட்சி உறுப்பினர் மைக் கப்ஸ் உட்பட பல உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்துகொண்டனர்.

பிரிட்டன் ஆயுத ஏற்றுமதி அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்துவிட்டதா என்ற கேள்விக்கு அந்த நாட்டின் நாடாளுமன்ற விவகாரங்களுக்கானபிரதி அமைச்சர் இயன் லூகாஸ் தெளிவானபதிலை அளிக்கவில்லை.

இதேவேளை, நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் வெளிவிவகாரக் குழுவின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் கப்ஸ் தெரிவித்துள்ளவை வருமாறு:-

பிரிட்டனின் ஆயுத ஏற்றுமதி கட்டுப்பாட்டுக் குழு இலங்கைக்கு ஆயுத ஏற்றுமதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவது பொருத்தமற்றது எனத் தெரிவித்திருந்தது.

இதனைத் தொடர்ந்து நாம் ஆராய்ந்ததில் இலங்கைக்கு பல வருடங்களாகக் குறிப்பிடத்தக்க ஆயுத ஏற்றுமதி இடம்பெற்றமை தெரியவந்தது.

பின்னர் பிரிட்டன் இலங்கைக்கு வழங்கிய ஆயுதங்கள் பற்றிய மதிப்பீட்டையும் அவை ஆயுத மோதலில் பயன்படுத்தப்பட்டனவா என்ற விவரத்தையும் வழங்குமாறு கோரினோம்.

இதற்கு பதிலளித்த பிரிட்டிஷ் அரசு இராணுவ ஹெலிக்கொப்டர்கள், தொலைத்தொடர்புக் கருவிகள் போன்றவற்றிற்கான உதிரிப்பாகங்கள் உட்பட பலவற்றிற்கான ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களை தற்போதைய சூழ்நிலையை கருத்திற்கொண்டு நிறுத்திவிட்டதாக தெரிவித்தது.

இலங்கையில் மோதல் ஆறு மாதங்களுக்கு முன்னர் முடிவடைந்துவிட்டது. ஆனால், சுமார் 2 லட்சத்து 80 ஆயிரம் மக்களை பொறுத்தவரை அது முடிவுக்கு வரவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் இலங்கை அரசிற்கு நாம் தொடர்ந்தும் ஆயுதங்களை வழங்குகிறோமா? ஏன் வழங்குகிறோம்?

இலங்கையில் குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு சட்டத்தின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் நடைமுறையும், மனித உரிமை மீறல்களும் காணப்படுகின்றன. பிரிட்டன் இது குறித்து கவலையடைந்துள்ளது- என்றார். (சி)

# ஆஸ்திரேலியாவில் கவிழ்ந்த படகு மட்டக்களப்பிலிருந்து புறப்பட்டதா?

கொழும்பு, நவ. 09

ஆஸ்திரேலியாவுக்கு சட்டவிரோதமான முறையில் சென்றுகொண்டிருந்த வேளை கவிழ்ந்த படகு மட்டக்களப்பு மாவட்டம் கல்லாறு கடற்கரையிலிருந்து புறப்பட்டுச் சென்றிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சமீபத்தில் இந்தப் படகு ஆஸ்திரேலியக் கடலில் கவிழ்ந்து, அதில் சென்ற இலங்கையர்கள் 12 பேர் கடலில் மூழ்கிக் காணாமற்போனமை தெரிந்ததே. அந் தப் படகு எங்கிருந்து புறப்பட்டது என்ற தகவல் இது வரை தெரியவந்திருக்கவில்லை. இந்த நிலையில் இந்தப் படகு இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் கல்லாறு பகுதியிலிருந்தே புறப்பட்டதாக ஆஸ்திரேலியப் பத்திரிகையான 'த ஆஸ்திரேலியன்' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கடந்த சில வாரங்களில் இலங்கையின் கிழக்குக் கடலில் இருந்து ஏராளமான படகுகள் ஆஸ்திரேலியா நோக்கிப் புறப்பட்டன என்றும் அவற்றில் ஒரு படகு, மோசமான காலநிலை காரணமாக சமீபத்தில் கல்லாறு கடற்கரையில் ஒதுங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கிழக்கிலிருந்து புறப்பட்ட படகுகளில் ஒன்றே ஆஸ்திரேலியாவை அண்டிய கடலில் கவிழ்ந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

கிழக்கிலிருந்து படகுகளில் புறப்பட்ட பலருடன் கடந்த 10 நாள்களுக்கு மேலாகத் தொடர்புகொள்ள முடியவில்லை என்று அங்குள்ள அவர்களின் உறவினர்கள் அங்கலாய்க்கின்றனர் என்றும் கூறப்படுகிறது. (சி)

# குடும்பம் குடும்பமாகக் கட்டாக்காலிகள்; தாதியர், நோயாளிகள் அவலம்!

யாழ்ப்பாணம், நவ.9

கோப்பாய் அரசினர் வைத்தியசாலையில் குடும்பம் குடும்பமாகக் கட்டாக்காலிகளான ஆடுகள், மாடுகள் நாள் தோறும் நேர அட்டவணை போட்டு வருவது போன்று தினந்தோறும் காலை, மாலை, இரவு என வைத்தியசாலைச் சூழலிற்குள் நுழைவதும் பின்னர் அங்குள்ள பூஞ்செடிகளையும், விளை பயிர்களையும் நாசம் செய்வதும் இரவில் அங்கேயே தூங்குவதுமாகத் தொல்லை கொடுத்து வருகின்றன.

இதனால் வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்தியர்களும், நோயாளிகளும், பெரும் சிரமத்தை எதிர்கொள்வதுடன், அதிருப்தியும், கவலையும் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கால்நடைகளின் உரிமையாளர்களை கால்நடைகளைக் கட்டுப்படுத்தும் படியும் தாதியர், நோயாளிகளுக்கு சிரமத்தினை கொடுக்காமல் உதவும் படியும் வைத்தியசாலை வட்டாரங்கள் கேட்டுள்ளன. இதேவேளை, சுமார் பதினைந்துக்கு மேற்பட்ட நாய்கள் வைத்தியசாலையிலேயே குடிகொண்டு இருப்பதனால் அங்குவரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (203 - 110)

# அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை; சம்பந்தப்பட்டவருக்கு 5லட்சத்து 10ஆயிரம் அபராதம்

வலி.வடக்கு, நவ.9

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபான விற்பனையில் ஈடுபட்டவருக்கு 5லட்சத்து பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

விருந்தினர் விடுதி ஒன்றில் அனுமதிப்பத்திரம் இன்றி மதுபான விற்பனையில் ஈடுபட்ட வேளை சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லுடாவைக் தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் குறிப்பிட்ட விருந்தினர் விடுதியில் இருந்து மதுபான வகைகளைக் கைப்பற்றினார்கள்.

யாழ்.மாவட்ட நீதிமன்றில் பொலிஸார் குறிப்பிட்ட நபரை ஆஜர் செய்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட நீதிவான் 5லட்சத்து பத்தாயிரம் ரூபா அபராதம் விதித்தார்.

கைப்பற்றப்பட்ட ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான மதுபான வகைகளை அழிக்குமாறும் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட நபர் முன்னர் ஒரு தடவையும் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (203- 86)


## படிவம்

1) தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் நடாத்தப் பெறும் கற்கை நெறிகளுக்கு அநுமதி - 2010
2) இலங்கை விவசாய சேவை வகுப்பு III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை
3) இலங்கை நிர்வாக சேவை தரம் III திறந்த போட்டிப் பரீட்சை (வயதெல்லை 30)

ஆசிரியவற்றுக்கு விண்ணப்பிக்கான படிவங்கள் விற்பனைக்கு உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.


## மரண அறிவித்தல்கள்

### அகஸ்ரின் எமில்ஜேம்ஸ்



குளமங்கால், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரின் எமில் ஜேம்ஸ் 07.11.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அகஸ்ரின்- கிறகொறியா தம்பதியரின் அன்பு மகனும் சதானந்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற ஞானசோதி மற்றும் தேவதாஷன், பெர்னடிக்ற், வேதானந்தன் (ஆனந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கிளாராமேபிள் (சசி-கனடா), டொலஸ்ரிக்கா மேபிள் (கலா), எமில் ஜெவ்றி (கனடா), ஜெயம் ஜெவ்றி, ஜெறோம் ஜெவ்றி (றெனி-கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற ஜோசப்பாலசிங்கம், மற்றும் சிறிநாதன் (ரவி-ICRC), ஜதீஷா (ஆசிரியை-சென். ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிறவுன்ஷன் (கனடா), ஜெபின்ஷன் (கனடா), கொலின் அன்ட்றூ, சேராஅனி, டெஸ்பினா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.11.2009) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு குளமங்கால் புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு குளமங்கால் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குளமங்கால்,
மல்லாகம். (90774)
தகவல்:
ஜெயம் ஜெவ்றி (மகன்).

### நடராசா இராசாத்தி



தாவடி தெற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசாத்தி நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் கனகேஸ்வரி, இரத்தினேஸ்வரி, இராஜேந்திரன், லோகேஸ்வரி, புகழேந்திரன் (இத்தாலி), திலகேஸ்வரி (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயும் வைத்திலிங்கம், இராஜேஸ்வ[illegible], லீலாவதி, துரைசிங்கம், கலையரசி (இத்தாலி), சிறீஸ்கந்தராஜா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.11.2009) திங்கட்கிழமை ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கேணியடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (90773)
தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சிவானந்தன்

(Sri Lanka Telecom, Ratmalana)

சுந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சிவானந்தன் நேற்று (08/11/2009) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் சித்திராவின் அன்புக்கணவரும், யோகாநந்தின் (மாணவன், 2007 A/L Bio, யாழ்.இந்துக் கல்லூரி) அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சி.யோகாநந் (மகன்)
செ.சிவன்தாசன் (மைத்துனர்)
84, பலாலி வீதி,
சுந்தர்மடம், யாழ்ப்பாணம். (90767) T.P 0212223964

## தவறிவிட்டது

சோன் போர் வெங்களச் செட்டிக்குளம் வவுனியாவில் பஸ்வண்டியில் ஏற்றிக் கொண்டிருக்கும் பொழுது செல்வக்குமார் ராதா என்னும் குடும்பத்தலைவியின் முக்கிய ஆவணங்கள் அடங்கிய ரவலிங் பாக் (05.10.2009) வியாழக்கிழமை. தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள்.

[illegible]

சங்குவேலி வடக்கு, மானிப்பாய். T.P :- 0778294205

உடன் தொடர்பு கொள்ளவும் சன்மானம் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிஞ்சர்கலக்கல்: தொடர் ஆஸி வசம்!

இந்தியாவுடனான 6ஆவது போட்டியில் ஆஸ்திரேலியா அணி இலகுவாக வெற்றியீட்டியதன் மூலம் தொடரையும் கைப்பற்றியது.

7 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடிவருகின்றன இந்தியா-ஆஸ்திரேலிய அணிகள். ஏற்கனவே நடந்து முடிந்த 5 போட்டிகளில் 3 போட்டிகளில் ஆஸ்திரேலியாவும் 2 போட்டிகளில் இந்தியாவும் வெற்றிபெற்றிருந்தன. இந்நிலையில் நேற்று தீர்க்கமான போட்டியில் இரு அணிகளும்விளையாடின.

நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிதது.

அதன்படி களமிறங்கிய இந்திய அணி ஆரம்பத்திலிருந்தே தடுமாறிக்கொண்டிருந்தது. இறுதியில் 48 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

அணி சார்பாக ஆகக்கூடுதலாக சச்சின் 10 ஓட்டங்களையும், அணித்தலைவர் டோனி 24 ஓட்டங்களையும் ஜடேஜா 57 ஓட்டங்களையும் பிரவீன்குமார் 54 ஓட்டங்களை யும் (ஆட்டமிழக்காமல்) பெற்றுக் கொடுத்தனர். ஏனைய வீரர்கள் எவரும் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறவில்லை என்பது குறிப் பிடத் தக்கது.



ஆஸ்திரேலிய அணிசார்பாக பந்து வீச்சில் அபாரமாகப் பந்துவீசிய போலிங் கர் 5 விக்கெட்டுகளையும், ஜோன்சன் 3 விக்கெட்டுகளையும் வட்ஸன் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

171 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய ஆஸ்திரேலிய அணியின் ஆரம்ப வீரர்களான ஷேன் வட்சனும், ஷான் மார்ஷும் நிதானமாக ஆரம்பித்தனர்.

ஷான் மார்ஷ் (6) ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். அதன் பிறகு பொன்டிங்கும், ஷேன் வோட்சனும் இன்னிங்ஸை மெதுவே முன்னெடுத்துச் சென்றனர். ஷேன் வாட்சன் 49 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் பொண்டிங் 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த கமரூன் ஒயிட்25 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

அடுத்து மைக் ஹஸி (35), வோஜஸ் (23) ஆகியோர் இறுதிவரை களத்திலிருந்து வெற்றி இலக்கை எட்டினர். முடிவில் 41.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு ஆஸ்திரேலியா வெற்றிபெற்று தொடரை 4- 2 என்று கைப்பற்றியது.

ஆட்ட நாயகனாக போலிஞ்சர் தெரிவு செய்யப்பட்டார்.

## பெட் கிண்ண டென்னிஸ்: இத்தாலி 2-0 என முன்னிலை!



இத்தாலிக்கும், அமெரிக்காவிற்கும் இடையே நடைபெற்று வரும் 'பெட் கிண்ண' டென்னிஸ் தொடரில் இத்தாலி, நடந்து முடிந்த 2 ஆட்டங்களிலும் வெற்றி பெற்று 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

வளர்ந்துவரும் இளம் நட்சத்திரமான அமெரிக்காவின் மெலானி ஒடின் என்பவரை இத்தாலி வீராங்கனையான பிரான்செஸ்கா ஷியாவோன் 7- 6, 6-2 என்ற செற் கணக்கில் வீழ்த்தினார்.

முன்னதாக மற்றொரு ஆட்டத்தில் இத்தாலி வீராங்கனையான பிளாவியாபெனெட்டா, 6- 3, 6-1 என்ற செற் கணக் கில் அலெக்சா கிளாட்ச் என்பவரை வீழ்த் தினார்.

இந்த வெற்றிகள் மூலம் இத்தாலி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

# பாகிஸ்தானைப் பந்தாடியது நியூஸிலாந்து!



அபுதாபி, நவ. 09

பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது ஒரு நாள் போட்டியில் நியூஸிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

நியூஸிலாந்து-பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கிடையே 3 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடர் நடந்து வருகிறது. இதில் முதல் ஆட்டத்தில் 138 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றது.

இந்த நிலையில் 2ஆவது போட்டி கடந்த வெள்ளியன்று நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற நிசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

அதன்படி 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 303 ஓட்டங்களைக் குவித்தது. ஆரம்ப வீரரான பிரன்டன் மக்கலம் 131 ஓட்டங்களை விளாசினார். இது அவரது 2ஆவது சதமாகும்.

ஏனைய வீரர்களில் மார்ட்டின் குப்தில் (62), அணிதத்தலைவர் விற்றோரி (30), ஜேக்கப் ஓரம் (33) ஆகியோரும் தமது பங்குக்குச் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்திச் சென்றனர்.

தொடர்ந்து களமிறங்கிய பாகிஸ்தான் அணியின் ஆரம்ப வீரர்களான சல்மான் பட் (59), கலித் லத்திப்(45) ஆகியோர் முதல் விக்கெட்டுக்காக 77 ஓட்டங்களைச் சேர்த்து ஓரளவு நல்ல ஆரம்பத்தைக் கொடுத்தனர். எனினும் பின்னர் வந்த வீரர்கள் சொதப்பினர்.

அணித்தலைவர் யூனிஸ்கான் (19), துணைத்தலைவர் அப்ரிடி (0), கம்ரன் அக்மல் (4) ஆகியோர் ஏமாற்றமளித்தனர்.

47.2 ஓவர்களில் 239 ஓட்டங்களுக்குள் சுருண்டது பாகிஸ்தான் அணி. இதன் மூலம் நியூஸிலாந்து 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை 1-1என்ற கணக்கில் சமனுக்குக்கொண்டு வந்தது.

இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒரு நாள் போட்டி இன்று நடக்கிறது.

## டெண்டுல்கருக்கு ஸ்ரீகாந்த் பாராட்டு

புதுடில்லி, நவ. 09

"ஆஸ்திரேலியாவுக்கு எதிராக ஹைதராபாத்தில் நடந்த 5ஆவது ஒருநாள் போட்டியில் டெண்டுல்கர் 175 ஓட்டங்களை விளாசியமை, சர்வதேச கிரிக்கெட்டில் மிகச் சிறந்த முதன்மையான இன்னிங்ஸ் எனக் கருதப்படும்'' என் இந்திய அணியின் முன்னாள் வீரரும், வீரர்கள் தேர்வுக்குழுத் தலைவருமான ஸ்ரீகாந்த் பாராட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

''அன்றையதினம் சச்சின் விளையாடிய விதம் சிறப்பாக இருந்தது. நீண்ட நாள்களுக்குப் பின்னர் மகத்தான ஒருநாள் இன்னிங்ஸைப் பார்க்க முடிந்தது.

1983 உலகக் கிண்ணத் தொடரில் சிம்பாவே அணிக்கு எதிராக கபில்தேவ் விளாசிய 175 ஓட்டங்களைப் பார்த்தபோது ஏற்பட்ட மகிழ்ச்சி உணர்வு, சச்சினின் இன்னிங்ஸைப் பார்த்தபோதும் எனக்கு ஏற்பட்டது'' - என்றார்.

# இலங்கைக்கு எதிரான தொடரில் இந்திய அணியில் சஹீர்கான்?



மும்பை, நவ.09

காயம் காரணமாக நீண்ட நாட்களாக ஓய்வில் இருந்த சஹீர்கான், இலங்கைஅணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இடம் பெறவுள்ளார்.

இந்திய அணியின் முன்னணி வேகப் பந்து வீச்சாளரான சஹீர்கான், சமீபத்தில் தென்னாபிரிக்காவில் நடந்த இரண்டாவது ஐ.பி.எல். தொடரின்போது தோளில் காயமடைந்தார். இந்தக் காயத்துடனே, இங்கிலாந்தில் நடந்த 'ருவென்ரி -20' தொடரில் பங்கேற்றார். அதன் பின்னர் மேற்கிந்தியத்தீவுகளுடனான தொடர், இலங்கை யில் நடந்த முத்தரப்புத் தொடர் மற்றும் 'சம்பியன்ஸ் கிண்ண'த் தொடருக்கான அணியிலிருந்து நீக்கப் பட்ட இவர், இந்த ஆண்டு முழுவதும் போட்டிகளில் பங் கேற்கமாட்டார் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், காயத்திலிருந்து வேகமாகக் குணமடைந் துள்ள சஹீர்கான், தற்போது இந்தியாவில் நடக்கும் உள்ளூர் போட்டித் தொடரான 'ரஞ்சிக் கிண்ண'த் தொடரில் மும் பை அணி சார்பாக 42 ஓவர்கள் பந்து வீசி, 152 ஓட்டங் களைக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதையடுத்து வரும் நவம்பர் மாதம் 16ஆம் திகதி ஆரம்பமாகும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டிக்கு தெரிவு செய்யப்படுவார் எனக் கூறப்படுகிறது.



இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நேற்று இந்தியா புறப்பட்டுச் சென்றது. இந்தியவுக்கு எதிராக மூன்று டெஸ்ட், இரண்டு 'ருவென்ரி-20' மற்றும் ஐந்து ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி விளையாடவுள்ளது. இந்தியாவுக்குச் செல்லமுன்னர் டிலான் சமரவீர, கௌசல் சில்வா, தரங்க பரணவிதாரண, திலகரட்ண டில்சான் ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்ட வேளை...

# பாக். பெஷாவரில் குண்டுத்தாக்குதல்: 10 பேர் பரிதாபப் பலி; 20 பேர் காயம்

இஸ்லாமாபாத், நவ. 09

''வடமேற்கு பாகிஸ்தான் நகரான பெஷாவரில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர். 20 பேர் காயமடைந்தனர். பெஷாவரில் சமீப மாதங்களாக அடுத்தடுத்து குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன'' என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

''பெஷாவர் நகரின் புறநகர்ப் பகுதியிலுள்ள கால்நடைச் சந்திக்கருகில் இக் குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதில் உள்ளூர் நகரபிதா அப்துல் மாலிக்கும் பலியானார். இவரை இலக்கு வைத்து இக்குண்டுத்தாக்குதல் நடத்தப் பட்டிருக்கலாம்'' என பொலிஸ் பேச்சாளர் ஒருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

''அப்துல் மாலிக், மட்னி கிராமப்புறத்தில் அமைந்துள்ள நகரமொன்றின் பிதா ஆவார். தீவிரவாதிகளைக் கடுமையாக விமர்சித்து இவர் உரையாற்றி வந்துள்ளார். இவரது கிராமம் தலிபான் தீவிரவாதிகளும், அல்-குவைதா தீவிரவாதிகளும் முனைப்புடன் செயற்படும் பகுதிகளுக் கண்மையில் அமைந்துள்ளது. அப்பகுதிகளில் ஆதிக்குடிவாசிகளே அதிகளவில் வசிக்கிறார்கள்'' என்றும் அவர் விவரித்தார்.

''மக்கள் நடமாட்ட மிகுந்த கால்நடைச் சந்தையை ஒட்டிய பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இக்குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இதில் நகரபிதா அப்துல் மாலிக் பலத்த காயங்களுக்குள்ளானார். வைத்தியசாலையில் சேர்க்கப் பட்ட அவர், அங்கு மரணமானார். பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளோரில் பலர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர்'' என உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

''தென் வசீரிஸ்தான் பிராந்தியத்தில் தீவிரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் இராணுவம் அதிரடி நடவடிக்கைகளை எடுத்துவருகிறது. இதுவரை தலிபான் கட்டுப்பாட்டுக்குளிருந்த பல நகரங்கள் மீட்கப்பட்டுள்ளன. தீவிரவாதிகளுக்கும் படையினருக்குமிடையே மூண்டுள்ள சண்டைகளில் நூற்றுக்கணக்கான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளார்கள். இதனால் ஆத்திரமடைந்துள்ள தீவிரவாதிகள் பரவலாகக் குண்டுத்தாக்குதல்களில் ஈடுபட்டு வருகிறார்கள்'' என்றும் அந்த அதிகாரி விளக்கினார்.

## மெக்சிகோவில் புயல் ஆபத்து

கேன்கன், நவ. 09

மெக்சிகோவிலுள்ள கரீபியன் கடற் பகுதியில் 'ஐடா' என்ற சூறாவளி காற்று உருவாகியுள்ளது. இக்காற்று 110 கி.மீற்றர் வேகத்தில் வீச தொடங் கியுள்ளது. இது புயலாக மாறக்கூடிய சூழ்நிலை உள்ளது என அமெரிக்கத் தேசியப் புயல் மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது கடற்கரை நகரமான கேன்களில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. எனவே, மீனவர்களும், சுற்றுலாப் பயணிகளும் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடப் பட்டுள்ளது.

இது புயலாக மாறும் பட்சத்தில் மெக்சிகோவுக்கும் கியூபாவுக்கும் நகரும் ஆபத்துள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அந்தமானையும் தமக்குச் சொந்தமென்பதா? இலங்கையின் மண்ணாசைக்கு முடிவுகட்டுக!

## கச்சதீவை உடன் மீட்க கோருகிறார் ராமதாஸ்

சென்னை, நவ. 9

இந்தியாவுக்குச் சொந்தமான அந்தமான் தீவுகள் இலங்கைக்கே சொந்தம் என்றும் அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம அறிவித்திருக் கிறார்.

இலங்கையின் இந்த மண் ஆசைக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு ஒரே வழி, இலங்கைக்கு தவறாக தாரை வார்க்கப்பட்டுள்ள கச்ச தீவை மீட்டு தமிழகத்தோடு இணைக்க வேண்டும். - இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன் தினம் சனிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தியாவுக்குச் சொந்தமான அந்த மான் தீவு, இலங்கையின் கடல் எல்லைப் பகுதிக்குள் வருகிறது என்றும், ஆகவே அந்தமான் தீவுகளும் இலங்கைக்கே சொந்தம் என்றும் அந்த நாட்டின் நாடாளு மன்றத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லகமா அறி வித்திருக்கிறார். அந்தமான் தீவை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது எனவும், இதுதொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை ஆணையத்தில் முறையீடு செய்யப் பட்டிருக்கிறது எனவும் இலங்கை அமைச் சர் தெரிவித்திருக்கிறார்.

அந்தமான் தீவை மீட்பது குறித்து இந்திய அரசுடன் விரைவிலேயே பேச்சு நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது எனவும் அவர் கூறினார் என கொழும்பிலிருந்து வெளிவரும் நாளேடுகளிலும், தமிழ கத்தில் சில நாளேடுகளிலும் செய்தி வெளிவந்திருக்கிறது.

இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. வங்காளவிரிகுடாவில் தமிழகத் திற்குச் சொந்தமாக இருந்த கச்சதீவை 1974 இல் இலங்கைக்கு இந்தியா தாரை வார்த்தது. தமிழகத்தின் எதிர்ப்பையும் மதிக்காமல் இந்திய அரசு இலங்கையுடன் தன்னிச்சையாகச் செய்து கொண்ட ஒப்பந் தங்களின் விளைவுகளை தமிழகம் இன்று சந்தித்து வருகிறது. தமிழக மீனவர்கள் நாள்தோறும் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு வருகிறார்கள்.

கச்சத்தீவை இந்திய அரசு, இலங்கைக்கு மிகத் தாராளமாக விட்டுக் கொடுத்ததன் காரணமாகவே இன்றைக்கு அந்தமான் தீவுகளும் தங்களுக்கே சொந்தம் என்று இலங்கை மார்தட்டுகிறது. இதுபோதா தென்று இலங்கையில் சீனா புதிதாக கால் பதித்துள்ள நிலை மையும், இலங் கைக்கு முன் எப் போதும் இல்லாத துணிச்சலைக் கொடுத் திருக் கிறது.

போகிறபோக்கைப் பார்த்தால் இராம நாதபுரம் மன்னருக்குச் சொந்தமாக இருந்த கச்சதீவு இப்போது, தங்களிடம் இருக் கிறது என்பதால் அவர் ஆண்ட பகுதி களும் தங்களுக்கே சொந்தம் என்று உரிமை கொண்டா டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.



இலங்கை யின் இந்த மண் ஆசைக்கு உடன டியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு ஒரே வழி, இலங்கைக்கு தவறாக தாரை வார்க்கப்பட்டுள்ள கச்சதீவை மீட்டு தமிழகத்தோடு இணைக்க வேண்டும். - என்று உள்ளது.

## பெண் சிசுக்களை அழித்தால் சமூக குற்றம் அதிகரிக்கும்
## பிரதிபா பட்டீல் எச்சரிக்கை

மதுரா, நவ. 09

கருவிலேயே பெண் சிசுக்கள் அழிக்கப் படுவதைத் தடுத்து நிறுத்தாவிட்டால், எதிர் காலத்தில் சமூகக் குற்றங்கள் மலிந்து விடும் - என்று ஜனாதிபதி பிரதிபா எச்சரித்தார்.

ஸ்வாமி விர்ஜானந்த மகரிஷியின் 150 ஆவது பிறந்தநாள் விழா, டில்லியை அடுத்த மதுராவில் நடந்தது. விழாவில் பிரதிபா பட்டீல் பேசியவை வருமாறு -

கருவில் இருக்கும் சிசு ஆணா? பெண் ணா? என்று பரிசோதனை செய்து தெரிந்து கொள்ள தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனா லும் இந்தச் சோதனை இன்னமும் சில இடங் களில் தொடர்வது வேதனை.

இந்த நிலை தொடர்ந்தால், பெண் குழந் தைகளின் பிறப்பு விகிதாசாரம் வெகுவாக குறைந்து விடும். ஆண்பெண் விகிதாசாரத் தில் பலத்த வித்தியாசம் ஏற்படும். இது நாட் டுக்கு நல்லதல்ல. ஆண் குழந்தைகளுக்கு நிகராகப் பெண் குழந்தைகள் பிறக்காவிட் டால் எதிர்காலத்தில் சமூக குற்றங்கள் அதி கரித்துவிடும் - என்றார்.

## இந்தியச் செய்திகள்

# தமிழகம் முழுவதும் பருவமழை தீவிரம்; கடலோர மாவட்டங்களில் புயல் அபாயம்!

சென்னை, நவ. 09

தமிழகம் முழுவதும் வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்துள்ளது. தென் மேற்கு வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தொடர்ந்து நீடிப் பதால், கடலோர மாவட்டங்களில் புயல் அபாயம் ஏற்பட்டுள்ளது. சூறைக் காற்று டன் பலத்த மழை பெய்யும் என்று வானி லை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

தமிழகத்தில் பெய்துவரும் வடகிழக் குப் பருவமழை, கடந்த சில தினங்களாக வலுவடைந்துள்ளது.

சென்னை நகரிலும், புறநகர் பகுதிகளி லும் அவ்வப்போது மழை பெய்து வந்த நிலையில் கடந்த வெள்ளி இரவு தொடங் கிய மழை நேற்றுமுன்தினம்வரை தொடர்ந்து கொட்டித் தீர்த்தது. இதனால் பல பகுதிகள் வெள்ளத்தில் மிதக்கின்றன. தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழ்ந்து உள்ளதால் மக்களின் இயல்பு வாழ்க்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

சென்னை முதல் குமரி வரை பகல், இரவு என்றில்லாமல் மழை வெளுத்து வாங்குகிறது. இதனால், மாநிலம் முழு வதும் உள்ள ஏரி, குளம், அணைகள் உள்ளிட்ட அனைத்து நீர்நிலைகளும் மள, மளவென நிரம்பி வருகிறது.

தொடர்ச்சியாக கனமழை பெய்து வருவதால், காவிரி டெல்டா மாவட்டங் களில் விவசாய நிலங்களில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. கால்நடைகள் உயிரிழப் பும் அதிகரித்துள்ளது. இதற்கிடையே, மழை காரணமாக உயிரிழந்தோரின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்துள்ளது.

மயிலாடுதுறையில் கனமழையால், சிறைச்சாலையின் மதில்சுவர் நேற்றுமுன் தினம் மாலை இடிந்து விழுந்தது.



மழையால் ஏற்படக் கூடிய பாதிப் புகளை கண்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு, தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. சென்னை நகரில் இடைவிடாமல் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால், நகரின் தாழ்வான பகுதிகள் வெள்ளத்தில் சிக்கித் தத்தளித்து வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, சென்னை மாநகராட்சி நேற்றுமுன்தினம் உணவுப் பொட்டலங்களை வழங்கியது. துணை முதல்வர் ஸ்டாலின், நகரின் பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று மழை பாதிப்புகளை பார்வையிட்டார்.

இதற்கிடையே, மாநிலம் முழுவதும் பருவமழை மேலும் தீவிரமடைந்துள்ளது. தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து நீடிப்பதால், கடலோர மாவட்டங்களில் புயல் அபாயம் ஏற்பட் டுள்ளது. தமிழகம் மற்றும் புதுச்சேரியில் பலத்த காற்றுடன், கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை மையம் எச்சரித்துள்ளது.

## இலங்கை மீனவர் 10 பேர் விடுதலை

இராயபுரம், நவ. 09

இந்தியக் கடலோரக் காவல் படையால் கைதுசெய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேர் நேற்றுமுன்தினம் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் நேற்று இலங்கை செல்லவிருந்தனர்.

கடந்த மாதம் இந்தியக் கடல் பகுதிக் குள், 3 படகுகளில் இலங்கை மீனவர்கள் 10 பேர், மீன்பிடித்தனர். அவர்களை இந் தியக் கடலோரக் காவல் படையினர் கைது செய்து சென்னைக்குக் கொண்டு வந்து பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் 10 பேரும் நீதிமன்றில் ஆஜர்ப் படுத்தப்பட்டு, புழல் சிறையில் அடைக் கப்பட்டனர்.

இந்நிலையில் அவர்கள் அனைவரை யும் விடுதலை செய்யும்படி தமிழக அரசு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து அவர்கள் விடுதலை செய்யப் பட்டனர். நேற்று 10 பேரும் தங்கள் படகு களில் இலங்கைக்கு செல்லவிருந்தனர்.

## திருச்செந்தூரில் மஹிந்தவின் சகோதரி பலத்த பாதுகாப்புடன் சிறப்பு யாகம்

திருச்செந்தூர், நவ. 09

திருச்செந்தூர் கோவிலில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோ தரி நிருபமா ராஜபக்ஷ சிறப்பு யாக வழி பாட்டில் ஈடுபட்டார்.

இதனால் யாகம் நடைபெறும் இடத் தைச் சுற்றி பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.

திருச்செந்தூரிலுள்ள ஹோட்டல் ஒன் றுக்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் சகோதரி நிருபமா ராஜபக்ஷ, அவருடைய கணவர் திருக்கு மரன் நடேசன் ஆகியோர் நேற்று முன்தினம் மதியம் வந்து தங்கினர்.

பின்னர் திருச்செந்தூர் கீழ்ரதவீதியில் கோட்டாறு செட்டிமடத்தில் அவர்களுக் காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு யாகத்தில் கலந்து கொண்டனர். இந்த யாகம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை யும் நடக்கவிருந்தது. இதில் கலந்து கொண்ட பின்னர் அவர்கள் மதியம் திருவனந்தபுரம் சென்று அங்கு இருந்து இலங்கை செல் கின்றனர் எனக் கூறப்பட்டிருந்தது.

அவர்கள் தங்கியிருந்த ஹோட்டலைச் சுற்றியும், யாகம் நடைபெறும் இடத்தை சுற்றியும் பலத்த பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டது.

## பா.ஜ.கவுக்கு புதிய தலைவர் தேர்வானதும் அத்வானி அரசியலில் இருந்து விலகுவார்

### ஆர்.எஸ்.எஸ். தலைவர் தகவல்

டில்லி, நவ. 09

பா.ஜ.கவுக்கு புதிய தலைவர் தேர்ந் தெடுக்கப்பட்டதும் அத்வானி அரசியலை விட்டு விலகுவார் - என்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் ராம் மாதவ் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் கூறியவை வருமாறு-

பா.ஜ.கட்சி தலைவர் ராஜ்நாத் சிங்கின் பதவிக் காலம் அடுத்த மாதம் (டிசெம்பர்) முடிகிறது. புதிய தலைவர் ஜனவரி மாதம் தேர்ந்து எடுக்கப்பட இருக்கிறார். அதற் கான வேலைகள் தொடங்கிவிட்டன. அந் தத் தேர்தலை முன்னின்று நடத்திய பின் னர் ஏற்கனவே முடிவு செய்தபடி அத் வானி அரசியலை விட்டு விலகுவார். அடுத்த ஆண்டு பெப்ரவரி அல்லது மார்ச் மாதத்தில் அவர் தனது எதிர்க்கட்சித் தலைவர் பதவி யையும் ராஜினாமாச் செய்வார்.

அத்வானி பதவி விலகுவது குறித்து தற்போது புதிதாக எதுவும் விவாதம் நடை பெறவில்லை - என்றார்.

இதற்கிடையே ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத் தொலைக்காட்சி ஒன் றுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வரு மாறு -

பா.ஜ.கட்சியின் புதிய தலைவர் டில் லிக்கு வெளியே இருந்து தேர்ந்து எடுக் கப்பட வேண்டும் என்று பா.ஜ.க. தலை வர்களிடம் கூறியுள்ளேன். மூத்த தலைவர் களான அருண் ஜெட்லி, சுஷ்மா சுவராஜ், வெங்கையா நாயுடு, ஆனந்த் குமார் ஆகி யோர் தலைவர் பதவிக்கான போட்டியில் இருக்க மாட்டார்கள்.

புதிய தலைவர் 60 வயதுக்குள் இருக்க வேண்டும் என்றும், சங்பரிவார் அமைப் புடன் தொடர்புடையவராக இருக்க வேண் டும் என்றும், அனைத்துத் தரப்பினரையும் அனுசரித்து செல்லக் கூடியவராகவும், திறமையானவராகவும் இருக்க வேண்டும் என்றும் ஏற்கனவே பா.ஜ.க. -ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் இடையே முடிவு செய்யப் பட்டு உள்ளது - என்றார்.

சுஷ்மா சுவராஜ் புதிய தலைவருக்கான போட்டியில் இல்லை என்று கூறப்பட்டா லும், அத்வானிக்குப் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை ஏற்க இருக்கும் அவர், கட்சித் [illegible] வைப்பார் என்றும் தகவல்கள் தெரிவிக் கின்றன.

## கேரள அரசின் புதிய அணைத் திட்டத்தை தமிழகம் ஏற்கவில்லை என்கிறார் கலைஞர்



சென்னை, நவ. 09

முல்லைப்பெரியாறு அணையருகே புதிய அணை கட்டுவதற்கு 1979 இல் தமிழகம் ஒப் புக்கொண்டது என கேரள முதல்வர் அச் சுதானந்தன் கூறியிருப் பது தவறான தக வல் - என்று தமிழக முதல்வர் கருணாநிதி கூறியுள் ளார்.

இதுதொடர்பாக அவர் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முல்லைப்பெரியாறு அணைக்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படையின் பாதுகாப்பு கேட்டு பிரதமருக்கு தமிழக அரசு விடுத்த வேண்டுகோள் குறித்து அச்சுதானந்தன் கண்டனம் தெவித்துள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அணை உடைந்தால் இந்தப் படையினர் தடுப்பார்களா என்று கேட்டிருக்கிறார். இந்த அணை இன்னும் பல நூறு ஆண்டுகளுக்கு உறுதியாக இருக்கும் என வல்லுநர்கள் கூறி யுள்ளனர்.

பிரதமர் மன்மோகன் சிங் ஆலோசனை [illegible] 19.12.2007 இல் டில்லியில் தமிழ்நாடு இல்லத்தில் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் முன்னிலையில் கேரள முதல்வர் அச்சுதானந்தனுடன் பேச்சு நடந்தது. அப்போது நீர் கசிவு பற்றி அவர் கூறினார்.

இரு மாநிலங்களையும் சாராத வல்லுநர் களைக் கொண்டு ஆய்வு செய்து, சரி செய்ய லாம் என்று நான் கூறிய யோசனையை பரிசீ லிப்பதாக அச்சுதானந்தன் கூறினார்.

நிலநடுக்கம் வந்தால் அதையும் தாங்கும் அளவுக்கு அணை பலப்படுத்தப்பட்டுள் ளது. தேவையில்லாமல் மக்களை பீதிக்கு உள் ளாக்கி, அரசியல் ஆதாயம் தேட அவர் முயல் கிறார் என்பதுதான் உண்மை.

இந்த விவகாரம் தொடர்பாக 1979இல் மத்திய அரசுடன் பேச்சு நடந்தபோது, புதி தாக மாற்று அணை கட்ட தமிழகம் ஒப்புக் கொண்டது என தவறான தக்வலை அச்சுதா னந்தன் கூறியுள்ளார் - என்றுள்ளது.

## ரயில் மோதுண்டு 5 ஊழியர்கள் பலி

ரயில் பாதை பராமரிப்பு ஆய்வாளர் மற்றும் 4 ஊழியர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது ஜனசதாப்தி எக்ஸ்பிரஸ் ரயில் மோதி உயி ரிழந்தனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ரயில்வே ஊழியர்கள் தண்டவாளத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இத னால் சில மணி நேரம் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

காஜியாபாத் - ஷாகிபாபாத் ரயில் நிலை யங்களுக்கு இடையில் பகல் 11.30 மணிக்கு இந்த விபத்து நிகழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை குடியமர்த்த எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை

## யாழ். முகமதிய பள்ளிவாசல் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், நவ.9

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கு இதுவரையும் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை அல்லது எம்மை மீளக்குடியர்த்தும் திட்டம் எதுவும் வகுக்கப்படவில்லையா எனக் கேள்வி எழுப்பினார் யாழ். முகமதிய பள்ளி வாசல் தலைவர் மு.தாஷிர்.

சமாதானப் பேரவைத்தலைவர் ஜெகான் பெரேரா, தென்னிலங்கை பத்திரிகையாளர் சகிதம் நேற்று யாழ். முகமதிய பள்ளி வாசலுக்கு விஜயம் செய்து மக்களது பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

இவ்விடயம் தொடர்பாக முகமதிய பள்ளிவாசல் தலைவரிடம் கருத்து கேட்ட போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு:-

முஸ்லிம் மக்கள் தமது சொந்த மண்ணில் குடியமரவே விரும்புகின்றனர். யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது முதன்மையான கோரிக்கை.

கடந்த கால யுத்த நிலைமையில் யாழ். நகரிலுள்ள எமது மக்களின் 4,500 வீடுகள் முழுமையாக அழிந்துள்ளன. இதன் காரணமாக தற்போது யாழ்ப்பாணத்தில் மீளக் குடியமர்ந்துள்ள 70 குடும்பங்களும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மீளக்குடியமர்ந்த மக்கள் வாழ்வதற்கு வாழ்விடங்கள் இல்லை. பள்ளிவாசல்களில் இரவைக் கழிக்க வேண்டியிருக்கிறது.

புத்தளத்தில் 600 வீடுகளைக் கட்டி கொடுக்க முடிந்தது என்றால் யாழ்ப்பாணத்தில் ஏன் முடியவில்லை ?

அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலம் 10 வீடுகளை நிர்மாணிப்பதற்கு சிறிய தொகை நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது போதுமானதாக இல்லை.

உள்நாட்டு, வெளிநாட்டு அமைச்சர்கள் பலர் யாழ்ப்பாணம் வருகின்றனர். ஆனால் அவர்கள் யாரும் எமது மக்களின் பிரச்சினையைக் கேட்பதற்கு முன்வருவதில்லை. இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாழ்.வந்த போதும் கூட அவர்களால் எம்மை சந்திக்க முடியவில்லை .

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எப்போதும் இங்கு வந்து எம்மை குடியமரலாம் என்று கூறுகின்றார். நாம் வந்து குடியமர்வதற்கு இங்கு எமது வீடுகள் அழிந்த நிலையில் உள்ளன.

மீள்குடியேற்ற அமைச்சர் ரிசாத் பதியுதீன் யாழ். வந்து எமது நிலைமையை பார்வையிட்டுச் சென்றார். எனினும் எமக்குத் தீர்வு கிடைக்கவில்லையே.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் மக்களை மீளக் குடியமர்த்தும் திட்டத்தை மேற்கொள்ள அரசியல் வாதிகள் விரும்பவில்லை என்ற உண்மை எமக்குப் புரிகிறது.

இவை மட்டுமன்றி மேலும் பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. ஏ-9 வீதியால் பயணிப்பதற்கும் பயண அனுமதி பெறுவதற்கும் நாம் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது.

தென்னிலங்கை வர்த்தகர்களுக்காகவா ஏ-9 வீதி திறக்கப்பட்டது. வட பகுதி மக்களும், வர்த்தகர்களும் அவ்வீதியைப் பயன்படுத்த முடியாதுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் சிங்கள வர்த்தகர்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. ஆனால் வடபகுதி மக்கள் வியாபார நடவடிக்கையில் இறங்குவதற்கு அனுமதி பெறுதல் எனும் நடைமுறை மூலம் தடை விதிக்கப்பட்டிக்கிறது.

மேற்படி விடயங்கள் சமாதானப் பேரவைத் தலைவர் ஜெகான் பெரேரா ஊடாக நாம் தென்னிலங்கை பத்திரிகையாளர்களுக்கு விளக்கியிருக்கிறோம்-என்றார். (1-14)

# கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனா கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அந்தப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முடிவுறாத காரணத்தால் மீளக் குடியேற்றப்படவில்லை. அவர்கள் வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற வேறு பகுதிகளுக்குச் சென்று வாழ்வதற்கும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் தற்போது வவுனியாவில் பருவமழை ஆரம்பித்திருக்கின்றமையைக் கருத்தில் கொண்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மக்கள் வவுனியாவில் உள்ள தமது உறவினர்களுடன் சென்று வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் நீண்டகாலத்திற்கு நிரந்தரமாக அவ்வாறு தங்கிவிடாமல். வன்னியில் கண்ணிவெடி அகற்றப்பட்டு மீள்குடியேற்றத்துக்கு அனுமதி வழங்கப்பட்டதும் தத்தமது சொந்த இடங்களில் குடியேற வேண்டும் என்று அவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

வவுனியா முகாம்களில் தங்கியிருந்தோரில் கடந்த சில வாரங்களில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றனர் என்றும் தொடர்ந்தும் நாளாந்தம் மக்கள் விடுவிக்கப்படுகின்றனர் என்றும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

சொந்த இடங்களில் குடியேறும் குடும்பங்களுக்கு வழங்கப்படும் 25ஆயிரம் ரூபா மீள்குடியமர்வு கொடுப்பனவு தற்காலிகமாக வேறு இடங்களில் குடியேறுபவர்களுக்கு வழங்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் உறவினர் வீடுகளில் தற்காலிகமாகத் தங்குபவர்கள் அங்கு தற்காலிகமாக வீடுகளை அமைப்பதற்குரிய மரங்கள், கிடுகுகள் போன்ற பொருள்களை செயலகத்திடம் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரிப் பிரதேசத்தில் சுமார் மூவாயிரம் குடும்பங்கள் விரைவில் குடியேற்றப்படவிருக்கின்றன என்றும், வவுனியா வடக்கில் முதற்கட்டமாக இரு கிராமங்களில் மீள்குடியமர்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் செயலக வட்டாரங்கள் இங்கு தெரிவித்தன. (அ-சி)

# அல்லைப்பிட்டி, மண்கும்பான் மக்களின் தேவைகளை அமைச்சர் டக்ளஸ் அவர்களுடன் ஆராய்ந்தார்

அல்லைப்பிட்டி மண்கும்பான் ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரில் நேற்று ஆராய்ந்தார்.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளரும் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான சந்திப்பொன்று நேற்றுக் காலை மண்கும்பான் வீரகத்தி விநாயகர் ஆலய மணி மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற மோதல்கள் காரணமாக அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களில் மீளக்குடியேறுவதற்கு என மண்கும்பான் பகுதிக்கு 51 குடும்பங்களைச் சேர்ந்த 167 பேரும், அல்லைப்பிட்டியில் மீளக்குடியேறுவ்தற்கு என 15 குடும்பங்களைச் சேர்ந்த 47 பொதுமக்களும் இனங்காணப்பட்டுள்ளனர். அந்த மக்களின் மீள்குடியேற்றப் பணிகளை நடைமுறைப் படுத்துவதற்கு என வேலணைப் பகுதி உதவி அரசாங்க அதிபர் மு. நந்தகோபால், அப்பகுதி கடற்படை உயர் அதிகாரிகள் குடி தண்ணீர் போக்குவரத்து மற்றும் அத்தியா வசிய சேவை விநியோகங்களுடன் சம்மந் தப்பட்ட அதிகாரிகளும் சமுகமளித்திருந்தனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தமது வீடுகளை மீளவும் திருத்தியமைப்பதற்கான ஏற்பாடாகத் தேவையான தகரம் மற்றும் மரங்களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றினை மக்களுக்கு விநியோகிப்பதற்குக் குறைந்த பட்சம் ஒரு வாரம் அல்லது 10 நாள்கள் தேவைப்படும் என்பதால் உடனடிக் குடியமர்விலுள்ள சிரமங்கள் குறித்தும் எடுத்துக் கூறினார்.

அப்பகுதி மக்களின் மீள்குடியமர்வை துரிதப்படுத்துவதற்கான முன்னேற்பாடாக இன்று காலை வேலணை மத்திய கல்லூரிக்கு அனைவரும் சமுகமளித்து பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் கடற்படை அதிகாரிகளிடம் தேவையான பதிவுகளை மேற்கொண்டு உதவுமாறும் அமைச்சர் அப்பகுதிப் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். மீள்குடியமரவுள்ள பெரும்பாலான குடும்பங்களின் பிள்ளைகள் யாழ். நகரிலுள்ள பாடசாலைகளுக்குச் செல்வதால் மீளக்குடியமர்ந்த பின்னர் பாடசாலைகளுக்குச் செல்வதற்கு வசதியாகத் தமது பகுதிக்கான பஸ் சேவையையும் ஏற்பாடு செய்து தருமாறு அமைச்சரிடம் மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். (1)

# அடுத்த வருடம் அரச பணியாளருக்கு சம்பளம் உயராது; கூறுபவர் ரணில்!

கொழும்பு, நவ.9

''சர்வதேச நாணய நிதியத்துக்கும் அரசுக் கும் இடையிலான உடன்படிக்கைக்கு அமைய அடுத்த வருடம் அரச பணியாளருக் கான வேதனம் உயர்த்தப்படமாட்டாது.''

- இவ்வாறு எதிர்க்கடசித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைத் தெரிவித்தார்.

இதன் போது கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு நாணய நிதியத்திடம் கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி கைச்சாத்திட்ட உடன்படிக்கைக்கு அமைய அடுத்த வருடம் வரி அதிகரிக்கப்படும், செலவீனங்கள் குறைக்கப்படும், ஆனால் சம்பளங்கள் அதிகரிக்கப்பட மாட்டாது.

எனவே அரச பணியாளர்கள் எவரும் அடுத்த வருடம் தமது சம்பளம் உயர்த்தப் படும் என்ற எதிர்பார்ப்பை வளர்த்துக் கொள்ள வேண்டாம்.

அத்துடன் இந்த உடன்படிக்கைக்கு அமைய அடுத்த வருடம் வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கையை 10 லட்சமாக அதிகரிக்க வேண்டிய நிலை உள்ளது. ஆகவே தற்போது மூன்று இலட்சமாக காணப்படும் வரி செலுத்துபவர்களின் எண்ணிக்கை 10 லட்சமாக அதிகரிக்கப் படுமேயானால் அதில் குறைந்தது 3 லட்சம் பேராவது அரச பணியாளர்களாக இருப்பர். இந்த நிலையில் எதிர்வரும் ஆண்டின் முதல் 4 மாதங்களில் இந்த ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் செலவிடப்பட்ட தொகையில் மூன்றில் ஒரு வீதமே செலவிடப்படவுள்ளது - என்றார்.

# வடக்கில் பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இயக்கம் மீண்டும் புத்துயிர் பெறக்கூடிய ஆபத்துக் காணப்படுவதால், இலங்கை இராணுவத்தினர் அந்த ஆபத்தை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் எப்போதும் தயார் நிலையிலேயே இருப்பார்கள் என்றும் இந்நிலையில் தமிழர் பிரதேசங்களிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் அகற்றப்படவே மாட்டா என்றும் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நேற்று ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புலிகளின் கதை முடிந்துவிட்டது. ஆனால் அவர்களின் தற்கொலைக் குண்டுதாரிகள் இன்னமும் கொழும்பில் இருக்கின்றார்கள். நாம் அவர்கள் குறித்து மிகவும் விழிப்பாக இருக்கவேண்டியுள்ளது. நாம் புலிகளால் அநேக கஷ்டங்களை அனுபவித்துள்ளோம். எனவே அந்தக்கஷ்டங்கள் இனிமேலும் தொடர்வதற்கு அனுமதிக்க முடியாது.

### பலமான நிலையில் புலம் பெயர் தமிழர்கள்

ஆனால் புலி ஆதரவுக் கொள்கையுடன் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தமிழர்கள் மிகவும் பலமான நிலையில் உள்ளார்கள். வெளிநாடுகளைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள் எமக்குப் பெரிய அளவில் ஆதரவாகவோ, உதவியாகவோ இல்லை. எது எப்படி இருப்பினும் வெளிநாடுகளின் குறிப்பிடத்தக்க அளவு தலையீடு இல்லாமல் புலிகளால் மீண்டும் புத்துயிர் பெறவே முடியாது.

இலங்கையில் புலிகளுடனான யுத்தத்தின் போது 1983 இற்கும் 2009 இற்கும் இடைப்பட்ட கால கட்டத்தில் சுமார் 90 ஆயிரம் பொதுமக்கள் உயிரிழந்துள்ளார்கள்.

### சமஷ்டி இல்லை

இலங்கை அரசு சிறுபான்மை இன மக்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கத் தயாராகவே இருந்தது. அதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது. ஆனால் சமஷ்டி முறையிலான தீர்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில், சமஷ்டி முறையிலான தீர்வு இலங்கையில் பிரிவினைவாதத்துக்கு சட்ட அந்தஸ்தைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய ஆபத்து ஒன்று நிலவுகிறது.

### மேலைத்தேய நாடுகளின் அழுத்தம்

அரசினால் நடத்தப்படும் நலன்புரி முகாம்களில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் இலங்கை அரசு பாரதூரமான அழுத்தங்களை வெளிநாடுகளிலிருந்து எதிர்கொள்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக மேலைத்தேய நாடுகளின் அழுத்தம் மிகவும் கூடுதலாக உள்ளது. ஆனால் இந்தியா, பாகிஸ்தான், சீனா, எகிப்து, கியூபா, பிரேஸில் ஆகிய நாடுகள் இலங்கையின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் புரிந்து வைத்துள்ளன. மேற்படி நாடுகள் அகதிகளின் நிலை மற்றும் அகதிகளின் புனர்வாழ்வு, அதிகாரப் பகிர்வு மூலமான அரசியற் தீர்வு விடயத்தில் எம்மைக் கேள்வி கேட்[illegible]. ஆனால் எமது அழுத்தங்க[illegible]வில்லை.

எதிர்வரும் ஜனவரி மாத இறுதிப்பகுதிக்குள் முகாம்களிலுள்ள அகதிகளின் எண்ணிக்கை 40 ஆயிரத்துக்கும் 50 ஆயிரத்துக்கும் இடையில் குறைக்கப்படும். இந்தத் தமிழ் அகதிகளுக்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் பாதுகாப்பு விடயங்கள், நிலக்கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகள், அகற்றுவதிலுள்ள தாமதங்கள், யுத்தத்தால் வடக்கு, கிழக்கில் அழிந்த பிரதேசங்களை மீளக் கட்டியெழுப்புவதில் உள்ள தாமதங்கள் ஆகியன எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆனால் நாம் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை அதிரடியாக மேற்கொண்டு வருகிறோம்.

இந்த மீள்குடியேற்ற நடவடிக்கைகளில் நாம் தற்போது வெற்றியடைந்து வருகிறோம் என்று உணர்கிறோம். ஆனால் அகதிகளுக்கான மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் பங்குபற்ற அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அனுமதி இல்லை. இதை நாம் நிதியுதவி வழங்கும் நாடுகளுக்கு குறிப்பாக மேலைத்தேய நாடுகளுக்குத் தெளிவாகவே சொல்லியுள்ளோம். (அ-சி)

# மரண அறிவித்தல்

## திருமதி சுந்தரம் ஆறுப்பிள்ளை

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் ஆறுப்பிள்ளை நேற்று (08.11.2009) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர் முத்தர் ஆறுப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்களான சின்னட்டியார் - முத்துப்பிள்ளையின் மகனும் அமரர்களான சின்னம்மா, கந்தையா, தம்பிராசா ஆகியோரின் சகோதரியும் சிவபாதம் (இளைப்பாறிய உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), திருநாவுக்கரசு (இளைப்பாறிய உத்தியோகத்தர், மக்கள் வங்கி), சுந்தரமூர்த்தி (இளைப்பாறிய உத்தியோகத்தர், SLT), ஞானசம்மந்தர் (இளைப்பாறிய உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்), கோகிலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வராணி, யோகேஸ்வரி, கலாவதி, வசந்தி மற்றும் விமலேஸ்வரன் (ராசா டீசல்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் பகீரதன் மற்றும் இரவிவர்மன், சிவதர்சினி ரமேஸ், செல்வதர்சினி, பிரியதர்சினி, சுகன்யா, தாரணி, கிரீசன், ஆரணி, கிரிசாந்தன், கீர்த்தனா, பவித்திரா, அனுஷன், ரிஷிகேசன், யதுகுலன், பவறூபா, சிவறூபா, நாகதேவா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருநாளனின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2009) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை உசத்தியோடை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை மேற்கு, சுன்னாகம்.* T.P.:021 321 2697 தகவல்:குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க ஜே.வி.பி. பகீரதப் பிரயத்தனத்தை முன்னெடுக்கும்

## கட்சியின் செயலர் ரில்வின் சில்வா சொல்கிறார்

கொழும்பு, நவ. 08

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனா திபதி முறைமை இல்லாதொழிக்கின்ற நோக்கம் ஜனாதிபதி மஹிந்தவுக்கு இல்லை யென்றால் அவர் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த வேண்டும் - என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஜே.வி.பி. நேற்று கோரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சவால் விடும் தொனியில் இவ்வேண் டுகோளை விடுத்துள்ளார்.

அவர் பொலவத்தையில் அமைந்துள்ள ஜே.வி.பியின் காரியாலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதாக வாக்குறுதி வழங்கியே - அவ்வாறு 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜே.வி.பியுடன் ஒப்பந்தம் மேற்கொண்டே - மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி பதவிக்கு வந்தார். அவரின் முதலாவது ஜனாதிபதிக் காலம் நிறைவடைவதற்குள் ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பது என்று அவ்வொப்பந்தத்தில் கையொப்பமிட்டுள்ளார். ஆனால் அவர் நிறைவேற்றதிகார முறைமையை இல்லாதொழிக்க எந்த நடவடிக்கையுமே எடுக்கவில்லை.

நிறைவேற்றதிகார முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று இலங்கையில் உள்ள அநேக கட்சிகள் கொள்கை அடிப்படையில் குரல் கொடுத்து வருகின்றன. எனவே நாடாளுமன்றத்தில் ஊடக அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமற் செய்வது சத்தியம்.

எதிர்வரும் இரு வருடங்களுக்கு இடையில் நிறைவேற்று அதிகாரமுறையை இல்லாமற் செய்வாரென ஜனாதிபதி பகிரங்கமாக மக்களுக்கு அறிவிக்க வேண்டும். அல்லது உடனடியாக ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். நாங்கள் நிறைவேற்றதிகார முறைமையை இல்லாமற் செய்யக்கூடிய வேட்பாளரைத் தேர்தலில் நிறுத்தி அவர் மூலம் மஹிந்த ராஜபக்ஷவை மண்கவ்வ வைப்போம்.

நாங்கள் மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சிக்குக் கொண்டுவர எவ்வளவுக்கு பாடுபட்டோமோ அதேயளவு தற்போது அவரை ஆட்சியிலிருந்து நீக்குவதற்கும் அதேயளவு பகீரதப் பிரயத்தனங்கள் செய்வோம். அது தற்போது எமது முக்கிய கடமையாக உள்ளது. மக்களின் உரிமைகளுடன் விளையாட மஹிந்தவுக்கு எந்த உரிமையும் இல்லை. - என்றார்.

# போலி வெளிநாட்டு முகவர் நிலையங்களை தேடி வேலைவாய்ப்புப் பணியகம் வலைவிரிப்பு

கொழும்பு, நவ.08

சட்டவிரோதமாக இயங்கிவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களைக் கண்டுபிடிப்பதற்கான சுற்றிவளைப்புகள் நாடளாவிய ரீதியில் மேற்கொண்டுள்ளது - என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மாத்தளை மற்றும் வத்தளை ஆகிய பகுதிகளில் சமீபத்தில் இவ்வாறு செயற்பட்ட போலி முகவர் நிலையங்களே சுற்றிவளைக்கப்பட்டது. அங்கிருந்த சிலர் இதன்போது கைது செய்யப்பட்டனர் என பணியகத்தின் தலைவர் கிங்ஸிலி ரணவத்த தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் என தெரிவித்த அவர் நடைமுறையில் உள்ள சட்டத்துக்கு அமைய 7 ஆண்டு கால சிறைத் தண்டனையை இவர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடியும் எனவும் கூறினார். (சி)

# ஈழத்தமிழர் மீள்குடியமர்வுக்கு இந்திய அரசு கூடுதல் உதவி

கொழும்பு, நவ. 09

இலங்கையில் முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள தமிழர்களை சொந்த ஊர்களில் குடியமர்த்துவதற்காக கூடுதல் உதவி அளிக்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது - என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது.

அரசு முகாம்களில் இருந்து தங்களது சொந்த ஊர்களுக்குத் திரும்பும் தமிழர்கள் கூடாரம் அமைப்பதற்காக ரூபா 13 கோடிக்கு நவீன அட்டைகளை அனுப்ப இந்திய அரசு தீர்மானித்துள்ளது என்றும் தூதரகம் தகவல் வெளியிட்டுள்ளது.

## சட்ட விரோத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேவேளை, இலங்கையை மீளக்கட்டியெழுப்புகின்றமை குறித்தும் இச்சந்திப்பின்போது அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் உரையாடுவார் என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது அவுஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

## அதிக மழை ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதான பாதையில் போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

எதிர்வரும் நாள்களிலும் இந்த நிலைமையே காணப்படும் என எதிர்பார்க்கப்படும் நிலையில் அங்கு வாகனச் சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பீடிக்கப்பட்டார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்களில் 115 பேர் இலங்கையில் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-சி)

## ஆஸி. அகதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் ஆஸ்திரேலியாவின் 'சனல் - 10' தொலைக்காட்சிச் சேவைக்கு நேற்று வழங்கிய பேட்டியிலேயே திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்களில் குற்றவாளிகள் இருந்தால் நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

அவர் இது குறித்துத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

ஆஸ்திரேலியாவில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் இந்த இலங்கையர்கள் சிறந்த எதிர்கால வாழ்க்கையைப் பெறுவதற்காகவே ஆஸ்திரேலியா வர முயற்சிக்கின்றனர். இவர்களில் அநேகருடைய உறவினர்களும், நண்பர்களும் ஏற்கனவே ஆஸ்திரேலியாவில் இருக்கின்றனர். அவர்களுடன் இணைவதற்காகவே இந்த இலங்கையர்கள் ஆஸ்திரேலியா வர விரும்புகின்றனர். நாட்டை விட்டு வெளியேறுவதற்கு இலங்கைப் பிரஜைகள் உள்நாட்டு யுத்தத்தை ஒரு சாட்டாகப் பயன்படுத்துகின்றனர். இலங்கையின் யுத்தத்துக்குப் பிந்திய சூழ்நிலையை ஆஸ்திரேலியாவில் அரசியற் தஞ்சம் பெறுவதற்கு ஒரு சாட்டாகவும் பயன்படுத்துகின்றனர்.

இந்தோனேஷியக் கடலில் ஆஸ்திரேலியாவுக்குச் சொந்தமான அந்தக் கப்பலிலுள்ள இலங்கையர்கள் 78 பேரையும் ஆஸ்திரேலியா திருப்பி அனுப்பினால் எமது அரசு நிச்சயம் அவர்களை ஏற்றுக்கொள்ளும். ஆனால் அவர்களில் யாரேனும் குற்றவாளிகள் காணப்பட்டால் அக்குற்றவாளிகள் சட்ட நடவடிக்கைகளை நிச்சயம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

இந்த 78 பேரில் அநேகமானவர்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பியோடி வந்தவர்கள் என்றே எமது அரசு நம்புகின்றது.

எனவே, அவர்கள் கட்டாயம் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். ஆனால் எந்தக் குற்றங்களையும் புரியாத அப்பாவிகளாக இருப்பவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் நாட்டில் இராது. அவர்கள் இலங்கையில் இயல்பு வாழ்க்கையைவாழமுடியும்" - என்றார்.

# ஜெயராஜின் மனைவிக்கு சு.க. அமைப்பாளர் பதவி

கொழும்பு, நவ.09

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கட்டான தேர்தல் தொகுதியின் பிரதான அமைப்பாளராக முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் மனைவி வைத்திய கலாநிதி சுதர்சனி பெர்னாண்டோ புள்ளே இன்று பதவியேற்கின்றார்.

அவர் பதவியேற்ற பிற்பாடு கம்பஹா மாவட்டம் வெலிவேரியவில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் பெர்னாண்டோபுள்ளேயின் சிலைக்கு முதலில் அஞ்சலி செலுத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் வெலிவேரியாவில் கடந்த வருடம் பெர்னாண்டோபுள்ளே உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-சி)

## கே.பி. சித்திரவதை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்மநாதன் பனாகொட முகாமில் வைத்து சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டார் என முன்னதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார இது தொடர்பாக கூறுகையில், குமரன் பத்மநாதன் பனாகொட முகாமில் தடுத்து வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

## புலி உறுப்பினர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சத்தில் விசேட பொலிஸ் அணியினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது புலி உறுப்பினர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் மெதிவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரு புலி உறுப்பினர்களிடமிருந்து சுமார் 7 கிலோகிராம் எடையுடைய கிளைமோர் குண்டுகள், 'றிமோட் கொன்றோல்' உட்பட ஏராளமான இராணுவத் தளபாடங்கள் மீட்கப்பட்டுள்ளன என்றார். இரு புலி உறுப்பினர்களிடமும் மேலதிக புலனாய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியாவில் வைத்து அங்குள்ள குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொலிஸாரால் முன்பு கைதுசெய்யப்பட்ட புலிச் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரின் பாதுகாப்பில் இருந்தபோது கடந்த வெள்ளிக்கிழமை கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார் என்று பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியாகியுள்ளது.


யாழ்.கோண்டாவில் சபரீச தேவஸ்தானம் விடுக்கும் அறிவித்தல்

எதிர்வரும் 17.11.2009 செவ்வாய்க்கிழமை அன்று சுவாமிமார்களுக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு (ஐயப்பன் விரதம்) ஆரம்பிக்கப்படவுள்ளது.

மாலை அணிய இருக்கும் சுவாமிமார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தொ.பே.இல. 021 222 7688, 0777110629

ஆலய குருசுவாமி
பிரம்மஸ்ரீ சி.அரிகரசுதசர்மா

(சி/56212)

கணக்கு பதிவு

அனைத்து வகையான வர்த்தக நிலையங்கள் மற்றும் பொது நிறுவனங்களுக்குமான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைத்தல் முறைமைகளுக்கு அமைவாக கணக்குப்பதிவுகள் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

தொடர்புகளுக்கு:
ஐய்ராம் பிறின்ரேஸ்
361, மணிக்கூண்டு வீதி, வெலிங்டன்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 0770 569771, 021 222 4410
Fax 021 223 4510

இப்போது விற்பனையாகிறது
சுடர் ஒளி
நவ. 05 - நவ. 11

யாழ்ப்பாணத்துக் காசு எங்கே போகிறது ?
நாட்டைக் காக்கும் போர் முடிந்து வீட்டைக்காக்கும் போர் ஆரம்பம்
உயிர்வலிக்கும் கணங்கள்
வன்னியில் தப்பியவர்களின் மன ரணங்களை வாசித்துப் பாருங்கள்!
ஈழத்தமிழ் அறிஞர்களும் கலைஞரின் செம்மொழி மாநாடும்
பட்டப்பகலில் நிகழ்ந்த கொடூரம் !
மற்றும் சிறுகதை, பித்தன் பதில்கள இளஞ்சுடர் ஆகிய வழமையான பல்சுவை அம்சங்கள்



உங்கள் உதயன் முகவரிடம் கேட்டு வாங்குங்கள்



YOGIS BEAUTY
The Academy of Beauty Therapy, Hair Dressing & Home Science

அழகுக்கலை வகுப்புகள் பல புதிய திருப்பங்களுடனும் சருமங்களுக்கேற்ற வித்தியாசமான மெசின்களின் உபயோகங்களுடனும் நவீன முறையில் மேல் நிலை மாற்றங்களுடன் அறிமுகமாகின்றது. (Advanced Cosmetology Course) பழைய புதிய மாணவர்கள் இதன் மூலம் அழகுக்கலை அறிவை நவீனப்படுத்திக்கொள்ள ஓர் அரிய சந்தர்ப்பம்.

Mrs.Yogini Shanmuganathan
Diploma in Aesthetics & Cosmetology (India)
Diploma in Advanced Bridal Make - Up Character Maked - up (India)
Diploma in Home Economics (India and SriLanka)

75,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.(நல்லூர் வீரமாகாளி அம்மன்கோயில் முன்பாக)

ஆரம்பம்: 22.11.2009
காலை 11 மணி

பயிற்சிகள் முடிவில் Advanced Cosmetology சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்புகொள்ளவும்.
கேக் ஐசிங் வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

T.P: 021 2222796, 0213210077, 0777164923,0718788814.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org